[illegible]
[illegible]
[illegible]

J111,2J5H,S
M81
11[illegible]

SHORT

# STORIES FROM SHAKESPEARE,

## IN TAMIL.

THE STORIES OF PRINCE ARTHUR, PERDITA, YOUNG MARCIUS, A FAIRY KING, POLYDORE AND CODWAL, MIRANDA, AND ISABEL.

---

ABRIDGED AND EDITED

BY

V. KRISHNAMACHARIAR.

**Madras:**

PUBLISHED BY

THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

---

1881.

*Price Two Annas.*—விலை அணா ௨.

சென்னைப் பாடசாலைப் புத்தகச்சங்கத்தார் விற்பனைசெய்யும்

## சிறுபுத்தகங்களின் பட்டி.

ஜகவினோதியின்

### விசேஷப் புதுப்பதிப்புகள்.

| | அணா | பை |
|---|---|---|
| ஆரணியமித்திரரும் சத்துருக்களும் | 0 | 1 |
| ஒரு ரூபாய் சொல்லிய தன் வரலாறு | 0 | 1 |
| நீராவியின் வல்லமையை முதலில் அறிந்த கதை | 0 | 1 |
| பொன்னினும் முயற்சி சிறந்தது | 0 | 1 |
| மரத்தின் பழம் ஏன் கீழே விழுகிறது? | 0 | 1 |
| இன்பத்தைத் துன்பம் விவாகஞ்செய்தது | 0 | 1 |
| இவ்வுலகத்திற்குமேல் என்ன இருக்கிறது? | 0 | 2 |
| ஒரு வியாபாரியின் கதை | 0 | 2 |
| ஜப்பான் தேசத்து முற்கால தற்கால நிலைமை | 0 | 2 |
| புலியினிடத்துச் செய்த சாகஸம் | 0 | 2 |
| பொன்னூல் கதை | 0 | 2 |
| இத்தேச வைத்தியவிஷயம் | 0 | 2 |
| செல்வத்தையும் வறுமையையும்பற்றிய கதை | 0 | 2 |
| சமுத்திரம் உப்பாயிருப்பதேன்? | 0 | 2 |
| பொருள்வரும் வழி | 0 | 2 |
| ஆசையும் கடமையும் முரணியது | 0 | 3 |
| நான் அது செய்யமாட்டேன் | 0 | 3 |
| தர்மமே ஜயம் | 0 | 3 |
| பெற்றோருக்கறிக்கை | 1 | 0 |
| மந்திரவீணை அல்லது மெய்மை பொய்மையைப் பற்றிய கதை | 1 | 0 |

# ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்.

23/4/81

தமிழ்நாட்டுச் சிறுவர்க்காக

வ. கிருஷ்ணமாசாரியர் அவர்கள்

சுருக்கி இயற்றிய,

ஆர்த்தர் என்னும் இளவரசன் கதை, பெர்டிட்டாவின் கதை,
மார்ஷஸ் என்பவன் கதை, மோகினிராஜன் கதை,
பாலிடோர்—காட்வல் என்னும் ராஜகுமாரர்கள்
கதை, மிராந்தாவின் கதை,
இஜபெல் கதை

199

இவைகள்

இதில் அடங்கியிருக்கின்றன.

சென்னை:

ராஜதானி புத்தகச் சங்கத்தாரால்
இ. க. அ. சங்கத்தாரது அச்சுக்கூடத்தில்
பதிக்கப்பட்டன.

௧௯௯௪.

# ஆர்த்தர் என்னும் இளவரசன் கதை.

ஷேக்ஸ்பியருடைய கிங் ஜான் என்னும் நாடகத்தில் ஓர் ஆட்டக்காரனாகிய ஆர்த்தர் என்னும் இளவரசன், முட்செடிகளின் நடுவே ரோசாப்பூ இருப்பதுபோலவும், காக்கைக்கூட்டத்தில் இருக்கும் அன்னப்பறவைபோலவும், சுற்றிலுமுள்ள எவரிலும் மிகச் சிறப்புற்றவனாக விளங்கினான். அவனொருவன்தவிர மற்றவர்களெல்லாம் தங்களால் இயன்றமட்டும் வருந்தித் தங்களுடைய நன்மையையே தேடுகிறவர்களாயிருந்தார்கள். அவர்களிடத்தில் சிறிதும் உண்மைகிடையாது; தங்கள் பிரயோசனத்தைக் கருதுவதன்றிப் பிறர்நன்மையைச் சிறிதும் அவர்கள் கருதுவதில்லை. ஆர்த்தரோ அப்படிப்பட்டவனன்று; அவனுக்குக் கடவுளிடத்தில் பக்தியும், ஜீவகோடிகளிடத்தில் காருணியமும் கருத்தும் அதிகம். இப்படி மற்றவர்களெல்லாம் கொடியர்களாயும் மோசக்காரர்களாயுமிருக்க, ஆர்த்தர்மாத்திரம் நீதியும் நல்லநினைவுமுடையவனாயிருந்தான்.

முதலாவது ரிச்சார்டு, ஜான் இவர்களுடைய சகோதரனான ஜியாப்பிரே என்பவனுடைய புத்திரன் ஆர்த்தர். ஜியாப்பிரே, ரிச்சார்டுக்கு இளையவன்; ஜானுக்கு மூத்தவன். ஆதலால் ரிச்சார்டு இறந்துபோனபின்பு ஜியாப்பிரே உயி

2200
6.9.33

ரோடு இருப்பானானால் அவனே பட்டத்துக்கு உரியவனாவான். அவன் ரிச்சார்டுக்கு முன்னமே இறந்துபோனான். ஆதலால் நியாயமாய்ப் பட்டத்துக்கு அதிகாரி அவனுடைய மகனான ஆர்த்தர். ரிச்சார்டு இறந்துபோனபோது ஆர்த்தர் தன் தாயான கான்ஸ்தென்ஸ் என்பவளோடு இங்கிலாந்தை விட்டுப் பிராஞ்சுதேசம் போயிருந்தான். இங்கிலாந்தில் அரசாட்சிசெய்யவேண்டுமென்று வெகுநாளாய் எதிர்பார்த்திருந்த ஜான், ஆர்த்தரில்லாத சமயங்கண்டு இதுதான் தருணமென்று தானே அரசனாவதற்கு முயன்று, ஆர்த்தர் மிகவும் சிறியவனாதலால் அரசாள்வதற்கேற்றவனல்லனென்று குடிகளுக்கெல்லாம் துர்ப்போதனைசெய்தான். அவனுடைய தாயான எலீனர் என்னும் ராணியும் இந்த மகனுடைய பக்ஷத்தில் சேர்ந்துகொண்டால்தான் தனக்கு நன்மையுண்டெனத் தெரிந்துகொண்டு, தகப்பனில்லாத துர்ப்பாக்கியனான தன் பேரப்பிள்ளையாகிய ஆர்த்தர் நியாயமாய்ப் பட்டத்துக்குரியவனாயிருக்க, அவனைச் சிறிதும் நினையாமல் அநாதரவுசெய்து ஜான்பக்ஷத்திலேயே சேர்ந்துகொண்டாள்.

ஆர்த்தர் பிறக்கே நன்மைநினைக்கிற சுபாவமுடையவனாதலால், இங்கிலாந்தில் தன் சிற்றப்பனான ஜான் அரசாள்வதும் அவனுக்குப் பூரண சம்மதமாகத்தானிருக்கும். ஆயினும் நியாயமாகக் கிடைக்கவேண்டிய அரசாட்சியைத் தன் மகன் அநியாயமாய் இழந்துபோகிறதா என்பதை நினைக்க ஆர்த்தரின் தாயான கான்ஸ்தென்ஸ் என்பவளுக்குச் சிறிதும் சகிக்கக்கூடவில்லை. அதனால் அவள் எப்படியாவது தன் மகன் அரசனாயிருக்கப் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொண்டு பிராஞ்சுதேசத்தரசனைத் தூண்டி, இங்கிலாந்தின் அரசாட்சியையும் அதற்குரிய சகல சாம்ராஜ்யங்களையும் அதற்கு நியாயபாத்தியஸ்தனான ஆர்த்தருக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று சொல்லி ஜானோடு வாதாடும்படி



சொன்னாள். அப்படியே பிராஞ்சுதேசத்தரசன் கேட்டனுப்பினதற்கு ஜான் எழுதியனுப்பிய உத்தரமாவது: "நான் கைப்பற்றிக்கொண்டதை ஒருபோதும் விடமாட்டேன்; வேண்டுமானால் சேனைகளைக் கூட்டிக்கொண்டு உடனே பிராஞ்சுதேசத்திற்கு வந்து ஆர்த்தருக்குத் துணையாயிருக்கும் அரசனோடு யுத்தம்செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று எழுதினான். அதுகேட்டுப் பிராஞ்சுதேசத்தரசனும் ஆஸ்திரியாதேசத்தரசனும் ஏகோபித்து ஆர்த்தருடைய பாத்தியதையை ஸ்தாபிக்கவேண்டுமென்று மனவுறுதிகொண்டு தங்கள் சேனைகளையெல்லாம் சேர்த்துப் படையெடுக்க நிச்சயித்தார்கள்.

அப்படியே பிராஞ்சுதேசத்துப் பிலிப் என்னும் அரசன் ஆர்த்தரையும் அவன் தாயான கான்ஸ்தென்ஸையும் சண்டைக்கு அழைத்துக்கொண்டுபோனான். போகையில் அவர்கள், அப்போது இங்கிலாந்து ராஜ்யத்தைச் சேர்ந்திருந்த மேன் என்னும் மாகாணத்தில், அங்கிர்ஸ்பட்டணத்திலே ஆஸ்திரியாதேசத்தரசனோடு கூடினார்கள். அங்கே பிராஞ்சுதேசத்தரசன் ஆர்த்தரை ஆஸ்திரியாதேசத்தரசனிடம் அழைத்துக்கொண்டுபோய், முன் அவ்வரசன் ரிச்சார்டு ராஜாவுக்குப் பகைவனாயிருந்ததும், அதனால் அவனுக்குக் கொடுமைசெய்ததும் இவ்விதமென்று பழைய கதையை எடுத்துச் சொல்லி, இப்போது அவர் அந்தப் பிழையைப் போக்கிக்கொள்வதற்காகவே, இங்கிலாந்துக்கு அரசனாகும்படி ஆர்த்தருக்குத் துணைசெய்ய வந்திருக்கிறாரென்று சொன்னான்.

பிராஞ்சுதேசத்தரசனும், ஆஸ்திரியாதேசத்தரசனும் அங்கிர்ஸ்பட்டணம் போய்ச் சேர்ந்ததும் சோதனுமாயிருக்கையில், இங்கிலாந்து அரசனான ஜானும் அவன் தாயான எலீனரும், இங்கிலாந்துதேசத்துப் படைகளோடு அவ்விடத்தில் வந்து இறங்கியிருப்பதாகச் செய்தி தெரிந்தது

அதைக்கேட்டுப் பிராஞ்சுதேசத்தாரெல்லாரும் ஜான் வெகு தீரனாயிருக்கிறானேயென்று திகிலடைந்தார்கள். ஆயினும் பிலிப்பும் ஆஸ்திரியாதேசத்தரசனும், என்னவருத்தப்பட்டாலும் துரோகமாய் ஆர்த்தரைக் கைவிடக்கூடாதென்று ஒரே தீர்மானமாயிருந்தார்கள்.

சீக்கிரத்திலேயே ஜான் தன்னுடைய சேனைகளோடு கண்ணெதிரே வந்துவிட்டான். அத்தருணத்தில் எப்படியாவது சமாதானம் பேசலாமென்று ஒரு ஆலோசனைச்சபை சேர்க்கப்பட்டது. அதில் மூன்று தேசத்துராஜாக்களும், ஆர்த்தரும், அவன் தாயார், பாட்டியார் இவர்களும் வந்து கூடினார்கள். அப்படிக் கூடிப்பேசும்போது பிராஞ்சுதேசத்தரசன், இங்கிலாந்து ராஜ்யத்திற்கு நியாயமான பாத்தியஸ்தன் ஆர்த்தரே ஆகையால், அந்த ராஜ்யத்தை ஜான் அவனுக்கு விட்டுவிடவேண்டியது அவசியமென்று வற்புறுத்திப்பேசினான். அதற்கு ஜான், இந்த விஷயத்தில் தலையிட்டுக்கொள்ள பிலிப்புக்கு யாதொரு சம்பந்தமுமில்லை; ஆதலால் எனக்கு ஒருவரும் புத்திசொல்லவேண்டாமென்ன, பிலிப்பு, ஆனால் அநியாயமாய் இங்கிலாந்தை அபகரித்துக்கொள்ளப் பார்க்கிறாயோ என்றான். அதைக் கேட்டவுடனே எலினர் மிகக் கோபங்கொண்டு முகஞ்சிவந்து உதடு துடிக்கத் துடிக்க, அநியாயமாய் அபகரித்துக்கொள்கிறவர் என்று நீர் யாரைச் சொல்லுகிறீர் என்றாள்.

அதற்குப் பிராஞ்சுதேசத்தரசன் உத்தாரஞ்சொல்ல வாயெடுப்பதற்குமுன்னமே கான்ஸ்டென்ஸ் எழுந்து, இதற்கு நான் விடைகொடுக்கிறேன், அநியாயமாய் அபகரிக்கின்றவர் உமது குமாரர்தாமென்று வெட்டவெளிச்சம் பட்டப்பகலாய்த் தெரிகிறதே; கைப்புண்ணுக்குக் கண்ணாடியேன் என்று சொன்னாள். அந்தப் பேச்சைக் கேட்கவே எலினருக்குக் கோபம் இன்னும் அதிகமாயிற்று. ஒன்றின்மே



லொன்றாய் அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் வாயில் வந்தபடியெல்லாம் திட்டி எவ்வளவு குரூரமாய்ப் பேசக்கூடுமோ அவ்வளவும் பேசத் தலைப்பட்டார்கள். அந்தக் கொடிய பேச்சுகளைக் கேட்க மனம்பொறாமல் ஆர்த்தர் கண்ணும் கண்ணீருமாய் எழுந்து தாயைப்பார்த்து, அம்மா என் அருமைத்தாயே, உனக்கேன் அணுவளவும் பொறுமையில்லை; அவள் பேசுவதென்ன கம்முடம்பிலே காய்ந்து தொங்குகிறதா? வாயை மூடு; இப்போதே என்னைப் பூமியில் அடக்கஞ்செய்துவிடுவார்களானால் எனக்கு மிக்க சந்தோஷமாயிருக்கும்; எனக்காக இப்படிப்பட்ட கலகங்களெல்லாம் உண்டாவதைப்பார்க்க நான் உரியவனல்லன் என்றான். இப்படிப்பட்ட கொடிய விரோதமும், கெட்ட பேச்சுகளும் தன்னைப்பற்றி உண்டாகி வளருவதைப்பார்க்க ஆர்த்தருக்குச் சிறிதும் மனம்பொறுக்கவில்லை. யார் என்ன சொல்லியும் அவர்களுடைய வாய்ச்சண்டைமட்டும் சிறிதும் ஓயவில்லை; அப்பட்டணத்துக் கோட்டைவாயிலண்டை ஒரு வாத்தியமுழக்கம் உண்டாகி அந்தச் சத்தத்தில் தங்கள் பேச்சுக்கேளாமற்போகிறவரையில் அவர்கள் அப்படியே வாதாடிக்கொண்டிருந்தார்கள்.

அந்த வாத்தியகோஷத்தைக் கேட்டுப் பட்டணத்தார் சிலர் அவ்விடத்திற்கு வந்தார்கள். பிலிப்பு, ஜான் இவ்விருவரும் அவர்களைக் கண்டு, நீங்கள் ஆர்த்தரை அரசனாக ஒப்புக்கொள்கிறீர்களா, ஜானை அரசனாக ஒப்புக்கொள்கிறீர்களாவென்று கேட்க, அவர்கள் எது எப்படியாகுமோவென்று பயந்து, நாங்கள் முதலில் ஒருவனையும் அரசனாகக்கொண்டு கோட்டைவாயிலைத் திறந்துவிடமாட்டோம்; ஆர்த்தரானாலும் சரி, ஜானானாலும் சரி, முதலில் இருவரும் சண்டைசெய்யவேண்டும்; அதில் எவர் வெற்றிபெறுகிறாரோ அவரையே நாங்கள் அரசனாக வைத்துக்கொள்வோம் என்றார்கள்.

அப்படியே சிறுசண்டையொன்று நடந்தது. அதில் ஒரு புறத்திலும் ஜயம் நிர்ணயமாய்த் தெரியவில்லை. அதனால் நானே ஜயித்தேன், நானே ஜயித்தேனென்று ஜான், பிலிப்பு இருவரும் சொல்லிக்கொண்டு, கோட்டைவாயிலைத்திறந்து தனக்குத்தான் பட்டணத்துக்குள் வழிவிடவேண்டுமென்று இருவரும் தனித்தனி நகரத்தாரை வற்புறுத்தினார்கள். அப்பட்டணத்தார் நடந்த யுத்தத்தையெல்லாம் பெரிய கோபுரத்துமேலிருந்து பார்த்திருந்து இருவரும் பின்வாங்கினதாகக் கண்டதனால், ஒருவரும் வெற்றிபெறவில்லையென்று சொல்லிக் கோட்டைவாயிலை நன்றாய் மூடிக்கொண்டு, ஜான் ஆர்த்தர் இருவரில் ஒருவருக்கும் கோட்டைவாயிற் கதவைத் திறக்கமாட்டோமென்றார்கள். அதைக்கேட்டு இரண்டு ராஜாக்களும் அதிக கோபங்கொண்டு இரண்டு சேனைகளையும் ஒன்றாய்ச்சேர்த்து, இருபுறத்திலும் பக்கத்துக்கு ஒருவராய்நின்று பட்டணத்தைத் தாக்கி இடித்துத் தரையோடு தரையாகத் தொம்சமாக்குவதே காரியமென்று தீர்மானித்தார்கள்.

ஆயினும் அப்பட்டணத்து ஜனங்கள் அதிக புத்திசாலிகள்; அவ்வளவுதூரம் வரும்படி பார்த்திரார்கள். அதனால் அவர்கள், ஆர்த்தர் மிகச் சிறுவனும் துணையில்லாதவனுமாதலால் அவனைத் தள்ளிவிடுவதனால் தங்களுக்கு ஒரு கெடுதியுமுண்டாகாதென்று அவனைமட்டும் நீக்கி, மற்றவர்களுக்கெல்லாம் நன்மையுண்டாகும்படி ஒரு ஏற்பாடுசெய்தார்கள். அதென்னவெனில், பிலிப்பின் மூத்தகுமாரனை லூயிசுக்கு ஜானுடைய அண்ணன்மகளான பிளாங்கு என்பவளைக் கலியாணஞ்செய்விக்கிறதென்றும், ஜானுக்குப் பிராஞ்சுதேசத்திலுள்ள நாடுகளையெல்லாம் அப்பெண்ணுக்குச் ஸ்திரீதனமாகக் கொடுத்துவிடவேண்டுமென்றும், அதற்குப் பதிலாகப் பிலிப்பு, ஜானையே இங்கிலாந்துக்கு நியாயமான



அரசனென்று சம்மதிப்பதுடன் ஆர்த்தரை அவன் சிற்றப்பன் கையில் ஒப்புவித்துவிடவேண்டுமென்றும் ஏற்பாடு செய்தார்கள். அதைக் கேட்டவுடனே பிராஞ்சுதேசத்தரசன், தன் தேசத்திலுள்ள அங்கிலேயருடைய ஆட்சியெல்லாம் பிராஞ்சுதுரைத்தனத்தைச் சேர்ந்துவிடுகிறதென்று சந்தோஷித்தான். எப்போதும் விரோதிகளை வைத்துக்கொண்டு அரசாள்வதைவிட, விரோதி ஒருவருமில்லாமல் இங்கிலாந்துக்கு அரசனாயிருப்பதும், அவ்வரசாட்சிக்கு முக்கிய பாத்தியஸ்தனான தன் தமையன் குமாரனைத் தன் வசத்தில் வைத்துக்கொள்வதுமே தனக்கு மிக்க நன்மையென்றெண்ணி ஜானும் வெகு சந்தோஷமடைந்தான். அதனால் அவ்விருவரும் தங்களுடைய லாபத்தையே முக்கியமாக நினைத்து அந்த உடன்படிக்கையை அங்கீகரித்தனர். அதன்படியே லூயிசுக்கும் பிளாங்குக்கும் அவ்விடத்திலேயே கலியாணம் நடந்தது.

இப்படி அந்த இரண்டு அரசர்களும் செய்துகொண்ட ஏற்பாட்டையும், அவர்களுடைய பேராசையால் தன் மகன் அடியோடு கெடுக்கப்பட்டதையும் கண்டு கான்ஸ்தென்சுக்கு அதிகமான கோபமுண்டாயிற்று. சிறியோனாயினும் சகலமும் தெரிந்த ஆர்த்தர்மட்டும் தனக்கு அரசனாகச் சிறிதும் விருப்பமில்லையென்றுசொல்லி அவள் கோபத்தைத் தணித்து உள்ளதைக்கொண்டு திருப்தியடைந்திருக்கும்படி அவளைப் பலவாறு வேண்டிக்கொண்டான். ஆர்த்தருக்கு முதலில் தன்னைத் தாயைவிட்டுப் பிரித்து இங்கிலாந்துக்குக் கொண்டுபோகப்போகிறார்களென்கிற செய்தி சிறிதும் தெரியாது. அந்தச் செய்தி தெரிந்தபோது அவன் மனம் தவித்து அழுத அழுகையை நாம் என்னென்று சொல்லலாம்! அப்போதும் அவன் தன் தாயை நினைத்[illegible] அவளுக்காகப் புலம்பினவனே[illegible]

பிளவனல்லன். ஐயோ, இச்செய்திகேட்டால் உடனே என் அன்னை உயிரை விட்டுவிடுவாளே! அவளுக்கு என்னிடத்திலிருக்கிற பிரீதி தன் பிராணனிடத்திலேகூடக் கிடையாதே! என்றுசொல்லி அழுதான். அவனுக்குத் தன் சுகத்தைவிடத் தாய்சுகத்தைத் தேடுவதே முக்கியமாயிருந்தது.

ஜான் தன் யோசனைப்படியே ஆர்த்தரை அபர்த்தன் என்னும் ஒரு வீரன்வசத்தில் ஒப்புவித்து, ஆர்த்தரை இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து சேர்க்கும்படி அவனோடு சொன்னபோது, இனி ஒருவர்கண்ணிலும் தென்படாமல் நீ இந்த ஆர்த்தரைக் காவல்செய்துவருவாயானால் உன்னை நான் ஒருபோதும் மறக்கமாட்டேனென்று வெளிப்படையாய் எச்சரிக்கையும் சொல்லியனுப்பினான். அந்த வீரனும் தான் தன் [illegible]யை மீறி நடப்பதில்லையென்று சொல்லிவிட்டுப் போயினான்.

அப்படியே அபர்த்தன் மிகவும் சிறுபிள்ளையான ஆர்த்தரை, தாய் மற்ற பந்துமித்திரர் அனைவரையும் விட்டுப் பிரித்து, வெகு தூரத்துக்கப்பால் இங்கிலாந்தில் சேர்த்து அங்கே நார்த்தம்டன் என்னும் பட்டணத்துக் கோட்டையில் கடுஞ்சிறை செய்துவிட்டான். ஆயினும் ஆர்த்தருடைய நற்குணத்தால் சிறைகாக்கும் அபர்த்தன்கூட அவனை நேசித்துவந்தான். அப்படியிருக்க ஒருநாள் காலையில் அபர்த்தன் ஆர்த்தரிருந்த சிறைச்சாலைக்கு வருகையில், அவன் மனங்கலங்கிக் கவலையுற்றிருக்கக்கண்டு ஆர்த்தர் அவனைப் பார்த்து, வந்தனமையா நீ விசனமுற்றிருப்பதாகக் காணப்படுகிறாயே, என்ன விசேஷமென்று கேட்டான்.

அதற்கு அபர்த்தன், ஆம், இதுவரையில் நான் சந்தோஷமாகத்தானிருந்தேனென, ஆர்த்தர், நானொருவன்தவிர மற்றெவரும் துக்கிக்கவேண்டுவதில்லையெனத் தோன்றுகிறது என்றான். [illegible] ஆர்த்தர் தான் காவலில் வைக்கப்



பட்ட தினம்வரையில் சிறிதும் துக்கப்பட்டதில்லையாதலால், யாவரும் தன்னைப்போலவேயென்று நினைத்து, அபர்த்தன் காவலிலில்லையாதலின் அவனேன் துக்கிக்கவேண்டுமென்று நினைத்தான். மேலும் அவன் அபர்த்தனைப்பார்த்துச் சொன்னதாவது: இப்போது என்னை இந்தக் காவலினின்றுமாத்திரம் நீக்கிவிட்டால் அதுவே எனக்குப் பரம சந்தோஷம். இந்தச் சிறைச்சாலையிலும் நான் சந்தோஷமாகத்தானிருப்பேன்; சிற்றப்பன் இன்னும் ஏதாவது தீங்கு செய்யக் கருதியிருக்கிறாரோவென்று மிகவும் அச்சமாயிருக்கிறது. இதில் நான் ஜியாப்பிரேக்கு மகனாய்ப்பிறந்த குற்றமோ? நான் உன்னுடைய மகனாய்ப் பிறவாமற்போனேனே! என்னிடத்தில் நீ மிகவும் அன்புவைத்திருக்கிறாய். அபர்த்தா, உனக்கு உடம்பு அனுகூலமில்லையோ? ஏன் இன்று உன் முகக்களை மாறியிருக்கிறது? உனக்கு இன்று சிறிது தேகசவுக்கியமில்லாமலிருந்தாலும் எனக்கு நன்மையே. இராத்திரியெல்லாம் உன் பக்கத்திலேயே உட்கார்ந்து நான் உனக்கு உபசாரணை செய்துகொண்டிருப்பேனல்லவா என்றான்.

அதைக்கேட்டு அபர்த்தன் கொஞ்சம் கடுமையாய், இதோ இந்தக் கடிதத்தைப் படித்துப்பார் என்று ஒரு கடிதத்தை ஆர்த்தர் கையிலே கொடுத்தான். ஆர்த்தர் அதைப் படிக்கையில், துக்கம் பொறுக்கமாட்டாமல் அபர்த்தனுக்கு மாலை மாலையாய்க் கண்ணீர்பெருகத் தலைப்பட்டது. அதனால் அவன் உடனே பின்புறமாய்த் திரும்பிக் கொண்டான்.

ஆர்த்தர் அந்தக் கடிதத்தைப் படித்து ஒன்றும் பேசாமல் நிற்கக்கண்டு அபர்த்தன் நீ அந்தக் கடிதத்தைப் படிக்கக்கூடவில்லையாவென்று கேட்க, ஆர்த்தர், [illegible]மையாய்ப் படிக்கக்கூடவில்லை; இருப்புக்க[illegible] பழுக்கக்

காய்ச்சியா நீ என் இரண்டு கண்களையும் கொளுத்திவிடப் போகிறாய் என்றான்.

ஆம், அவசியம் அப்படித்தான் செய்யப்போகிறேன் குழந்தாய் என்று அபர்த்தன் சொல்ல, ஆர்த்தர், அப்படி கூடச் செய்ய உனக்கு மனந்துணிகிறதா? நீ தலைநோய் வந்து தவிக்கும்போது நான் என் அருமையான பட்டாடையால் உன் தலையை இழுத்துக் கட்டி, நோய் இதமாயிருக்கும்படி இரண்டு கைகளாலும் மெல்லப் பிடித்தேனே! மேலும் அந்த நோவினால் உனக்குச் சிறிதும் வருத்தம் தோன்றவொட்டாமல் வேண்டிய உபசாரணைகளெல்லாம் செய்து உன்னை மனங்களிக்கச்செய்தேனே! அந்த உபசாரணைகளெல்லாம் மோசமென்று உனக்குத் தோன்றுமோ என்னவோ? என் போதாதகாலத்துக்கு ஒருவேளை அப்படி தோன்றினும் தோன்றும்; அதிருக்கட்டும்! கடவுளுடைய கட்டளையாயிருந்தாலும் நீ என் கண்களைக் கொளுத்தவேண்டுவதேன்? என் கண்ணைக்கொளுத்த உனக்கு மனம் வருகிறதா? இந்தக் கண் உன்னைக் கண்டு என்றைக்காவது சிறிதளவு சுளித்தாவதிருக்குமா? என்று மனவெறுப்பாய்ப் பேசினான்.

அப்படியே செய்வதாக வாக்குக்கொடுத்து வந்துவிட்டேன்; ஆதலால், இனி அதைத் தப்பாமல் செய்துதான் தீரவேண்டுமென்று அபர்த்தன் சொல்ல, ஆர்த்தர், அபர்த்தன் என் கண்ணைக் கெடுக்கக் காத்திருக்கிறானென்று கடவுள் வந்துசொன்னாலும் நான் அதை நம்பமாட்டேனே என்றான்.

அதைக்கேட்டு அபர்த்தன் அப்படியே பிரமித்து அசைவற்று நின்றுவிட்டான். அப்படியிருக்க, இரண்டுபேர் மிகவும் பயங்கரமாய்க் கையில் இருப்புச்சலாகைகளும் கடிதப் பட்டைகளும் எடுத்துக்கொண்டு அவ்விடம் வந்தார்கள்.



அந்தக் கொடியர்களைப் பார்த்தவுடனே மிகவும் நடுநடுங்கி ஆர்த்தர் இத்தருணத்தில் எனக்கு அபயம் கொடுக்க வேண்டுமையா, அபயம் கொடுக்கவேண்டுமையா என்று அபர்த்தனை வேண்டினான்.

அதைக் கேளாதவன்போலவே அபர்த்தன், அந்தச் சலாகையை என் கையில் கொடுத்துவிட்டு, கைகால்களை அசைக்கவொட்டாமல் இவனைப் பிடித்துக் கட்டு என்று அவ்விருவருள் ஒருவனைப் பார்த்துச்சொன்னான்.

அந்தக் கொடிய பேச்சைக்கேட்டு ஆர்த்தர், ஐயோ! நீர் ஏன் இப்படிக் கொடுமையாய்க் கடிந்துபேசுகிறீர்! நான் கைகால்களைச் சிறிதும் அசைக்கவில்லை; உளியிலே தலையை நுழைத்து உலக்கைக்குப் பயந்தால் முடியுமா? கற்பதுமை போல் அப்படியே நிற்கிறேன். என்னைக் கட்டாமலிருக்க வேண்டுகிறேன். மேலும் இம்மனிதர்களை அப்புறம்போகச் சொல்லும்; நீர் என்னைச் சித்திரவதைசெய்தாலும் எல்லாவற்றையும் வாயைத் திறவாமல் பொறுத்திருக்கிறேன்; இவர்களைமாத்திரம் உடனே அப்புறப்படுத்துமென்றான்.

அப்படியே அவ்வறையைவிட்டு வெளியே போம்படி அபர்த்தன் அம்மனிதர்களுக்குச் சொல்ல, இங்கே நடக்கப்போகிற கொடுஞ்செயலைக் கண்ணாலே பாராமல் அப்புறம் போவதே நலமென்று அவர்கள் சந்தோஷமாயே அவ்விடம்விட்டு வெளியே போனார்கள்.

அவர்கள் நீங்கிப்போனதும் அபர்த்தன் ஆர்த்தரைப் பார்த்து, பிள்ளாய், நேரமாகிறது; சித்தப்படுத்திக்கொண்டு வாவென்றான்.

இதற்குப் பரிகாரம் வேறொன்றுமில்லையோவென்று ஆர்த்தர் மிகப் பொறுமையுடன் மெதுவாய்க் கேட்க, அபர்த்தன் உன் கண்ணைக் கெடுப்பதைவிட வேறொரு பரிகாரமுமில்லை என்று கோபமாய் மிகக் கொடியன்போலப் பேசினான்.

இவ்வளவுநேரத்தில் ஆர்த்தருடைய கண்ணைக் கெடுக்கும்படி பழுக்கக் காய்ச்சிக்கொண்டுவந்த சலாகைகள் இல்லென்று ஆறிப்போயின. அப்போது செய்யத்துணிந்த கொடுஞ்செயலுக்கு அஞ்சி அக்கினிகூடச் சீக்கிரமே அந்தச் சலாகையைவிட்டு ஒதுங்கினதுபோலும்.

அப்போது ஆர்த்தர் சொன்னதாவது: இதோ பார்! இந்தப் பொருள்கள்கூடக் கடுஞ்செயல் செய்யத்துணியவில்லை; மிகக்கொடியதான தீ, கல்லினும் கடினமான இரும்பு இவைகளுக்குக் கூட உன்னைவிட இரக்கம் அதிகமாய் இருக்கின்றதே என்றான்.

ஆர்த்தர் என்னசொன்னாலும் அதைக் கேளாமல் வேண்டுமென்றே அபர்த்தன் இதுவரையில் தன் மனதைக் கல்லாக்கிக்கொண்டு வந்தான். ஆர்த்தருடைய வேண்டுகோளின்மேல் அந்தக் கொடியசெய்லை அவன் தானே செய்யும்படி ஒப்புக்கொண்டதேயொழிய வேறன்று. கடைசியில், இவ்வளவுகாலமாக வெகு நேசத்தோடும் நம்பிக்கையோடும் தன்னைப் பார்த்துக்கொண்டும், ஒரு நிமிஷங்கூடக் கோபித்துக் கொடுமையாய்ப் பாராமலுமிருந்த கண்களை எப்படி கெடுக்கிறதென்று அபர்த்தனுக்குப் பெருஞ்சிந்தையுண்டாயிற்று. அதற்கென்றேவந்த கருவிகள்கூட இக்கொடுஞ்செய்கை செய்யமாட்டோமென்று நிற்க, அப்படிப்பட்ட செய்கையை நாம் ஒருபோதும் செய்யக்கூடாதென்று நிச்சயித்து, இதே சலாகையினால் உன் கண்ணைக் கெடுத்துவிடுவதாக நான் உறுதிமொழி கொடுத்துவந்திருக்கிறேனாயினும், உன் சிற்றப்பன் தன் ஆஸ்தி அனைத்தையும் எனக்குக் கொடுக்கிறேனென்றாலும் நான் உன் கண்ணைத் தொடமாட்டேனென்றுசொல்லிக் கடைசியில் அபர்த்தன் ஆர்த்தருக்கு அபயம் கொடுத்தான்.



இப்பொழுதுதான் உன்னைப்பார்த்தால் அபர்த்தனென்று தோன்றுகிறது! இவ்வளவுநேரம் யாரோ வேறொரு கொடிய மனிதன்போலிருந்தாய் என்று ஆர்த்தர் அகங்களித்துச் சொன்னான்.

அதுகேட்டு அபர்த்தன் குழந்தாய்; உன் நற்குணத்தைப் பார்க்க எனக்கு வெகு சந்தோஷமாயிற்று; இனி நீ பயப்படவேண்டாம்; எப்படிப்பட்ட அபாயம்வந்தாலும் உனக்குக் கைகொடுக்க நான் துணிந்திருக்கிறேன்; உனக்கு ஒரு கெடுதியும் உண்டாகாது; நீ மெய்ம்மறந்து தூங்கினாலும் விழித்துக்கொண்டிருந்தாலும் எக்காலத்திலும் உனக்குப் பயமில்லை. இவ்வுலகமெல்லாம் கொடுத்தாலும் அபர்த்தன் உனக்குக் கெடுதிசெய்யமாட்டான் என உறுதியாய் நினை என்றான்.

அப்படியே அபர்த்தன் தன்னுடைய நார்த்தம்தன் கோட்டையில் ஆர்த்தரைப் பத்திரமாய் இருக்கச்செய்து, அரசனான ஜானண்டைபோய், அவன் கட்டளையை நிறைவேற்றிவிட்டதாக அவனுக்கு உறுதியாய் நம்பிக்கையுண்டாகும்படி சொல்லிவிட்டான். அது மெய்தானென்றெண்ணி ஜான், பாரன் என்னப்பட்ட ராஜாங்கத்ததிகாரிகளுக்கெல்லாம், ஆர்த்தர் தேகசவுக்கியமில்லாமலிருந்து இறந்துபோனானென்றதாய்ச் செய்தி அனுப்பினான். அதைக்கேட்கவே அவர்களுக்கு அதிக கோபமுண்டாயிற்று; ஜானே புத்திபூர்வமாய் அவனைக் கொன்றிருக்கிறானென்று நினைத்தார்கள். அவர்களுள் மூன்றுபேர் உடனே நார்த்தம்தனுக்குப் போய் ஆர்த்தர் தேகத்தைப் பார்க்கவேண்டும், அவன்தானே இறந்தானோ கொலைசெய்யப்பட்டானோ தெரியட்டுமென்று அந்தக்ஷணமே அவ்விடத்திற்குப் போகத் தீர்மானித்தார்கள்.

அதைக் கேட்க ஜானுக்கு வெகு திகிலுண்டாயிற்று. மிகவும் கொடுமைசெய்து அநியாயமாய்க் குடிகளிடத்தில்

பணம்பறிக்கிறானென்று அவர்கள் தன்னிடத்தில் முன்னமே கெட்ட அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களாதலால், ஆர்த்தர் கொல்லப்பட்டிருப்பதையும் தெரிந்துகொள்வார்களானால், யாவரும் ஒருமிக்கத் தன்மேல் திரும்பிக்கொள்வார்களேயென்று அவன் மிகவும் பயந்தான். அதனால் உடனே அந்தப் பழியை அபர்த்தன்மேல் சுமத்திவிட்டான். எப்படியெனில், இந்த அபர்த்தன் கொலைபாதகஞ் செய்யத்துணியாதவனென்று எனக்குத் தோன்றியிருந்தால், நான் இவனுக்கு அந்தக் கட்டளையிட்டிருப்பேனா? இப்பழி அவனுடையதே என்றான். அதனால் கடைசியில் அபர்த்தன் உண்மையை வெளியிடவேண்டியதாயிற்று: ஆர்த்தருக்கு ஒரு கெடுதியுமில்லை; உயிரோடு அவன் சுகமாயிருக்கிறானென்றான். அச்செய்திகேட்டு ஜான் அதிக சந்தோஷமடைந்து, ஆர்த்தர் இறந்துபோனதாய்ச் சொன்னதெல்லாம் பொய் என்று, முன்னமே நார்த்தம்தனுக்குப் புறப்பட்டுப்போன பிரபுக்களுக்குச் சீக்கிரமே போய்த் தெரிவிக்கும்படி, அபர்த்தனை அந்தக்ஷணமே அனுப்பினான்.

இதிப்படியிருக்க நார்த்தம்தன் கோட்டையில் அபர்த்தன் தனியே அடைத்துவிட்டுப்போன ஆர்த்தர் செய்தி என்னவாயிற்று பார்ப்போம். தனக்கு என்ன வெகுமதி கிடைப்பதாயிருந்தாலும் ஆர்த்தருக்குத் தான் சிறிதும் தீங்குசெய்வதில்லையென்று அபர்த்தன் உறுதியாய் வாக்குத்தத்தம் செய்துபோயினானாயினும், வேறொருவனைக்கொண்டாகிலும் ஜான் தான் பிடித்தகாரியத்தை முடிப்பானேயொழியச் சும்மாவிடானென்று ஆர்த்தருக்கு நன்றாய்த் தோன்றிற்று. அன்றையதினம் நடந்த வர்த்தமானத்தால் நம்முயிரை யமன் இன்றே கைப்பற்றினானென்று ஆர்த்தர் உறுதியாக நினைத்தான். மேலும் இப்போது அபர்த்தன் நமது சிற்றப்பனோடு நாம் இறந்துபோனதாகச் சொல்லிவிடுவானாதலால், இனி நாம் ஒருவர் கண்ணிலும் தென்படுவதற்கில்லை; இப்படியேதான் இவ்விருட்டறையில் ஆயுளளவும் அடைபட்டுக் கிடக்கவேண்டும்; இதென்ன வெட்கங்கெட்ட பிழைப்பென்று ஆலோசித்து, எப்படியாவது மெல்ல இந்தக்கோட்டையினின்றும் வெளிப்பட்டுக் கடற்கரைபோய்ச் சேர்ந்து, அங்கே பிரான்சுக்குப்போகிற கப்பலில் ஏறிக்கொண்டு அத்தேசம் போய்ச்சேர்வது நலம்; அங்கே நமது தாய் எவ்விதமானாளோ! அங்கீர்ஸ் நகரத்தில் அவளைப் பிரிந்தநாள்முதல் நாளதுவரையில் அவளைப்பற்றி யாதொரு செய்தியும் தெரியவில்லை; புத்திரசோகத்தால் ஒருவேளை உடனே இறந்துதான் போனாளோ! அவளை அவசியம் போய்ப் பார்க்கவேண்டுமென்று தீர்மானித்தான்.



சிறைச்சாலையை விட்டு வெளிவரமாத்திரம் ஆர்த்தருக்கு வழி அகப்பட்டது. கோட்டைவாயிற் கதவுகளெல்லாம் நன்றாய் மூடிப் பூட்டப்பட்டிருந்ததனால் கோட்டையை விட்டு வெளிவருவதற்கு வழிதெரியவில்லை. போனால் மதிட்சுவரேறிக் குதித்துப் போகவேண்டும். உட்புறமாய் மதிட்சுவர்மேலேறுவது அவ்வளவு வருத்தமாயிருக்கவில்லை. அதனால் ஆர்த்தர் மெல்ல அச்சுவர்மேல் ஏறிப் பார்த்தபோது, அங்கிருந்து குதித்தாலொழிய வெளிப்புறம் போகிற வழி வேறொன்றும் காணப்படவில்லை. அச்சுவர் அதிக உயரம். அவ்வுயரத்திலிருந்து குதித்தால் எப்படியாகுமோவென்று முதலில் அவனுக்குச் சிறிது அச்சமுண்டாயிற்று. ஆயினும் பின்பு, குதிக்கும்போது தெய்வகடாக்ஷத்தால் ஒருவேளை காலொடியாமல் தப்புமாயின் சுலபமாய் அப்புறம் ஓடிப்போகலாம்; குதிப்பதற்குப் பயந்து இங்கேயே இருந்தால் இறக்கவேண்டுவது உறுதியாயிற்றேயென்று நினைத்து, கீழேயிருந்த பாறாங்கல்லின்மேல் எழும்பிக் குதித்தான். அதின்மேல் விழுந்தபோது அங்கிருந்த கற்களின் கூரிய

முனைகள், அவனை நசுக்கிக் கொலைசெய்ய நினைந்த ஜானுடைய கொடுங்கோன்மைபோலிருந்தன. விழுந்த வேகத்தில் கற்களில் நன்றாய் அறைபட்டு ரத்தங்கக்கி அவன் இறந்துபோகும்படியாயிற்று. அப்படி சாகிறதருணத்தில் ஆர்த்தர், ஐயோ! என் சிற்றப்பனுடைய சக்தி இந்தக் கற்களிலுமிருந்தனபோலும்; என் உயிர் கடவுளிடம் போய்ச் சேரவும், என் எலும்புகள் இங்கிலாந்தில் அடங்கவும் ஆயிற்று என்று சொல்லி இறந்தான்.

ஆர்த்தர் கொல்லப்பட்டானோவென்று பார்க்கவந்த பிரபுக்கள் மூவரும் இது சேர்ந்த சிறிதுநேரத்துக்கெல்லாம் அந்தக் கோட்டைவாயில் வந்து சேர்ந்தார்கள். வந்தவுடனே முதலில் அவர்கள் கண்ணுக்குக் காணப்பட்டது ஆர்த்தருடைய உடல்; அது கீழே விழுந்து நன்றாய் அறைபட்டு நசுங்கிப்போயிருந்தது. அதைக் கண்டவுடனே அவர்கள் இவன் வேண்டுமென்று கொல்லப்பட்டவனேயொழிய வேறில்லையென நன்றாக நிச்சயித்து, இவ்வுடலைக் கல்லறையில் அடக்கங்கூடச் செய்யாமல் இப்படி கோட்டைக்கு வெளியே எறிந்துவிட்டார்கள் பார்த்தாயாவென்று மிகக் கோபங்கொண்டு, இந்தப் பொல்லாத செயலுக்கு என்ன பிரதிக்கிரியை செய்தால் தீருமென்று மனந்தவித்து, இப்படி அநியாயமாய் ஆர்த்தனைக் கொன்றதற்காக அரசனிடத்தில் பழிதீர்த்துக்கொள்கிறவரையில் தாங்கள் சிறிதும் சுகந் தேடுவதில்லையென்று சபதஞ்செய்துகொண்டார்கள்.

இப்படி அவர்கள் ஆக்கிரகங்கொண்டிருக்கிறதருணத்தில், ஆர்த்தர் இறக்கவில்லை, உயிரோடுதானிருக்கிறான்; அதைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காகவே ஜான் என்னை அனுப்பினானென்று வெகுதூரத்திலிருந்தே இரைந்துகொண்டு வெகுவேகமாய் அபர்த்தன் ஓடிவந்தான். இனி அவன் கூச்சலிடுவதெல்லாம் வீண்தானே! அவன் நடந்த வரலாறுகளையெல்லாம் கறந்தபால் கறந்தபடியே எவ்வளவுநேரமெடுத்துச்சொல்லியும் அவர்கள், பொய்சொன்ன வாய்க்குப் போஜனங்கிடைக்காதடா! இதோ உள்ளங்கை நெல்லிக்கனிபோல யாவும் பிரத்தியக்ஷமாயிருக்க, 'அப்பமெப்படி சுட்டாளோ அதனுள் தித்திப்பை எப்படி நுழைத்தாளோ' என்பதற்கிசைய ஒன்றுமறியாதவன்போல ஏன் பொய்பேசுகிறாயென்று ஆர்த்தருடைய உடலைக்காட்டி அபர்த்தனைக் கொலைபாதகனென்றார்கள். அவனுடைய பேச்சுகளில் ஒன்றையும் அவர்கள் காதில் ஏற்றுக்கொள்ளாமல் உடனே அவ்விடம் விட்டுச்சென்று, அப்போது இங்கிலாந்தின்மேல் படையெடுக்கச் சித்தமாயிருந்த பிராஞ்சுதேசத்தரசன் மகனை லூயிஸ் என்பவனோடு சேர்ந்துகொண்டார்கள்.



இவ்விதமாக ஜான், எல்லாம் தனக்கே வேண்டுமென்றும், யாவும் தனக்கே நன்மை பயக்கவேண்டுமென்றும் இப்படி பலவாறு யோசித்து அதற்காகப் பல முயற்சிகள் செய்தும், யாவும் கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோலாயின. கடைசியில் வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் அவிந்ததுபோல் அல்லாடினான். ஏனெனில் அவனுடைய பாரனென்னும் அதிகாரிகள் பிராஞ்சுதேசத்து அதிகாரிபக்கத்திற் சேர்ந்துகொண்டு ஜானை ஒன்றுமில்லாமல் அடித்துத் துரத்திவிட்டார்கள். பின்பு ஜான் பட்டபாடுகளையும் நாம் இங்கு எடுத்துரைக்கவேண்டுமோ? அதன் வரலாறெல்லாம் ஆங்கிலேய சரித்திரத்தில் தெளிவாய் விளங்கும். கடைசியில் "தானொன்றுநினைக்கத் தெய்வமொன்று நினைக்குது" என்கிற பழமொழிப்படி ஜான் எங்கேயோ ஓடிப் பரதேசத்தில் தேகம்மனமிரண்டும் புண்பட்டு மிக வருத்தத்தோடு மாண்டுபோனான். "அரசு அன்றுகொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்பது இதனால் தெளிவாகின்றது.

# பெர்டிட்டா என்பவள் கதை.

ஒருகாலத்தில் மனிதசஞ்சாரமேயில்லாத பெருங்காடான கடற்கரையோரத்தில் ஓரிடத்திலே வெகுதூரதேசத்திலிருந்துவந்த இரண்டுபேர் கப்பலினின்றும் இறங்கினார்கள். அவர்களுள் ஒருவன் சிறந்த கனவான்; உயர்ந்த ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டிருந்தான். மற்றொருவன் மாலுமி. அவர்கள் அங்கே இறங்கினதருணத்தில் ஈசானமூலையிலும் மேகங்கள் எழும்பிக்கொண்டிருந்தன. காற்றும் கொடுமையாய் வீசத்தொடங்கிற்று. அந்தக் குறிகளைப் பார்த்தால் பெரும்புசல் அடிக்கும்போலத் தோன்றியது. அதைக்கண்டு மாலுமி, கனவானைப்பார்த்து நீங்கள் கரையிலே நெடுந்தூரம் போகாதேயுங்கள்; பெருங்காற்றடிக்கும்போலக் காண்கிறது. மேலும் இங்கே துஷ்டமிருகங்கள் குடிகொண்டிருக்கின்றனவெனப் பிரசித்தமாய்க் கேள்வி என்று சொன்னான்.

அதுகேட்டுக் கனவான், நீ திரும்பிக் கப்பலண்டைபோ; நானும் உன் பின்னேயே இதோ வந்துவிட்டேன் என்று மாலுமியுடன் சொல்லிவிட்டு, தன் மேலாடையில் மூடி வைத்துக்கொண்டிருந்த குழந்தையைப்பார்த்து, பேதைக் குழந்தாய்! நான் நேற்றிராத்திரி கனவில் உன் தாயைக்



கண்டேன்; அவள் துக்கக்கடலில் அமிழ்ந்துகிடந்தாள். என்னுடன்பேசப் பலதரம் முயன்றான்; துக்கம் மூண்டுகொண்டு வாயைத் திறக்கக்கூடாமற்போயிற்று. கடைசியில் வெகு வருத்தப்பட்டு உனக்குப் பெர்டிட்டாவென்று பெயரிட்டு உன்னை இவ்விடத்தில் விட்டுப்போம்படி சொல்லி உடனே மறைந்துபோனான். ஆதலால் உன்னை இங்கேயே விட்டுவிடுகிறேன்; உனக்கு க்ஷேமமுண்டாகக்கடவது. காற்றுமழை அடிக்கும்போலிருக்கிறது; நான் சீக்கிரமே கப்பல் போய்ச் சேரவேண்டுமென்று சொல்லி அக்குழந்தையை அங்கேயே விட்டுவிட்டுப் போயினான்.

அவன் திரும்பிப் போகும்போது அந்தத் துறையில் வந்து இறங்கியிருந்த கப்பல் பெருங்காற்றில் அகப்பட்டுக்கொண்டு உடனே மூழ்கிப்போவதுபோல் அல்லாடித் தத்தளித்துக்கொண்டிருந்தது. அந்தக் கப்பலில் இருந்தவர்கள் தப்பிப்பிழைக்க வழிதெரியாமல் கோவென்று கதறினார்கள். அத்தருணத்தில் பெருங்கரடியொன்று அம்மனிதனைக் கண்டு அவனைத் துரத்திக்கொண்டோடிற்று.

இது இப்படியிருக்க, அவன் கீழே விட்டுப்போன பேதைக்குழந்தை அந்தக் குளிர்காற்றிலே நடுங்கிக்கொண்டு தரையில் கிடந்தபடியே அழுதுகொண்டிருந்தது. கல்லுக்குள் இருக்கின்ற தேரையையும், கருவுக்குள் இருக்கின்ற குழந்தையையும், முட்டைக்குள் இருக்கின்ற குஞ்சையும் [illegible] வளர்க்கின்ற கடவுள்கண்ணுக்கு இந்தக்குழந்தை தோன்றாமற்போகுமா? "திக்கற்றவர்க்குத் தெய்வமேதுணை" என்கிற பழமொழியும் இருக்கிறதன்றோ? அதுபோலவே தெய்வ[illegible]யாய் அத்தருணத்தில் ஒரு ஆட்டிடையன் இரண்டு ஆட்டுக்குட்டிகளைக் காணாமல் தேடிக்கொண்டு அவ்வழியாக வந்தான். வெகு கருத்தாய்ச் சந்துபொந்துகூட விடாமல் ஆவலோடு அவன் தேடிக்கொண்டு வருகையில், வழியில் ஆளை

யால் மூடப்பட்டிருந்த குழந்தை ஒரு மூட்டைபோல் அவன் கண்ணுக்குத் தென்பட்டது. ஓடிவந்து அதை எடுத்துப்பார்க்க, அது ஒரு குழந்தையாயிருக்கவே மிகுந்த சந்தோஷமும் அதின் இருப்பைக்கண்டு இரக்கமுங்கொண்டு, அதைத் தன் குழந்தைபோலத் தானே காப்பாற்றுகிறதென்று தீர்மானித்து, சமீபத்தில் எங்கேயோ சுற்றிக்கொண்டிருந்த தன் மகனை உரத்துக்கூவினான். உடனே அம்மகன் ஓடிவர அவனுக்குத் தான் கண்ட அற்புதத்தைக் காட்டினான். அப்போது அம்மகன் சொன்ன அதிசயச்செய்தி என்னவென்றால், தான் போயிருந்தவிடத்தில் ஒரு பெரிய கப்பல் வெகு ஜனங்களோடு முழுகிப்போகவும், அவ்வழியாய்ப்போன ஒரு பெரியமனிதனைக் கரடி தூக்கிக்கொண்டுபோய்க் கொன்றுவிடவும் கண்ட பயங்கரமான காட்சியைத் தன் தந்தைக்கு உரைத்தான். ஆயினும் அந்த வனாந்தரத்தில் அக்குழந்தையைப் போட்டுப்போனவன் அம்மனிதன்தா னென்பதுமட்டும் அவர்களுக்குத் தெரியவில்லை.

அப்போது காற்றுமழை மிகவும் அதிகமாகி வரவரப் பயங்கரமாய் இருண்டுபோயிற்று. அதுகண்டு அந்த இடையனும் அவன் மகனும் இனி இந்த இருளிலே ஆட்டுக்குட்டியைத் தேடுவதிற் பயனில்லையென்று அறிந்துகொண்டு உடனே அந்தக் குழந்தையை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போக நிச்சயித்தார்கள். அந்தக் குழந்தை உடம்பில் அணிந்திருந்த உயர்ந்த ஆடையாபரணங்களைக் கண்டு அவர்கள் மிகவும் அதிசயித்து, அது யாரோ ஒரு மகாப் பிரபுவினுடைய மகளென்று தெரிந்துகொண்டார்கள். அக்குழந்தையின் பெயர் இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லையாயினும் அதற்கு அவர்கள் பெர்டிட்டா என்று பெயரிட்டார்கள். பெர்டிட்டாவென்றால் அவர்கள் பாஷையில் இழக்கப்பட்டதென்று அர்த்தம்.



பின்பு அம்மகள் அவ்விடையன் குடிசையில் அவனுடைய சொந்த மகள்போலவே வளர்ந்துவந்தாள். அவள் அயல்களிலுள்ள பேதைப்பிள்ளைகளைப்போலவே அந்தச் செல்வச்சிறுமியும் கந்தைத்துணியுடுத்துக் கேவலமான உணவுகளையே உண்டு அவர்களோடுகூடவே விளையாடித் திரிந்துகொண்டிருந்தாளாயினும், அம்மகளுக்கும் மற்றவர்களுக்கும் இயற்கையாயுள்ள வேற்றுமைமட்டும் வெளிப்படையாகத் தெரியவந்தது. யார்வந்துபார்த்தாலும் அந்தச் சிறுமி அவ்விடைச்சாதியில் சேர்ந்தவள் அல்லள் என்று தெளிவாய்ச் சொல்லும்படியாயிருந்தனள். அம்மகள் யாவரிடத்திலும் இரக்கமும் வணக்கமும் உடையவளாயிருந்தாள். உண்மையும் யோக்கியதையும் அவளிடத்தில் குடிகொண்டிருந்தன. அதனால் ஏதாவதொன்று பொய் புரளியாகத் தோன்றினால் அதை அவள் காதுகொடுத்துக்கூடக் கேட்பதில்லை. எந்தவிஷயத்திலும் மிகப் பெருமையும் பிரீதியுமாக நடந்துவந்தாள். இவ்வளவோடுகூட அயலாரைக் கண்டால் கொஞ்சம் வெட்கமும் விநயமும் தோன்றினதனால் அம்மகள் மற்ற இடையர்களைப்போலக் கண்டபடியெல்லாம் யதேச்சையாயிராமல் கொஞ்சம் அடக்கம் உடையவளாயிருந்தாள். அப்பெண்மணி புஷ்பங்களில் அதிக ஆசைகொண்டவளாய் அவ்விடையன் வீட்டைச் சுற்றிச் சிறிய பூந்தோட்டமொன்று அமைத்து அதில் அழகிய விநோதமான பல பூஞ்செடிகளை நட்டுப் பயிராக்கிவந்தாள்.

அச்சிறுமி அவ்விடையன் வீட்டுக்குவந்தது சகல சம்பத்தும் உருவெடுத்து அவ்வீடுதேடி வந்ததுபோலிருந்தது. அவள் வந்தவுடனே அவனுக்கு ஆடுமாடுகள் விசேஷமாய் விருத்தியடைந்தன. அவன் அளவற்ற காணிபூமிகள் வாங்கினான். ஒரு காரணமுமின்றித் திடீரென்று அவனுக்கு அவ்வளவு சீக்கிரத்தில் செல்வம் விருத்தியானதைக் கண்டு யாவரும் அதிசயித்தார்கள்.

அத்தேசத்தரசன் அரண்மனைக்கு அவ்விடையன்வீடு வெகுதூரமன்று. அவ்வரசனுக்குப் பாலிஜனென்று பெயர்; அவன் குமாரனுக்கு பினாரிஜல் என்று பெயர். அந்த ராஜகுமாரன் ஒருநாள் பருந்துவிட்டு விளையாடிக்கொண்டிருக்கையில், அந்தப் பருந்து அவ்விடையன் வீட்டுவழியாய்ப் பறந்துபோயிற்று. அதைத் தொடர்ந்துபோம்போது அவ்விளவரசன் இடையன் வீட்டண்டை முதலில் பெர்டிட்டாவைப்பார்த்தான். அவள் இடைப்பெண் அல்லவென்று அவனுக்குத் தெரியாவிட்டாலும், இடையர்களிடத்தில் ஒருபோதும் காணப்படாத சிறந்த ரூபலாவண்யம், நற்குணம், பெருந்தன்மை முதலியன அவளிடத்தில் அமைந்திருக்கக் கண்டு அவள்மேல் ஆசைகொண்டான். அவ்வரசகுமாரனும் அடாதசெய்கைசெய்யத் துணிபவனன்று; பல நீதிநியாயங்களும் கல்விகேள்விகளுமுடையவன். அவன் அம்மகளை இடைக்குடிசையில் சாதாரணமான ஒரு இடைப்பெண்ணாகவே கண்டானென்றாலும், பார்த்தமாத்திரத்திலேயே அவளிடத்தில் மனதுபற்றிப்போகவே, இவளை நமக்கு மனையாளாகத்தக்கவளென்று நிச்சயித்து இக்காரியத்தை எவ்விதமாவது முயற்சிசெய்து சாதிக்கவேண்டுமென்று தீர்மானித்தான்.

இது நடந்த சிலகாலத்துக்குள்ளேயே, அங்கே சாதாரணமான ஒரு இடையனுக்கு யாவரும் வியக்கத்தக்க வடிவழகுள்ளவளான மகளொருத்தி இருக்கிறாளென்றும், தன் மகன் வெகுவாய் அவ்விடையன் வீட்டிலேயே இருந்து காலங்கழிக்கிறானென்றும், அரசனுக்குக் கேள்வியாயிற்று. அதனால் அந்த ராஜன் தானே நேராய்ப்போய் அம்மகளைப் பார்த்து அவளைப்பற்றி இடையனோடு பேசவேண்டுமென்று கருத்துகொண்டு, தானும் தன் மந்திரியுமாய்ப் பேதைக்குடியானவன்போல வேஷந்தரித்து, அவ்விடையன் வீட்டுக்குப் போகிறதென்று நிச்சயித்தான்.



அன்றையதினம் அவ்விடையன், தன் ஆடுகளுக்கெல்லாம் மயிர்கத்தரிக்கிற பண்டிகையென்று, அதற்காக அவ்வூரிலுள்ளவர் அனைவரையும் வரவழைத்திருந்தான். யாவரும் அவரவர்க்கேற்றபடி அலங்காரம் செய்துகொண்டு அவ்வீட்டில் வந்து நிறைந்திருந்தார்கள்.

பெர்டிட்டா அப்போது வந்தவர்களுக்கெல்லாம் விருந்தளிப்பதற்கு வேண்டிய பலவிதமான பழம் பணியாரம் முதலியவைகளைச் சித்தம்செய்வதிலும் பூமாலைகள் கட்டுவதிலும் அதிக வேலையாயிருந்தாள். தானும் ஒரு இடைப்பையல்போல வேஷந்தரித்துக்கொண்டு ராஜகுமாரன் யாவர்க்கும்முன்னே அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்த சிறிதுநேரத்துக்கெல்லாம் நல்ல வீரபுருஷர்களாய் இருவர் அக்குடிசைக்கு வந்தார்கள். அவர்கள் இன்னாரென அங்கு ஒருவர்க்குந் தெரியவில்லை; யாரோ அவ்வூர்க்குடியானவர்களென்று நினைத்திருந்தார்கள்.

வரவேண்டியவர்களெல்லாம் வந்து எல்லோரும் அவரவர்க்குரிய ஆசனங்களில் உட்கார்ந்தவுடனே அவர்களுடைய வழக்கப்படி ஆட்டம் ஆரம்பமாயிற்று. பினாரிஜல் என்பவனும் பெர்டிட்டாவும்கூடி ஆட ஆரம்பித்தார்கள். புதிதாய் வந்த இரண்டுபேரும் (அவர்கள் அத்தேசத்தரசனும் அவனுடைய மந்திரியுமேயொழிய மற்றெவருமல்லர்.) அந்த அதிசயத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். அப்போது அரசன் அமைச்சனைப்பார்த்து, இப்பெண் தாழ்ந்தகுடியிற் பிறந்தவளாயினும் மிகவும் சிறந்த வடிவழகுள்ளவளாயிருக்கிறாள்; இப்படிப்பட்ட அழகியை இவ்விடையர்குலத்தில் நாம் ஒருபோதும் கண்டதில்லையே; இவ்விடத்திற்கு இம்மெல்லியல் சிறிதும் உரியவளல்லவென்றான். பின்பு அவர்கள் அவ்வீட்டு இடையனை அழைத்து அம்மகளுடைய செய்திகளையெல்லாம் விசாரித்து, அவனோடே

ஆடின சிறுவன் யாரென்று கேட்டார்கள். அதற்கு அவ்விடையன், அவன் யாரோ அவனைப்பற்றி எனக்கு விசேஷமாய்த் தெரியாது. அவனுக்குத் தாரிகல் என்று பெயராம்; அவன் என் மகளை நேசித்திருக்கிறான்; மிகவும் யோக்கியன்; மிகச்செல்வவானாயும் காண்கிறான் என்றான்.

இப்படிப் பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் சிறுவர்களும் சிறுமிகளும் விநோதமாய் ஆடிக்கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் ஒரு சேவகன்வந்து யாரோ வியாபாரி விற்பனைக்குப் பல விநோதப்பொருள்கள் கொண்டுவந்திருக்கிறானென்கிறதாய்ச் செய்திசொன்னான். அதைக் கேட்டவுடனே பிள்ளைகள் யாவரும் ஆட்டத்தை நிறுத்திவிட்டு அவன் வரவை எதிர்பார்த்திருந்தார்கள்.

உடனே அந்த வியாபாரி தான் கொண்டுவந்த விலைப்பொருள்களை ஒவ்வொன்றாய்க் கூவிப் பாடிக்கொண்டு அவ்விடத்திற்குவந்தான். இடையர்களும் மற்றவர்களும் அவனுடைய பாட்டைக்கேட்க அவனைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டார்கள். சிறுவர்களெல்லாம் அந்த வியாபாரி கொண்டுவந்த வளையல் மோதிரம் கைக்குட்டை முதலியவைகளைத் தங்களுடைய காதற்பெண்களுக்காக அவரவர்க்கு வேண்டுமளவும் வாங்கிக்கொண்டார்கள். பிளாரிஜல்மாத்திரம் தன் ஆசைக்கிளியான பெர்டிட்டாவுக்காக ஒன்றும் வாங்கவில்லை; அந்த வியாபாரியண்டைகூட அணுகவில்லை. அவ்விருவரும் ஒருபுறமாக நின்று தனியே பேசிக்கொண்டிருந்தார்கள். அதுகண்டு அரசன் பிளாரிஜலிடம் சென்று நீ ஏன் பெர்டிட்டாவுக்காக ஒரு பொருளும் வாங்கவில்லை, உனக்கு உள்ளூற இப்பெண்ணிடத்தில் ஆசைதானோ? என்று கேட்டான். அவன் தன் தந்தையென்பதை அச்சிறுவன் சிறிதும் கண்டுகொள்ளவில்லை; அவன் யாரோ ஒரு பெரிய மனிதனென்றெண்ணி, இவ்விதமான அற்பப்பொருள்களி



டத்திலெல்லாம் இப்பெண்மணி சிறிதும் அபேக்ஷைகொள்வதில்லையென்று எனக்கு நன்றாய்த் தெரியுமாதலால் நான் இவற்றுள் ஒருபொருளும் கொள்ளவில்லையென்றுசொல்லி, அங்கிருந்தவர்களெல்லாரும் பார்த்திருக்கப் பெர்டிட்டாவின் இரண்டு கையையும் பிடித்துக்கொண்டு, எனக்கு இவ்வுலகத்தில் சகல சாம்பிராச்சியமும் கிடைப்பதாயிருக்கட்டும், ஒருவர்க்குமில்லாத விசேஷ சாமர்த்தியமும் கல்வித்திறமும் உண்டாவதாய்த்தானிருக்கட்டும், இவளுடைய நேசமொன்றில்லாவிட்டால் அவையொன்றும் எனக்கொரு பெருமையாகத் தோன்றாதென்றான்.

அதுகேட்டு அவ்விடையன், அப்படியானால் எனக்குப் பழம்நழுவிப் பாலில் விழுந்ததுபோலாயிற்று. இந்தப் புதிய விருந்தினர்களையே சாக்ஷியாகக்கொண்டு என் மகளை இன்றையதினமே நான் உமக்கு விவாகம் செய்துகொடுக்கிறேன் என்றுசொன்னான்.

அண்டையிலிருந்த அரசன் அதைக் கேட்டவுடனே, சற்றே நிதானித்துப் பேசுமையா; இச்சிறுவனுக்குத் தாய் தந்தையர் ஒருவருமில்லையா? இது ஆயிரங்காலத்துப் பயிராயிற்றே! இப்படிப்பட்ட பெருங்காரியத்தில் அவர்களுடைய சம்மதியில்லாமல் ஒரு நிச்சயம் பண்ணலாமா? பிள்ளை சொந்தமாகவே சுயம்வரமாய் ஒரு கன்னிகையை வரித்துக்கொண்டாலும், அதில் பெற்றோர்களுடைய புத்திமதியும் கலக்கவேண்டுமல்லவாவென்றான்.

நீங்கள் சொன்னதெல்லாம் சரியே; பெற்றோர்க்குத் தெரியாமல் ஒருகாரியமும் செய்யக்கூடாதுதான். ஆயினும் என்னசெய்யலாம்; ஏதோ ஒரு அசந்தர்ப்பத்தால் இவ்விஷயத்தைச் சிறிதும் என் தந்தைக்குத் தெரிவிக்கக்கூடாமலிருக்கிறது என்று பிளாரிஜல் பதிலுரைத்தான்.

அதைக் கேட்டவுடனே அரசன் அதிக கோபங்கொண்டு

கண்கள் சிவந்து நா துடிக்கத் தன் நிஜஉருவத்தை அவர்களுக்கு வெளிப்படையாய்க் காட்டி, அந்தக்ஷணமே அம்மகன் தன்னோடுகூடப் பட்டணம்வந்து சேரவேண்டுமென்றும், திரும்பவும் எப்பொழுதாவது அவன் பெர்டிட்டாவின் முகத்தைப் பார்ப்பானானால் உடனே அவனைத் தன் மகனல்லன் என்று நீக்கிச் சிங்காசனமேறும் உரிமையை ஒழித்துவிடுவதுமாத்திரமேயல்லாமல் பெர்டிட்டாவின் தலையையும் வாங்கிவிடுவேனென்றும் சொல்லி உடனே பட்டணத்திற்குத் திரும்பிவிட்டான்.

அதுதெரிந்து பெர்டிட்டா பிளாரிஜலைப்பார்த்து, நீர் உம்மிடத்திற்குப் போய்ச் சுகமாயிரும்; எனக்காக நீர் ஏன் வீணாய் உம்முடைய சிறப்பையும் சிங்காசனத்தையும் இழக்கவேண்டும்? என் தலைவிதி எனக்கு, இத்தனைநாளாய் நான் மனோராஜ்ஜியம் செய்துகொண்டிருந்ததெல்லாம் ஊமை கண்டகனவாயிற்று. விதிப்பயனைவெல்ல யார்தாம்; இப்படியே ஆடு மாடு மேய்த்துக்கொண்டுதான் நான் என் காலத்தைக் கழிக்கவேண்டும் என்று சொல்லக்கேட்டு பிளாரிஜல், நீ ஏன் இப்படிக் கண்டபடியெல்லாம் கவலைப்படுகிறாய்? என் தகப்பன்வந்து என்னை இவ்வளவு வெருட்டியும் என் எண்ணம்மட்டும் சிறிதும் மாறவில்லை; எது எப்படிதானாகட்டும், நான் கொண்டகொள்கைக்கு இரண்டில்லை என்றான்.

ஆயினும் தன் குமாரன் தான் சொன்னவண்ணம் செய்யாதபக்ஷத்தில் பெர்டிட்டாவைத் தலைவாங்கிவிடுவதாய் அரசன் சொல்லிவிட்டுப்போனதினால், அப்புறம் அச்சிறுவர்கள் தங்கள் இஷ்டப்படி அங்கே வசித்து ஒரு நிமிஷமாவது பிழைத்திருப்பார்களா? ஆகவே, அப்போது அங்கிருந்து சிசிலிதேசத்துக்குப்போகச் சித்தமாயிருந்த கப்பலிலேறிப் பிளாரிஜலும் பெர்டிட்டாவும் அத்தேசத்திற்குப்போய், முன் பிளாரிஜ



லின் தந்தைக்கு உயிர்த்தோழனாயிருந்த அத்தேசத்தரசனைக் காண்கிறதென்று தீர்மானித்து உடனே கப்பலேறினார்கள்.

அவர்கள் கருதியவிடம்போய்ச் சேர்ந்தவுடன் அத்தேசத்தரசன் அவர்கள் வரவைக் கேள்வியுற்று அவ்விருவரையும் தன் சமுகத்திற்கு வரவழைத்தான். பெர்டிட்டாவைப் பார்த்தவுடனே அவ்வரசன் இன்னதென்று சொல்லத்தெரியாத ஒருவிதக் களிப்படைந்து, அவள் முகத்தினின்றும் தன் பார்வையைச் சிறிதும் திருப்பக்கூடாதவன்போல் அப்படியே திகைத்துநின்று, இதென்ன இப்பெண்ணின்சாயல் நம்முடைய நாயகியான அருமியன் என்பவளுடைய சாயல்போலவே இருக்கிறதே! இப்பெண்ணைப்பார்த்தவுடனே எனக்கு அவள் நினைவு வருகின்றது; இதென்ன அதிசயமென்று தன் அரண்மனையிலிருந்த சிறந்த மேட்டியான பாலினா என்பவளை அழைப்பித்துக் கேட்டான். பிளாரிஜல் தன் செய்திகளையெல்லாம் சொல்லி, எப்படியாவது தன் தந்தைக்குத் தன்னிடத்திலுள்ள கோபம் தணியும்படி செய்து பெர்டிட்டாவை எவ்விதத்திலாவது தனக்குப் பெண்சாதியாக்கி வைக்கவேண்டுமென்று வணங்கி வேண்டிக்கொள்ள, லியாந்திஸ் என்னும் அவ்வரசன் தன்னால் வஞ்சனையில்லாமல் பாடுபட்டு அப்படியே செய்விக்கிறேனென்று ஒப்புக்கொண்டான்.

லியாந்திஸ் பாலிஜன் என்னும் அரசனுக்கு இச்செய்தியைச் சொல்லியனுப்புவதற்குமுன்னமே அவ்வரசனே பெர்டிட்டாவை எடுத்துவளர்த்த இடையனையும் அவன் மகனையும் அழைத்துக்கொண்டு சிசிலிப்பட்டணம் வந்து சேர்ந்தான். இவ்விரண்டு அரசர்களுடைய முன்னிலையிலும் பிளாரிஜல், பெர்டிட்டா, அவ்வரண்மனை உத்தியோகஸ்தர் சிலர் இவர்கள் தங்களுக்குத் தெரிந்த சங்கதிகளைச்சொல்ல, அந்த இடையனும், பெர்டிட்டா பச்சைப்பாலகனாய்க்

தன்னந்தனியே கடலோரத்தில் ஒரு பெருங்காட்டிலே பரிதாபமாய்ப் புலம்பக்கண்டு, தான் எடுத்துவளர்த்தது முதலிய சங்கதிகளைச்சொல்லி, அக்காலத்தில் அந்தக் குழந்தை அணிந்துகொண்டிருந்த ஆபரணங்களின் மூட்டையையும் அவர்கள்முன்னே அவிழ்த்தான்.

அந்த உடைமைகளையும் அதன்மேற் கட்டியிருந்த பட்டாடையையும் பார்க்கவே அரசன், அவையெல்லாம் தன் பிராணநாயகியான அருமியன் என்பவளுடையவையே யென்று உறுதியாய் அறிந்து ஆநந்தக்கடலிலாழ்ந்து, பெர்டிட்டா நெடுநாளாய்க் கைசோர்ந்துபோயிருந்த தன்னுடைய அருமைமகளேயென்று அந்தச் சபைநடுவே சந்தோஷமாய் எடுத்துச்சொல்லி, அத்தனைகாலமாய் அம்மகளைக் கைவிடாமல் காப்பாற்றினதினிமித்தம் அவ்விடையனுக்கும் அநேக வந்தனஞ்செய்தான். இந்த ஆநந்தம் உடம்புதெரியாமலிருக்கையில் அவன் அம்மகளைப்பார்த்துத் தன் நாயகியை நினைத்து, ஐயோ! இப்போது உன் தாயில்லையே! தாயில்லையே என்று தீனமாய்ப் புலம்பி, நெடுநாளைக்குமுன்னே தான் ஏதோ மதியீனத்தால் வீணான சந்தேகங்கொண்டு தன் பெண்சாதி பிள்ளைகளைப் பகைத்து, தான் திரும்பி ஒருநாளும் பாராமலிருக்கும்படி தன் மகளை நெடுந்தூரத்துக்கப்பால் கொண்டுபோய்ப் போட்டுவரக் கட்டளையிட்டதும், அந்தத் துக்கம் பொறுக்கமாட்டாமல் தன் மனைவி மாண்டுபோனதுமாகிய துக்கக்கதைகளைச்சொல்லித் தன் பிழையைப் பொறுக்கும்படி மகளை வேண்டிக்கொண்டான். அந்தச் செய்தியைக் கேட்கவே அச்சபையிலுள்ளோர் அனைவரும் கண்ணீர்விட்டார்கள். ஆயினும் அந்தச் சோகக்கண்ணீர் நிமிஷத்துக்கெல்லாம் ஆநந்தக்கண்ணீராக மாறப்போகிறது. ஏனெனில், தான் மதிமயக்கத்தால் செய்யத்துணிந்த செய்கையெல்லாம் முற்றுப்பெறவில்லையென்று அவ்வரசனே கண்டு களிக்கப்



போகிறான். தன் வம்சத்துக்கு வித்தாயும் பட்டத்துக்கு அதிகாரியாயும் தன் மகள் உயிரோடிருக்கிறாளேயென்று அரசன் அகமகிழ்ந்து நின்றான்; பாலிஜனென்னும் அரசனுடைய கோபம் தணிந்ததாகையால் தங்களுடைய மனோரதம் கைகூடிற்றென்று பிளாரிஜலும் பெர்டிட்டாவும் மனமுவந்து நின்றார்கள்; அருமியனுடைய உயிர்த்தோழியான பாலினாவும் அம்மகளை ஆலிங்கனஞ்செய்துகொண்டு ஆநந்தித்துநின்றாள்; ராஜாக்களெல்லாம் தங்களை அண்ணனென்றும் அப்பனென்றும் உறவுபாராட்டிப் பேசத்தலைப்படவே தங்களையும் ராஜபந்துக்களென்றே பாவித்து அங்கே வந்திருந்த இடையனும் அவன் மகனுங்கூட மிக்க மகிழ்ச்சிகொண்டிருந்தார்கள்.

கடைசியாய் நாம் சொல்லவேண்டியது ஒன்றுண்டு. உயிரோடு இருப்பதுபோலவே அருமியனுடைய பதுமையொன்று பாலினா செய்து வைத்திருக்கிறாளென்று வெகுநாளாய் அங்கு ஒரு வதந்தி உண்டாயிருந்தது. அதுகேட்டுப் பெர்டிட்டா தன் தாயின் உயிர்ப்பதுமையைப் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொள்ள, இரண்டு அரசர்களும் அவர்களுடைய மக்களும் கூடப்போய் அதைப் பார்க்கிறதென்று ஏற்பாடாயிற்று. அப்படியே பாலினா அவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் ஒரு சிறிய அறைக்கு எதிரே அவர்களை நிறுத்தித் திரையைத் திறந்தாள். அங்கே அருமியனுடைய பதுமை தோன்றிற்று. அது அப்பெண்மணியின் சிறிதும் மாறுபடாத சுந்தரவடிவமாயிருந்ததேயன்றிச் சித்திரப்பதுமையாகத் தோன்றவில்லை; மேலும் அப்போது அவளுக்கிருக்கவேண்டிய வயதுக்குத்தக்கபடி அதின் முகக்களை முதலியவை சிறிது மாறுபட்டுத்தோன்றின. அந்த அற்புதக்காட்சியைக்காணவே இதென்னவென்று வியாந்தில் திகைத்துநின்றான். அது

வாஸ்தவமான பெண்ணாகிப்போலவேயிருந்தது. அதைக் கண்டு அரசன், அவள் தன் நாயகிதான் என்றெண்ணி, தான் செய்த பிழைகளையெல்லாம் பொறுக்கும்படி அவளை வேண்டிக்கொண்டு அம்முகத்தைச் சற்றே முத்தமிடலாமாவென்று பாலினாவை அனுமதிகேட்டான். பெர்டிட்டாவும் தன் தாயைக் கட்டிக்கொண்டு வணங்கவேண்டுமென்றாள்.

அத்தருணத்தில் சங்கீதவாத்தியங்கள் விநோதமாய் முழங்கத்தொடங்கின. உடனே யாவரும் இதென்னவென்று ஆச்சரியப்பட்டுநிற்க அப்பதுமை அசையத்தொடங்கி அரசனுக்கு நேராக நடந்துவந்தது. கிட்டவந்ததும் அவன் அவள் கையைப் பிடித்துக்கொண்டான். உடனே உண்மை அனைவர்க்கும் வெளிப்படையாயிற்று. அது பதுமையன்று; உள்ளபடி அருமியனே. அவள் இறந்துபோகவில்லை; அரசனுக்குக் கோபந்தணிந்து களிப்பு உண்டாகும்போது காட்டலாமென்று பாலினா அவளை அதுவரையில் ஒளித்துவைத்திருந்தாள். தன் அருமை நாயகி உயிரோடு இருப்பதுகண்டு அரசன் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தான். பெர்டிட்டாவும் தன் தந்தையைமாத்திரமேயன்றித் தாயையும் கண்டு களிப்புற்றாள். அவள் இடைக்குடிசையில் இடையன்மகளாக வாழ்ந்துகொண்டிருந்தகாலத்திலேயும் மற்ற இடைப்பெண்களைப்போலவே இடையன் சொன்னபடி கேட்டு அவ்விடத்திலுள்ள எளிய வேலைகளையெல்லாம் செய்துவந்தாள். அந்தப் பொறுமையும் பரோபகாரநினைவுமே இப்போது அம்மகளைச் சிசிலிநாட்டு ராணியாகவும் புளாரிஜலுடைய பெண்சாதியாகவும் செய்வித்ததென்று சொல்லச் சந்தேகமுண்டோ!

## மார்ஷஸ் என்பவன் கதை.

ரோமாபுரியில் மார்ஷஸ் என்று ஒரு வீரனிருந்தான். அவன் தகப்பனுக்கும் மார்ஷஸ் என்று பெயர்; ஆயினும் கோரியலேனஸ் என்றே அவனுக்குப் பெயர் பிரசித்தமாயிருந்தது. இந்தப் பெயர் அவனுடைய வீரச்செயலுக்காக மத்தியில்வந்தது. அவன் வெகு சூரனான படைவீரன்; மிகச் சிறுவனாயிருக்கையிலேயே போர்புரியப் பேராவல் கொண்டவனாய், தன் தேசத்துக்குத் துன்பம் நேரிடும்போதெல்லாம் பகைவர்களோடு போராடத்துணிந்து எப்படிப்பட்ட அபாயத்துக்கும் பின்வாங்காமல் யுத்தம் செய்து ஜயித்துத் தேசத்துக்கு க்ஷேமமுண்டாக்குகிறவனாயிருந்தான்.

மார்ஷஸ் என்னுமிவனுடைய தாய்க்கு வர்ஜினியா என்று பெயர். அவள் மிகவும் நல்ல சுபாவமுடையவள். அவளுக்குத் தன் கணவனிடத்திலும் குழந்தையினிடத்திலும் பிரீதி அதிகம். எப்போதும் அவர்களிடத்திலேயே கருத்தாய் அவர்களுக்குத் தான் செய்யக்கூடிய நன்மைகளையெல்லாம் ஊக்கமாய்ப் பாடுபட்டுச் சந்தோஷமாகச் செய்துகொண்டிருந்தாள். கோரியலேனஸினுடைய தாயான வலமினியா என்பவளும் அவர்களோடுகூடவே

வசித்துக்கொண்டிருந்தாள். அவளும் மிக்க நல்ல சுபாவமும் பெருந்தன்மையுமுடையவள். அவள் தன் மகனை வளர்த்து அவனுக்குக் கற்பித்ததெல்லாம் தன்னுடைய சொந்த நன்மைக்காகவன்று, தன் தேசத்தின் பொது நன்மைக்காகவே. தனக்கு அவன் ஒரேமகனாதலால் அவள் தன்னுயிரைப்பார்க்க அதிகமாய் அவனை அபிமானித்து வந்தாளாயினும், உபயோகமற்ற மரம்போல் அவன் தன்னண்டையில் உட்கார்ந்திருப்பதைப்பார்க்கப் போர்புரிந்து ஜயசீலனாய்த் திரும்பிவரக்கண்டு கொண்டாடுவதிலேயே களிப்புடையவளாய், இளமையிலேயே அவனை யுத்தரங்கங்களுக்கு அனுப்பலானாள்.

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்கிறபடி தன் மகன் சமர்த்தனென்று சொல்லி யாவரும் கொண்டாடக் கேட்பதிலிருக்கிற களிப்பு அவளுக்கு மற்றெதிலுமில்லை.

மார்ஷல் என்னும் சிறுவனும் சவுரியத்தில் தன் தந்தைக்குக் குறைந்திருக்கவில்லை; மிகத் துணிவும் தைரியமும் மனவுறுதியுமுடையவனாயிருந்தான். முக்கியமாய்க் கொஞ்சம் அபாயகரமான செய்கையாயிருந்தால் அதைச் செய்வதிலேயே அவனுக்கு ஆவல் அதிகம். யாராவது சிறிதளவு கோபமூட்டினால், தப்பாமல் அவர்களை உடனே வதைத்துப்போடுவான்; எவ்வளவு அற்பகாரியமாயினும் ஏதாவதொன்றைச் செய்கிறதென்று முதலில் உதித்தால் அதை அப்படியே விடாமுயற்சியாய்ச் செய்துமுடிப்பான். அவனுக்குப் படிப்பில் அவ்வளவாய் அபேக்ஷையில்லை; தன் உபாத்தியாயரிடத்திலே போய் உட்கார்ந்து படிப்பதைவிடக் கத்திகளைப் பார்ப்பதிலும் ரணபேரிகை



களைக் கேட்பதிலுமே அவனுக்கு விருப்பம் அதிகமென்று அவனுடைய பாட்டி அடிக்கடி பேசிப் புகழ்ந்துகொண்டிருப்பாள். மேலும் அவன் தன் தந்தையைப்போலவே தாய்தந்தையர்கள் பாட்டியார் முதலிய பெரியோர்களிடத்தில் அதிக பயபக்தியும் அடக்கமும் ஒடுக்கமும் உடையவனாய்ச் சொன்னபடி கேட்டு அவர்கள் மனங்களிக்கச் செய்துவந்தான்.

இப்படியிருக்க, அருகாமையிலுள்ள வால்ஷியா தேசத்து ஜனங்கள் படையெடுத்துப் போர்செய்ய வந்திருக்கிறார்களென்று ஒருநாள் ரோமாபுரிக்குச் செய்திவந்தது. அதைக் கேட்டவுடனே கொரியலேனஸ் தன் பெண்சாதி பிள்ளை அனைவரையும் விட்டுப் போர்க்களத்திற்குச் சென்று ரோம தேசத்துப் பகைவரோடு போர்புரியத் துணிந்தான். அது கண்டு எப்படியாகுமோவென்று அவன் வீட்டிலுள்ளோர் அனைவரும் மிக்க விசனமடைந்தார்கள். மார்ஷல் என்னும் சிறுவன் தன் தந்தையோடுகூடத் தானும் சண்டைக்குப் போய்த் தன் சவுரியத்தைக் காட்டத் தனக்குத் தக்கவயது வராமற்போயிற்றேயென்று விசனமுற்றான். எப்படியாவது ஆகட்டும்; அந்தச் சிறுவனாவது சண்டைக்குப் போகாமலிருந்தது, கணவன் கதை எப்படியாகுமோவென்று கலங்கி நின்ற வர்ஜீலியாவுக்கு, அவன் முகத்தையாவது கண்டு சிறிது சோகம் தீர்ந்திருப்பதற்கு இடமாயிற்று.

இப்படியிருக்க மார்ஷலினுடைய தகப்பன் யுத்தரங்கத்திற்சென்று ரோமாபுரிக்குச் சார்பாய்ச் சத்துருக்களோடு சண்டை செய்துகொண்டிருந்தான். கொரியலேனஸ் முன்னின்று சண்டைக்குச் சேனைகளை நடத்துகின்ற சேனைத்தலைவனன்று; ஒரு சாதாரணமான படையாள். எப்படியாவது தனக்குக் கடமையான வேலையைச் செய்து ஜயம் பெறவேண்டுமென்பதிலிருந்த ஆவல் அவனுக்கு உயர்ந்த

அதிகாரம் பெறவேண்டுமென்பதில்லை. அவனுடைய சேனைத்தலைவனுக்குக் காமினியஸ் என்று பெயர். அந்தத் தலைவனைப்பார்க்க இந்தப் படையாள் மிகுந்த பராக்கிரமசாலியாயினும் இவன் அவன் கீழிருந்தே வேலைசெய்துவந்தான். பகைவர்களுடைய கொரியலிபட்டணத்தைப் பிடிக்கவேண்டிய வேலை இந்தப் படையாளுடைய பொறுப்பாயிருந்தது. இவனும் தன்னுயிரைக் கொடுத்தாவது அப்பட்டணத்தைப் பிடித்துக்கொள்வதே காரியமென்றிருந்தான். அந்த வீரன் தன் சேனைகளையெல்லாம் அப்பட்டணத்துக்கெதிரே கொண்டு நிறுத்தி இப்பட்டணத்தினுட்புகுந்துசெல்ல வழிவிடுவீர்களா மாட்டீர்களாவென்று பகைவர்களைக் கேட்க, அவர்கள் அதற்குப் பதிலொன்றும் சொல்லாமல் உடனே ஆயுதபாணிகளாய்ப் பட்டணத்தினின்றும் வெளிப்பட்டு ரோமாபுரியாரை எதிர்த்தார்கள். உடனே கைகலந்து இருதிறத்தார்க்கும் யுத்தம் நடக்க, ரோமாபுரியார் நன்றாய்ப் புடையுண்டு பகைவர்களுக்குப் புறங்காட்டி ஓடலானார்கள். அத்தருணத்தில் கொரியலேனஸ் தானே முன்னின்று மாதிரிகாட்டித் தமது படைவீரர்களுக்கெல்லாம் உற்சாகமுண்டாக்கி, மறுபடியும் யுத்தாங்கத்திற்குத் திரும்பிவந்து போர்புரிய வேண்டிக்கொள்ளாமலிருந்திருப்பானானால், வால்ஷியா தேசத்தாரே வெற்றிபெற்றிருப்பார்கள்; கொரியலேனஸ் தைரியஞ்சொல்லி உற்சாகப்படுத்தவே, அவனுடைய வீரர்கள் ஊக்கத்தோடு எதிர்த்து யுத்தஞ்செய்ய, வால்ஷியா தேசத்து வீரர்கள் தோல்வியடைந்து திரும்பிப் பட்டணத்திற்கு ஓடினார்கள். அதுகண்டு கொரியலேனஸ் தமது சேனாவீரர்களைப் பார்த்து, இதுதான் தருணம், ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள்! தோற்றுத் திரும்பியோடுகிற படைகள் உள்ளே நுழையக் கோட்டை வாயிற்கதவு திறக்கப்படுகிற தருணங்கண்டு நாமும்



கூடவே நுழையலாம், ஓடிவாருங்கள் என்று கூவி அழைத்துக்கொண்டே திரும்பி ஓடுகிற சேனையைப் பின்தொடர்ந்துசென்றான். ஆயினும் ரோமாபுரியார் அவனுடைய போதனையைக் கேட்டு அதன்படியே அவர்களைத் தொடர்ந்து ஓடாமல் பின்தங்கிப்போனார்கள். அத்தேசத்துப் படைகளை விட்டுப் பகைவர் சேனையோடு தனியே கொரியலேனஸ் வெகுதூரம் போய்விட்டதனால், அவன் தான்மாத்திரம் பகைவரோடு கொரியலிபட்டணத்துள் நுழையும்படி நேரிட்டது. நுழைந்தவுடனே அப்பட்டணத்துக் கோட்டைவாயிற் கதவு மூடப்பட்டது. அவனுடைய சேனைகளெல்லாம் வெளியே நின்றுபோயின. அவன்மாத்திரம் பட்டணத்துள் பகைவர் கையில் சிக்கிக்கொண்டான். அதுதெரிந்து ரோமாபுரியார் மகாசூரனான தமது படைவீரன் அவ்வளவோடு இறந்துபோனதாகவே எண்ணி உள்ளங்கலங்கினார்கள். ஆயினும் அவர்களெல்லாம் ஒன்றும் தோன்றாமல் விசனமுற்றவர்களாய் வெளியே நின்று பார்த்துக்கொண்டிருக்கையில், திடீரென்று அந்தக் கோட்டைவாயிற் கதவு மறுபடியும் திறக்கப்பட்டது. உடம்பில் ஊசிநாட்ட இடமில்லாமல் அம்புபொத்தி ரத்தம் தாரைதாரையாய்ப் பெருக, அப்பட்டணத்தார் பின்தொடர்ந்துவரக் கொரியலேனஸ் வெளிப்பட்டு வந்தான். அதுகண்டு அதிக சந்தோஷமடைந்து அவனுடைய படைவீரர்களெல்லாம் அவனைப் பகைவரிடத்தினின்றும் மீட்க வேகமாய் ஓடிவந்து சூழ்ந்துகொண்டு அப்பட்டணத்தையும் கைக்கொண்டார்கள். மார்ஷல் என்பது அவனுடைய இயற்கைப்பெயராயினும் இந்தக் கொரியலிபட்டணத்தைப் பிடித்த பெருமைக்காகக் கொரியலேனஸ் என்று அவனுக்குப் பட்டப்பெயர் உண்டாயிற்று. இப்படியாக இவன் கொரியலிபட்டணத்தைப் பிடித்தானவுடனே அப்பட்டணத்திற்குச் சிறு ராஜ்யத்தில்

அத்தேசத்தாரோடு சண்டைசெய்துகொண்டிருந்த காமினியஸ் என்னும் தன் தலைவனுக்குத் துணைசெய்யத் துரிதமாய் அவ்விடத்துக்கு ஓடினான். அவ்விடத்திலும் கொரியலேனஸ் மிகப் பராக்கிரமமாய்ப் போராடிப் பகைவர்களுடைய தலைவனான ஆபிதியஸ் என்பவனை அடித்துத் துரத்திவிட்டான். அந்தத் தலைவன் கொரியலேனஸினிடத்தில் தோற்று ஓடிப்போனது இது ஐந்தாம்தடவை.

இப்படியாகத் தமது பக்கம் ஜயமானவுடனே ரோமாபுரத்துப் போர்வீரர்களும் அவர்களுடைய தலைவனான காமினியஸ் என்பவனும் வெற்றிவீரனான கொரியலேனஸினிடம் வந்து, அவனை ஜயவிஜயீபவவென்று வாழ்த்தி அவனுடைய பராக்கிரமப் பெருமையைப் புகழ்ந்தார்கள். தன்னைப் பிறர் போற்றிப்புகழ்ந்து பேசக்கேட்டுக் களிப்படைகிற கெட்டகுணம் கொரியலேனஸினிடத்திலில்லை. தன்னைத் துதிக்கவந்தவர்களைப் பார்த்து அவன், மற்றவர்களைவிட என்னிடத்தில் என்ன விசேஷமிருக்கிறதென்று கண்டு இப்படிப் பேசுகிறீர்கள்? மற்றவர்கள் என்னசெய்தார்களோ அதைத்தான் நானும் செய்தேன்; செய்யக்கூடாத செயலைச் செய்ய எவராலாவது ஆகுமா? மற்ற வீரர்களும் சுதேசாபிமானத்தோடு அதற்குத் தாம் செய்யவேண்டிய கடமையைத் தம்மால் வஞ்சனையின்றிப் பாடுபட்டுச் செய்தார்கள்; நானும் அவ்வளவுதான் செய்தேனேயொழிய மற்றொரு விசேஷமுமில்லை என்று உரைத்தான். ஆனதுபற்றியே, தாம் கைக்கொண்ட கொள்ளைப்பொருள்களில் பத்திலொரு பங்கு பெற்றுக்கொள்ளும்படி மற்ற வீரர்கள் அவனை வேண்டினபோது, பாகப்படி தன் பங்குக்கு வரவேண்டிய தொகை என்னவோ அதற்குமேல் ஒரு காசுகூடத் தான் பெற்றுக்கொள்வதில்லையென்றான். ஆயினும் அவன் அவர்களை முக்கியமாய் வேண்டிக்கொண்டதொன்றுண்டு:



ஒருகால் தன்னை மிகவும் அன்போடு ஆதரித்த கொரியலிபட்டணத்து எளியமனிதன் ஒருவனிடத்தில் நன்றிமறவாத நேசம்பாராட்டி வரவேண்டுமென்றான். வால்ஷியதேசத்தார் தோல்வியடைந்தார்கள்; தமது பக்கம் ஜயமாயிற்று என்று இந்தச் சந்தோஷசமாசாரம் உடனே ரோமாபுரிக்குச் சொல்லியனுப்பப்பட்டது.

கொரியலேனஸினுடைய கடிதமும், அவனுடைய பராக்கிரமப்பெருமையால் தமது தேசத்துக்கு நேர்ந்த பல நன்மைகளைப்பற்றி அவர்களுடைய சேனைத்தலைவன் அப்பட்டணத்து அதிகாரிகளுக்கு எழுதிய கடிதமும் வந்து சேர்ந்த சமாசாரம்கேட்டு, கொரியலேனஸினுடைய குடும்பத்தார் தமது வீட்டுயஜமான் ஜயசீலனாய் வந்து சேருகிறானென்று வெகு சந்தோஷமடைந்தார்கள்.

சீக்கிரமே அந்தச் சேனைகளெல்லாம் திரும்பிப் பட்டணத்துக்கு வந்தன. கொரியலேனஸ் பட்டணத்துக்கு வருகிற செய்திகேட்டு, வலம்னியா, வர்ஜிலியா, மகனை மார்ஷல் இவர்களெல்லாம் முதலில் அவனைப் பட்டணத்துக்கு வெளியிலேயே போய்ப்பார்க்கப் போனவ[illegible]டவர்களாய் எதிர்கொண்டு ஓடினார்கள். ஜயபேரி[illegible]க்குவதும், படைவீரர்கள் புகழ்ந்து பேசுவ[illegible] அவன் இவ்விடத்தில் வருகிறானென்பதைத் தெ[illegible] தெரிவித்தன. அந்த வெற்றிவீரனும் கழுத்தில் ஜயமாலை சூடிச் சேனைத்தலைவர்களெல்லாரும் சூழ்ந்துவரச் சிறப்பாகப் பட்டணத்துள் புகுந்தான்.

அக்காலத்தில் ரோமதேசம் குடியரசுநாடாயிருந்தது. கொரியலேனஸ் வெற்றிபெற்றுத் திரும்பிவந்த [illegible]லாம், அப்பட்டணத்து ஆலோசனைச் சங்கத்துக்குத் [illegible] வரொருவனை நியமிக்கவேண்டியதாக நேரிட்டது. அவ்வா[illegible] லோசனைச் சங்கத்தாரெல்லாம் [illegible] ஆலோசித்து,

கொரியலேனஸைப்போல் தேசாபிமானத்தோடு அத்தேசத்துக்கு அவ்வளவு நன்மை விளைவித்தவன் வேறொருவனுமில்லையென்றும், அவன் அதிகாரியானால் குடிகளுக்கு எவ்வித நன்மையையும் தேடி க்ஷேமமுண்டாக்குவானென்பதற்குச் சந்தேகமில்லையென்றும் சொல்லி, அவனையே அதிகாரியாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆயினும் ஒரு அதிகாரியை ஏற்படுத்துவதற்கு ஆலோசனைச் சங்கத்தாருடைய சம்மதிமாத்திரமேயல்லாமல் அப்பட்டணத்தாருடைய சம்மதியும் முக்கியமாக வேண்டியதாயிருந்தது. அப்படிப் பட்டணத்தாருடைய சம்மதிபெறுவதற்கு அவ்வதிகாரவிருப்பமுடையவன் செய்யவேண்டுவதென்னவெனில், ஒரு முரட்டுக்கம்பளத்தை அரையில் உடுத்திக்கொண்டு கடைத்தெருவின் நடுவே போய்நின்று, அத்தேசத்துக்குத் தான் செய்த பல நன்மைகளையும் எடுத்துச்சொல்லித் தன் பெருமைகளையெல்லாம் புகழ்ந்துபேசி, அவ்வழியாக வருகிறவர்களையும் பலவிதமாய்த் துதித்து அவர்களுடைய சம்மதத்தைப் பிரார்த்திக்கவேண்டும். அதுவரையில் அவ்வதிகாரம் பெற்றவர்களெல்லாம் அப்படித்தான் செய்துவந்தார்கள். அப்படி செய்தாலன்றி அப்பட்டணத்தார் சம்மதிபத்திரம் கொடுப்பதில்லை.

கொரியலேனஸினுடைய சுபாவமோ இதற்கு முழுதும் மாறானது. தன் உயிரைக் கொடுத்தாயினும் அவன் தன் கடமையைச் செய்துமுடிப்பான்; ஆயினும் அதைப்பற்றித் தானும் சிறிதளவு பெருமைபேசிக்கொள்ளமாட்டான்; பிறர் புகழ்ந்துபேசவும் கேட்கமாட்டான். இவன் அவ்வதிகாரத்தின்பொருட்டுப் பட்டணத்தாருடைய சம்மதிகேட்கக் கடைத்தெருவிலேபோய் நின்றபொழுது, தன்னுடைய பராக்கிரமத்தையும் பிரசித்திகளையும் பெருமையாய் எடுத்துப் பேசிப் பட்டணத்தாரையும் ஸ்தோத்திரம் பண்ணுவதை



விட்டு, அவர்களுடைய குற்றங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி ஒவ்வொருவரையும் இகழ்க்கத்தொடங்கினான். அப்படி செய்யவேண்டாமென்று அவனுடைய நேசர்கள் அநேகர் வந்து எவ்வளவு நல்வார்த்தைசொல்லி வேண்டியும் ஒன்றையும் அவன் கேட்கவில்லை.

யார் என்னசொல்லியும், வருகிறவர்களுக்கு இச்சகமாய்ப்பேசி அவர்களுடைய சம்மதி பெறவேண்டுமென்கிற புத்தி அவனுக்கு உண்டாகவேயில்லை. இதுமாத்திரமேயல்லாமல், ஒன்றுமறியாத மூடர்களையெல்லாம் அவர்கள் பேசுகிற வீண்பெருமையைமாத்திரமே கேட்டு அனைவரும் சம்மதித்து அதிகாரிகளாக்கிவிடுகிறார்கள்; இந்த அநியாயம் இப்பட்டணம்தவிர மற்றெங்கேயாவது நடக்குமோவென்றுசொல்லி அடிக்கடி அவன் அப்பட்டணத்தாரை நிந்தித்துப் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். அதனோடுபோகாமல் முக்கியமாய் அவர்களுடைய பிரீதி பெறவேண்டிய இக்காலத்திலும் அவர்களுக்குச் சந்தோஷமாய்ப்பேசாமல் ஒரே பிடிவாதமாய் அனைவர்க்கும் கோபமுண்டாகக் கடிந்துபேசவே, பட்டணத்தாரெல்லாம் ஒரே மனதாய், அவன் அப்பட்டணத்திலெங்கும் தங்காமல் உடனே ஓடிப்போகவேண்டுமென்றும், மறுபடியும் எப்பொழுதாவது அவ்விடத்திற்குத் திரும்பிவருவானானால் ஒரு பெரிய குன்றின்மேலிருந்து அவனைக் கீழே தள்ளிவிடுகிறதென்றும் தீர்மானித்து அப்படியே அவனை ஓடிப்போகச்செய்தார்கள். அத்தேசத்தினிடத்தில் அவ்வளவு அபிமானம் வைத்திருந்த வீரனான கொரியலேனஸுக்கு இந்தக் கொடிய செய்தியைக் கேட்டால் எப்படி மனம் தகிக்காது! தமது தேசத்தின் நன்மைக்காகவே மகனை வளர்த்துவந்த அவன் தாயின் மனம் இச்செய்திகேட்டு மிகவும் தத்தளித்தது; அந்த மகா சூரனான கணவன் கண்காணாமல்

போய்விடுகிறதென்ற பேச்சைக் கேட்டபோது அவன் பெண்சாதிக்கும் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினது போலிருந்தது. அன்றையதினமே கொரியலேனஸ் அப்பட்டணம் விட்டோடிப்போகத் தீர்மானித்தான். அவனுடைய பெண்சாதி பிள்ளை தாய் தலைவன் மற்றுமுள்ள நேசர்கள் அனைவரும் கண்ணும் கண்ணீருமாய் அப்பட்டணம் தாண்டுமளவும் அவனுக்கு வழிகொண்டுவிட்டு அவனைப் பிரிய மனமில்லாமலே விசனமுற்று நின்றார்கள். அப்போது கொரியலேனஸ் தன் பெண்சாதி தாய் முதலியவர்களைப்பார்த்து, நேசர்களே, நீங்கள் மனம் வருந்தவேண்டாம், என்னைச் சந்தோஷமாய்ச் செலவுகொடுத்தனுப்புங்கள். நான் இப் பூமியில் பிழைத்திருக்குமளவில் என்னுடைய செய்தியை நீங்கள் அடிக்கடி கேட்டுக்கொண்டேயிருப்பீர்கள் என்று சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு அப்பட்டணம்விட்டுப் போயினான்.

அவ்விடம்விட்டுப் போகும்போது கொரியலேனஸ், நாம் செய்த நன்மைகளைச் சிறிதும் நினையாமல் இப்பட்டணத்து ஜனங்கள் நம்மை என்ன அவமதித்தார்கள்! பெண்சாதிபிள்ளை உற்றார் உறவினர் அனைவரையும்விட்டு ஓடிப்போம்படி தேசத்தினின்றுமே துரத்திவிட்டார்களே! என்று சொல்லி வருந்தி மனம் புண்பட்டு, யுக்தி ஆலோசனை நியாயாநியாயம் ஒன்றுமில்லாமல் தங்கள் பெயர்த்தொகையினாலேயே இத்தேசத்து அதிகாரத்தைக் கைக்கொண்டிருக்கும் இப்பட்டணத்து ஜனங்கள் இத்தேசத்துக்குத் தேசாந்தரத்துப் பகைவர்களைவிடப் பொல்லாத சத்துருக்களேயன்றி வேறல்லவென்று எண்ணி, அவர்களை வெறுத்துக்கொண்டேபோயினான். அதனால் அவர்களைப் பழிவாங்கவேண்டுமென்று பூரணமாக நோக்கங்கொண்டு அவர்களுடைய பகைவர் பட்டணமான ஆந்தியம் என்னும் நகரத்திற்குப்போய், முக்



கியமாய்த் தனக்கு எதிரியாக அதுவரையில் தன்னோடு பல்தரம் போராடிய பகைவனான ஆபிதியஸ் என்பவனுடைய வீட்டில் நுழைந்தான். அத்தருணத்தில் அவர்கள் மறுபடியும் ரோமாபுரியை எதிர்க்கச் சன்னாகம்செய்து கொண்டிருந்தார்கள். ஆபிதியஸ், கொரியலேனஸ் இவ்விருவரும் பலதரம் எதிருக்கு எதிராக நின்று பெரும்பகையோடு போராடினவர்களாயினும், இருவரும் மகா சூரர்களாதலால், இருவருடைய ஆட்கருத்தும் இரண்டுபேருக்கும் அந்தக்ஷணமே விசதமாய்த் தெரியவந்தது. பகைவர் கையிற் பிடிபடாமல் அவ்வளவு பாடுபட்டுத் தமது பட்டணத்தைப் பாதுகாத்த பரமோபகாரியினிடத்தில் ரோமாபுரியார் எள்ளளவும் நன்றியில்லாமல் அவனைத் தேசத்தினின்றுமே துரத்திவிட்டதைக்கேட்க எனக்கு மிகவும் அதிசயமாயிருக்கிறது; "கெடுபவர்க்குக் கெடுமதி பிடரியில்" என்கிறபடி அவர்களுக்கு ஏதோ கேடுகாலந்தான் கிட்டியிருக்கிறது, இல்லாவிட்டால் இப்படிப்பட்ட துர்ப்புத்தி உண்டாகுமா என்று சொல்லி ஆபிதியஸ் அவர்களிடத்தில் அதிக கோபங்கொண்டு, இப்போது ரோமாபுரியை எதிர்க்கச் சித்தமாயிருக்கிற சேனையை நாம் இருவருமாக நடத்திக்கொண்டு போய் அப்பட்டணத்தைத் தாக்கிக் கைவசப்படுத்திக்கொண்டு, பின்பு நமக்கு வேண்டியபடி உடன்படிக்கை செய்துகொள்வோமென்று கொரியலேனஸினோடு சொன்னான். அப்பட்டணத்தை எதிர்க்க அவன் எப்படி மனம் துணிவான்! ரோமாபுரி தனது சுதேசமென்றும், தன் மூதாதைகள் பாரம்பரையாக வசித்துவந்த வீடென்றும், தன் பெண்சாதி பிள்ளைகளும் உற்றாருறவினரும் மற்றுமுள்ள பல நேசர்களும் வசிக்குமிடமென்றும் இவற்றையெல்லாம் நினைத்தால் அப்படிப்பட்ட தேசத்தை எதிர்க்க அவனுக்கு எப்படி மனம்வரும்! ஆயினும் அவன்

இவையொன்றையும் கருத்தில் வையாது, இவ்விதமான பற்று ஒன்றுமில்லாமல் தான்மாத்திரம் தனியே இவ்வுலகில் வந்து பிறந்தவன்போலப் பாவித்துச் சுதேசத்தை எதிர்க்கத் துணிந்தான்.

ஆபிதியஸ் கொரியலேனஸ் இவ்விரண்டு போர்வீரர்களாலும் நடத்தப்பட்டு வால்ஷியன்படை சீக்கிரமே ரோமாபுரிக் கோட்டைவாயிலண்டைபோய்ச் சேர்ந்தது. அச்செய்தி கேட்டவுடனே அப்பட்டணத்தாரனைவரும் நடுநடுங்கிப்போனார்கள். எப்படிப்பட்ட அபாயம் நேர்ந்தாலும் அஞ்சாமல் எதிர்த்துக் காக்கவல்ல வீரனைத் தாங்கள் துரத்திவிட்டதுபற்றி அவன் தங்களுக்குத் துணையாகாமற் போனதுமாத்திரமேயன்றி, அவன் எதிரிகளோடு சேர்ந்துகொண்டு தமக்குப் பகையாளியாயும் போர்செய்யவந்திருக்கிறானென்பது கேட்டு அவர்கள் மிகவும் பயந்தார்கள். அந்த வீரனை எதிர்த்து வெற்றிபெறத்தக்கவன் அவர்களுள் ஒருவனுமில்லை. அதனால் இத்தருணத்திலே வீரம் பேசுவதிற் பயனில்லையென்று அவ்விடத்து அதிகாரிகளெல்லாம் மிகவும் பயந்து சபைகூடி யோசித்து, ரோமாபுரியாருடைய பிழையைப் பொறுத்துக் கிருபைபண்ணி அவர்களைக் காக்கவேண்டுமென்று சொல்லி, அந்த வீரனை வேண்டிக்கொள்ள அவ்வதிகார சபையின் தலைவர்களை அனுப்பினார்கள். கொரியலேனஸ் அவர்களைப் பார்க்கவும் உடன்படவில்லை; கடிதமூலமாய்த் தன் கருத்தைத் தெரிவிக்கவுமாட்டேனென்றான். அவர்கள் போனபடியே திரும்பிவரவேண்டியதாயிற்று.

பின்பு, பல யுத்தங்களிலும் அவனோடு கூட இருந்து போராடின வீரனான காமினியஸ் என்னும் சேனாபதியை அவனிடம் அனுப்பினார்கள். கொரியலேனஸ் அவனையும் பார்க்கச் சம்மதிக்கவில்லை. ஆயினும் அந்தச் சேனாபதி, இந்த



ரோமாபுரியைப் பகைவர்கையில் பிடிபடாமற் பாதுகாப்பதற்காக நாம் இருவரும் எவ்வளவு ஆக்கிரகத்தோடு எதிரிகளை எதிர்த்தோம் என்று எடுத்துச்சொல்ல, அதற்குப்பதில் கொரியலேனஸ் அவன் பெயரைமட்டும் ஒருதரம் உரைத்தானேயல்லது மற்றப்படி ஒன்றும் சொல்லவில்லை.

அதுகேட்டு அப்பட்டணத்ததிகாரிகள் ஒன்றுந் தோன்றாமல், அதுவரையில் அவன் தன் தந்தையைப்பார்க்கப் பெருமையாய்க் கௌரவப்படுத்திவந்த மினினியஸ் என்னும் பெரிய மனிதனாலாவது அவனுடைய மனநிலையை மாற்றலாகுமோவென்று அவனை அனுப்பினார்கள். ஒன்றும் பேசாமல் அவமரியாதையாய் அந்தப் பெரியமனிதனை அனுப்பிவிடக்கூடவில்லை; அதனால் கொரியலேனஸ் சில நிபந்தனைகளோடு கடிதமொன்று அவ்வதிகாரிகளுக்கு எழுதி அவன் கையிற்கொடுத்தனுப்பினான். அனுப்பிவிட்டு, நம்மனவுறுதி இப்படிப்பட்டதென்பதைக் கண்டிதமாய்த் தெரிவித்தாயிற்று; இனி அவர்கள் ஒருவரும் நம்மிடம்வந்து தொந்தரை செய்யமாட்டார்களென்று கொரியலேனஸ் எண்ணிக்கொண்டிருந்தான். அப்படியிருக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று. உடனே கன்னங்கறேலென்று கரித்துணி போர்த்துக்கொண்டு சிலர் அவர்களுடைய தண்டுக்குள்வந்து நுழைந்தார்கள். அவர்கள் யாரென்று உற்றுப் பார்த்தபோது, முன்னே வந்தது தன் பெண்சாதியென்றும், அதற்குப் பின் வந்தது தன் தாயும் மகனுமென்றும், அதற்குப்பின் அவர்களுடைய ஊழியக்காரர்களென்றும் கொரியலேனஸ் கண்டுகொண்டான்.

இனி யார் என்ன நிர்ப்பந்தித்தாலும், நாம் கொண்ட தீர்மானத்தைத் திருப்புகிறதில்லை, யார் என்னசொன்னாலும் அதைக் காதுகொடுத்துக் கேட்பதுமில்லையென்று தனக்குள் அவன் உறுதிபண்ணிக்கொண்டிருந்தான். ஆயினும்

அப்படி ஒரேபிடிபிடிக்க எவராலும் ஆகாது. பெண்சாதி வந்து பாதங்களில் விழுந்து பரிதாபமாய்ப் பலவாறு வேண்டிப் புலம்ப, அதைப் பார்க்கப்பொறுமல் அவன் மனமிரங்கி அவளோடு வாய்விட்டுப்பேச உடன்பட்டு, இத்தருணத்தில் நீ என் கொடுமையைக் கண்டு கோபிக்கலாகாது. ரோமாபுரியாரை மன்னிக்கும்படிமாத்திரம் நீ என்னைக் கேட்கவேண்டாமென்றான். பின்பு அவனுடைய தாய் தன் பேரப்பிள்ளையை அவன் கால்களில் தள்ளி, ரோமாபுரியாருடைய பிழையைப் பொறுக்கும்படி வேண்டினாள். குழந்தாய், இதுவரையில் எங்களை மகிழ்ந்து மனம் களிக்கச்செய்த உன் பார்வை இப்போது அஞ்சி நடுங்கி விசனமுற்றுக் கண்ணீர் உகுக்கும்படி செய்கின்றதே! கடவுளைப் பிரார்த்திக்கின்ற பெருமையும் எங்களுக்கில்லாமற் போயிற்று. சுதேசம் நிருபத்திரமாயிருக்கும்படிப் பிரார்த்திப்பதற்கில்லை; அப்படிச் செய்தால் உனக்குத் தீங்கு விளைவிக்கக் கோருவதுபோலாகின்றது. உன்னுடைய க்ஷேமத்தைக் கோருவோமென்றாலோ, உன்னுடைய ஜயம் சுதேசத்தின் அழிவல்லவா? இப்படி எங்களை மனங்குமுற விட்டு வேடிக்கைபார்ப்பது உனக்கு ஏற்றதுதானோ; எங்களுடைய மனோரதப்படி நடக்க நீ மனம் பொரிதுபண்ணாமற்போனால், இப்படியே நாங்கள் நீ இப்பட்டணத்திற்குப் போகிறவழியில் விழுந்துவிடுகிறோம், எங்களையும் மிதித்துக்கொண்டுபோக மனதிருந்தால் போவென்றாள்.

அதைக் கேட்கவே அதுவரையில் அவன் கொண்டிருந்த மனவுறுதி மாறிப்போயிற்று. தன் பெண்டுபிள்ளைகளுடைய பரிதாபத்தைப்பார்த்து இரக்கமுற்றுத் தாயின் வேண்டுகோளுக்கிசைந்து, அவளை ரகசியமாய் அழைத்து, என் அருமைத்தாயே, உன்னால் ரோமாபுரி வெற்றிபெற்றது. ஆயினும் இது உன் மகனுக்கு ஒரு தலையணைப் பாம்பு



சான். ஆனதாகட்டும், அதனால் எனக்கு வருத்தமில்லை; இனி நான் ரோமாபுரியை எதிர்த்து யுத்தஞ்செய்வதில்லை என்றுசொல்லி, கூடியவரையில் வால்ஷியா தேசத்தாருக்கு அநுகூலமாயும், ரோமாபுரியார்க்கு அவ்வளவாய்க் கெடுதியில்லாமலும் சமாதான உடன்படிக்கையொன்று எழுதி அவள் கையில் கொடுத்தனுப்பினான்.

மேல்நடந்த கதையையும் நாம் இங்கு விரித்துரைக்க வேண்டுமோ? அது மிகவும் துக்ககரமானது. வலமினியா, வர்ஜிலியா, தன் அருமை மகனான மார்ஷஸ் இவர்களைக் கொரியலேனஸ் திரும்பிவந்து ஒருநாளும் பார்க்கவேயில்லை. அவன் கேட்ட நிபந்தனைகளெல்லாம் வால்ஷியாதேசத்தார்க்கே விசேஷமாய் நன்மைபயக்குவதாயினும், எப்படியாகுமோவென்று பயந்து ரோமாபுரியார் அவற்றை அங்கீகரித்ததனால், அந்தச் சந்தோஷசமாசாரத்தைத் தான் நேராகவே போய்ச் சொல்லும்படி கொரியலேனஸ் வால்ஷியா தேசத்துப் படைகளோடு ஆந்தியம்பட்டணம் போய்ச் சேர்ந்தான். அவன் மறுபடியும் ரோமாபுரிபோய்ச் சேர்ந்தால் என்ன கலகம் விளையுமோவென்று அப்பட்டணத்தார் அவனை அங்கேயே நிறுத்திக்கொண்டார்கள். அவனும் ரோமாபுரியாரிடத்தில் [illegible] அவ்விடம்விட்டுப்போக [illegible]; அங்கேயே இருந்து காலங்கழித்[illegible]

# மோகினிராஜன் கதை.

கிரீஸ்தேசத்து ராஜதானியான ஆதன்ஸ் நகரத்துக்கருகே பெரிய வனம் ஒன்று உண்டு. அந்த வனத்தில் மோகினிகள் விசேஷமாய்க் குடிகொண்டிருந்தன. அம்மோகினிகளுடைய அரசனுக்கு ஆபரனென்று பெயர்; அரசிக்குத் திதானியா என்று பெயர். அந்த மோகினிகள் இராக்காலங்களில் தம் சேனையோடு கூட அந்த அரணியத்தில் உண்டு களித்துத் திரிவது வழக்கம்.

அப்படியிருக்க ஒருகாலத்தில் அம்மோகினிராஜனுக்கும் ராணிக்கும் ஏதோ பொல்லாத பிணக்கு ஒன்று உண்டாயிற்று. இரவில் அழகாக நிலவுகாயும்பொழுது அந்தச் சிங்காரவனத்தில் அவை ஆனந்தமாயுலாத்துவதில்லை; மற்ற மோகினிகள் யாவும் பயந்து மூலைக்கொன்றாய் ஓடி ஒளித்துக்கொள்ளும்படி அத்தனை கொடுமையாகக் கலகப்பட்டுக்கொண்டிருந்தன.

அந்த மோகினி தம்பதிகளுக்கு இவ்வாறு பெரும்பகை உண்டானதற்கு ஏது என்ன என்பீர்களோ? திதானியாவுக்குத் தோழியான ஒருத்திக்கு ஒரு மகன் இருந்தான். அந்தத் தோழி இறந்தபிறகு அம்மகனைத் தாதிக்குத் தெரியாமல் திருடிவந்து திதானியா தானே வளர்த்துவந்தாள்.



அம்மகனைத் தன் வசம் ஒப்புவிக்கும்படி ஆபரன் அவளை வேண்டிக்கேட்க, அவள் மாட்டேனென்று மறுத்ததனால் அவனுக்கு அவளிடத்தில் அதிக ரோஷமுண்டாயிற்று.

அப்படி பிணங்கிக்கொண்டிருக்கும்பொழுது ஒருநாள் இராத்திரி, அந்த அரணியத்தில் தன் பெண் இனங்களோடு உலாத்திக்கொண்டிருந்த திதானியா, தற்செயலாய் ஆபரனும் அவன் பரிஜனங்களோடு அவ்விடம் வரக்கண்டாள்.

அப்பொழுது மோகினிராஜன் அவளைப்பார்த்து இனிமையாய்ப்பேசிப் பலவாறு வேண்டியும் அவள் அதைக் கேளாமல், பெரிய மனிதனானால் பேராசைப்படவேண்டுமோ? உன் ஆதிராச்சியம் அத்தனையும் கொடுத்தாலும் 'இம்மகன் உனக்கு அடிமையாகான்' என்று சொல்லி அதிக கோபத்துடன் அவ்விடம் விட்டுச்சென்றான்.

அதுகண்டு ஆபரன், நல்லது, ஆகட்டும், உனக்கு உன் மனம் போனதே வழியல்லவா? பொழுது விடிவதற்குள் நீ எப்பாடு படுகிறாயோ பார்த்திரு என்று சொல்லி, தனக்கு முதன்மந்திரியாயும் மனமொத்த நேசனாயும் இருந்த பக்கன் என்ற மோகினியை வரவழைத்தான்.

பக்கன் என்றவன் மிக்க யுக்தியும் உபாயமும் தந்திரமும் உள்ள ஒரு சிறுமோகினி. அவன் பல கோரணிகள் செய்யவல்லவன்; வஞ்சனைகள் செய்ய நெஞ்சுறுதிகொண்டவன்; பெருந்தன்மக்கள் சேர்ந்து தூக்கக்கடலில் ஆழ்ந்திருப்பவர்களையும் பல சமத்காரங்கள் செய்து சந்தோஷிக்கச்செய்பவன். இப்படி அவன் பல சாமர்த்தியங்கள் உள்ளவனாயிருந்தான்.

பக்கன் வந்தவுடனே ஆபரன் அவனை ஏகாந்தத்தில் அழைப்பித்து, நேசனே! எனக்காக ஆண்மயக்கி என்னும் மலர்கள் சில கொண்டுவரவேண்டும். யாவராயினும் படுத்து நித்திரைசெய்யும்பொழுது அவருடைய கண் இமையில்

அம்மலரின் சாற்றைச் சிறிதளவு பிழிந்தால், அவர்கள் மதிமயங்கி நித்திரை தெளிந்தெழுந்ததும் முதலில் எதைப் பார்க்கிறார்களோ அதன்மேலேயே அதிக ஆசைகொள்வார்கள். அம்மலர்த்துளியை நம் மனைவியான திதானியாவின் இமைகளில் அவள் உறங்கும்பொழுது சிறிதளவு பிழிந்தாலல்லது அவள் ஆக்கிரகம் அடங்காது. பிழிந்தால் அவள் உறக்கம் தெளிந்தெழும்பொழுது, நாயோ நரியோ, சிங்கமோ செந்நாயோ, புலியோ கரடியோ, கோநாயோ குரங்கோ, முதலில் எதைக் காண்கிறாளோ அதன்மேலேயே ஆசைகொள்வாள். அத்தருணங்கண்டு நான் அவள் எதிரே போய்நின்று அவள் அகங்காரத்தை அடக்கி அவள் அபிமானபுத்திரனை எனக்கு அடிமையாகத் தரவேண்டுகிறேன்; அவள் அதைத் தராதிருக்குமளவில் அம்மயக்கத்தை நான் மாற்றுவதில்லையென்றான்.

யாருக்காவது ஒரு தீங்குசெய்வதென்றால் பக்கனுக்கு அதிக கோலாகலம். அதனால் அவன் தன் எஜமானனது கட்டளையை அதிக சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு அப்படியே அம்மலரைத் தேடிக்கொண்டுவரும்படி ஓடினான். அவன் எப்பொழுது திரும்பிவருவானென்று ஆபரானும் அவனுடைய வரவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது ஆபரான் ஆதன்ஸ்நகரத்துச் சிறுவனும் சிறுமியுமாய் இரண்டுபேர் அவ்வனத்திற்கு வரக்கண்டான். அச்சிறுவனுக்குத் தெமித்திரியஸ் என்றும், சிறுமிக்கு எலினாவென்றும் பெயர். எலினா தன்னைப் பின்தொடர்ந்து ஓடி வருநிமித்தம் தெமித்திரியஸ் அவளைக் கொடிய கோபத்தோடு திட்டித் துரத்தியதும், முன் அவன் தன் விஷயத்தில் காட்டிய அதிக நேசத்தை நினைப்பூட்டி அவள் கேட்போர் மனமுருகும்படி வருந்திப் பலவாறு வேண்டியும் அவன்



அதைக் கேளாமல் அவளைக் கொடிய காட்டுமிருகங்களுக்கு இரையாகும்படி நடுக்காட்டில் விட்டுப்போனதும், அவளும் புலம்பிக்கொண்டு பின்தொடர்ந்து ஓடியதுமாகிய இவையாவையும் ஆபரான் பார்த்துக்கொண்டிருந்தான்.

உண்மையாய் ஒருவர்மேல் ஆசைகொண்டு வருந்துபவர்களிடத்தில் அம்மோகினிராஜன் அதிக மனவுருக்கமுள்ளவன். அவன் எலினா படுகிற பெருந்துன்பத்தைப் பார்த்துப் பரிதாபமுற்றான். ஆதன்ஸ்நகரத்துப் பெண்களும் பிள்ளைகளும் அநேகர் அடிக்கடி அவ்வனத்துள் வந்து விநோதமாய் உலாவுவது வழக்கம். அப்பொழுது எலினாவும் தெமித்திரியசும் அதிக நேசமாய்க்கூடி விளையாடுவதை ஆபரான் பலதரம் பார்த்திருக்கிறான். அதனாலேயே அவனுக்கு அந்தப் பெண்ணைப்பார்க்க அத்தனை உருக்கமுண்டானது.

இப்படியிருக்க ஆள்மயக்கிமலர் தேடப்போன பக்கன் சீக்கிரமே அம்மலர்களைத் தேடிக் கொய்துகொண்டு ஓடிவந்தான். வந்ததும் ஆபரான் அவனைக் கண்டு, நேசனே, இவ்வனத்துள் ஆதன்ஸ்நகரத்துச் சிறுமி ஒருத்தி ஒரு வாலிபனைத் தொடர்ந்து ஓடிவந்திருக்கிறாள். அவனுக்குமாத்திரம் அந்தப் பெண்ணினிடத்தில் அத்தனை நேசமில்லையாகக் காண்கின்றது. அவன் படுத்துத் தூங்குகிற தருணம் பார்த்து இந்தப் பூஞ்சாற்றில் சில துளிகள் அவன் கண்மணி [illegible]யில் பிழியவேண்டும். ஆதன்ஸ்நகரத்தாருடைய உடை [illegible] அடையாளத்தை நீ எளிதில் அறிந்துகொள்ளலாமல்லவா? அந்தப் பெண் அவன் எதிரே நிற்கின்ற தருணம் பார்த்து நீ பிழியவேண்டும், இல்லாவிட்டால் எழுந்திருக்கும்பொழுது அவளையன்றி வேறு யாரையாவது அவன் காண்பன்; [illegible] [illegible] விடியும் என, பக்கன் அப்படியே ஆகட்டு[illegible]

மென்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

பக்கனைக் கட்டளையிட்டனுப்பியதும் ஆபான் தன் மனைவி வசிக்கின்ற விகாரமண்டபம் போய்ச்சேர்ந்து அவள் தூங்குகிற தருணம்பார்த்துத் தான் கொண்டுபோன பூஞ்சாற்றை அவளிமைமேல் பிழிந்தான்.

இப்படி அம்மோகினிராஜன் தன் கருத்தை நிறைவேற்றி, பக்கன் போனகாரியம் என்னவாயிற்றோ கண்டறிந்துவருவோமென்று, அவன் சென்ற வழிதேடிப்போனான். நடுவழியில் பக்கன் திரும்பிவரக்கண்டு என்னசெய்தியென்று கேட்க, அவன், சிறிதுதூரத்துக்கப்பால் ஆற்றோரத்தில் ஒரு சிறுவனும் சிறுமியும் படுத்து நித்திரைசெய்கின்றனர். வஸ்திரவேஷங்களால் அவர்கள் ஆதன்ஸ்நகரத்தாரெனவே தோற்றினதனால், அச்சிறுவனுடைய கண்ணில் சிறிதளவு இம்மலர்ச்சாறு பிழிந்துவந்தேன். அண்டையில் அப்பெண் தவிர மற்றெவரும் இல்லையாதலால், அவன் கண்விழித்தவுடன் அவளையன்றி மற்றெவரையும் பார்ப்பதற்கில்லை என்றான்.

அதுகேட்டு ஆபான் அவர்கள் யாரோ எனக்குச் சந்தேகமுண்டாகின்றது; நானும் வருகிறேன், நேராகப் போய்ப் பார்த்துவரலாம் வா என, இருவரும் அவ்விடம்விட்டுப் புறப்பட்டார்கள். சிறிதுதூரம்போகையில் அங்கோரிடத்தில் ஆபான் கருதிய தெமிதிரியஸ் மெய்ம்மறந்து தூங்கிக்கொண்டிருந்தான். அவனைப்பார்த்து ஆபான், நீ மருந்து இட்டது இவனுக்கோ என்று பக்கனைக் கேட்க, அவன் அல்லவென்றான். ஐயோ! நீ மோசம்போனாயே! நான் குறித்துச்சொன்னது இம்மனிதனையே. போனதுபோகட்டும், இப்பொழுது இவன் கண்ணில் சில துளிகள் பிழிவோமென்று ஆபான் சொல்ல, உடனே பிழிந்தார்கள்.



ஆயின் பக்கன் அம்மருந்தை முதலில் உபயோகித்தது எவனுக்கு என்பீர்களோ? ஆதன்ஸ் நகரத்திலிருந்து மற்றொரு சிறுவனும் சிறுமியும் வந்து மற்றோரிடத்தில் படுத்து நித்திரைசெய்துகொண்டிருந்தனர். ஆபான் ஆதன்ஸ் நகரத்தாரென்று அடையாளம் சொல்லவே, அவன் கருதியவர்கள் அவர்களேயென்று எண்ணிப் பக்கன் அச்சிறுவன் கண்ணில் அம்மலரைக் கசக்கிப் பிழிந்துவிட்டான். அம்மகனுக்கு லிசாந்தரெனவும், அவன் அண்டையிலிருந்த மகளுக்கு எரிமியா எனவும் பெயர்.

அவர்கள் அப்போது அவ்வனத்துக்குவந்த வரலாறென்னவெனில்; அக்காலத்தில் ஆதன்ஸ்நகரத்திலே பெண்களெல்லாம் பெற்றோர்களுடைய மனம்போனபடியே மணம் செய்துகொள்ளவேண்டுமெனவும், அதற்கு உடன்படாத கன்னிகைகளைக் குற்றவாளியாக்கி நியாயப்படி கொலை செய்விக்கவேண்டுமெனவும் சட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. பெண்களைக் கொல்லப் பெற்றோர் மனம்பொறாதலின் அச்சட்டம் சிறிதும் பயன்படாமலே இருந்தது. அப்படியிருக்க எரிமியாவிஷயத்தில் அந்தச் சட்டப்படி ஒரு வியாச்சியம் தொடுக்கப்பட்டது. உயர்குடிப் பிறந்தவனான தெமிதிரியஸ் என்பவனுக்கே அம்மகளைக் கொடுக்கவேண்டுமென்று அவளுடைய தந்தை பிடிவாதம் பிடித்தான். தன் உயிர்த்தோழியான எலினா அவனையே கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்று உள்ளூற ஆசை வைத்திருக்கிறாள்; அவனுக்கும் அவளிடத்தில் ஆசை உண்டு. அவ்விதமான மனிதனை நாம் புருஷனாகக் கொள்ளுவது நியாயமல்லவென்று அந்தப் பெண் லிசாந்தர் என்பவர்க்கே மணமாலை சூட்டும்படி தீர்மானித்திருந்தாள்; தான் என்னசொல்லியும் கேளாததுபற்றி அது விஷயமாய்த் தகப்பன் அம்மகள்மேல் பிரியாதுசெய்தான். அப்பொழுது

இருந்த திசியஸ் என்னும் அரசன் மிக்க நியாயமறிந்தவனாதலால், தேசச்சட்டத்தை மீறி நடக்கக்கூடாதாயினும், உடனே கொலைக்குக் கட்டளையிடாமல், நான்குநாள் நன்றாக ஆலோசித்துவரும்படி அப்பெண்ணுக்கு உத்தரவு கொடுத்து, அதற்குள்ளும் அவள் தெமித்திரியசுக்கு மனைவியாளாகத் தீர்மானிக்காவிடின், உடனே அவள் உயிரை ஒழிக்கவேண்டுவதுதானென்று தீர்மானம்செய்தான்.

உயிர்போனாலும் போகட்டும், தான் அவனை மணம்புரிவதில்லையென்று அவள் மனவுறுதிகொண்டிருந்ததனால், அந்த க்ஷணமே அச்செய்தியைத் தன் நேசனான லிசாந்தருக்கு அறிவித்தாள். அவன் அதுகேட்டு மிக்க விசனமுற்று இதற்கு நாம் செய்யவேண்டுவதென்னவென்று ஆலோசித்துக் கடைசியில், அதன்ஸ்நகரத்து எல்லைக்கு அப்புறம் அந்தச் சட்டம் செல்லாதாதலின், அங்கிருந்து சிறிதுதூரத்துக்கப்பால் தன் அத்தை இருக்குமிடம் இருவரும் போய்ச் சேர்ந்து அங்கே சுகமாய்க் கலியாணம்செய்துகொள்ளலாம்; அன்றிரவே இருவரும் ஒருவர்க்கும் தெரியாமல் தனித்தனி இருப்பிடம் விட்டுப் புறப்பட்டு இந்த வனத்தில் கூடி அப்புறம் போகிறது என்று நிச்சயித்து, அவ்வாலோசனையை அவளுடன் சொன்னான்; அவளும் அதை ஆனந்தமாய் அங்கீகரித்தாள். அப்படியே இருவரும் இருண்டபிறகு ஏகாந்தமாய்த் தனித்தனி புறப்பட்டு இவ்வனத்தில் வந்து சேர்ந்து, நடந்துவந்த ஆயாசத்தால் அங்கு ஓரிடத்தில் படுத்துத் தூங்கிப்போனார்கள். அப்படித் தூங்கிய லிசாந்தருடைய கண்களிலேதான் பக்கன் அம்மருந்தைப் பிழிந்தான்.

இப்படி நாம் ஊரைவிட்டு ஓடப்போகிற ரகசியத்தை எரிமியா யாரிடத்திலும் வெளியிடவில்லையாயினும், தன் உயிர்த்தோழியான எலினா என்பவளோடுமாத்திரம் சொல்லியிருந்தாள். அந்த எலினா, தன் தோழியின் ரகசியத்தை



வெளியிடுவதில் தனக்கு யாதொரு நன்மையுமில்லையெனத் தெரிந்தும் பெண்புத்தியால் யுக்தாயுக்த விவேகமின்றி, தன் தோழிக்குத் துரோகமாகுமென்பதை எண்ணாமல், தனக்கு நேசனாக நினைத்திருந்த தெமித்திரியஸ் என்பவனோடு அதை உரைத்தாள். அதுகேட்டு அவன் லிசாந்தரை நான் இந்தக்ஷணமேபோய்ப் பிடித்துவருகிறேனென்று புறப்பட, அதைப் பற்றியே அவளும் அவனைத் தொடர்ந்து இவ்வனத்துக்கு வந்தாள்.

அவளைக் கண்டுகோபித்துத் தெமித்திரியஸ் தனியே விட்டு ஓடிப்போக, அவள் அந்த நடுக்காட்டில் ஆதரவற்று அநாதையாய் அழுது அவனைத் தேடிக்கொண்டுபோகையில், லிசாந்தர் படுத்துத் தூங்குமிடம் போய்ச்சேர்ந்தாள். அவனைக் கண்டு அவள், ஓ! இங்கு தரையில் விழுந்திருப்பது லிசாந்தர்போலக் காண்கிறதே! இவர் இறந்தவரோ, அல்லது உயிரோடு உறங்குகிறவரோ என்று ஐயமுற்று அவனிடம் சென்று கையினால் மெல்லப் பரிசித்துப் பார்த்து, "ஐயா, உயிரோடிருந்தால் எழுந்திருங்கள்" என்றாள். அதுகேட்டு அவன் கண்விழித்துப்பார்த்து உடனே ஆசைமருந்தின் மயக்கமேறி, அவளைப்பார்த்துப் பல இனிய பேச்சுகள் பேசி, அழகில் அவளுக்கும் எரிமியாவுக்கும் கருடனுக்கும் காக்கைக்கும் உள்ள வேற்றுமை உண்டென்றும், அவளுக்காகத் தான் அக்கினிப்பிரவேசம் முதலிய எவ்விதமான சாகசச்செயலும் செய்யத்துணிந்தவனெனவும் இப்படி பல பேச்சுகள் பேசினான். லிசாந்தர் தன் உயிர்த்தோழியான எரிமியாவை உள்ளூற நேசித்தவனெனவும், அவளையே விவாகம் செய்துகொள்வதற்கு வேண்டிய முயற்சிகள் ரகசியத்திலேயே நடந்தேறிவருகின்றனவெனவும் அவளுக்கு நன்றாய்த் தெரியுமாதலின், அவன் அதை விட்டுத் தன்னை அவ்விதமாக விரும்பி அழைப்பதைக் கேட்கையில்,

அவன் தன்னைப் பரிகாசம் செய்கிறானென்றெண்ணித் தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு, அதிக கோபத்தோடு அவ்விடம்விட்டுச் சரேலென்று சென்றாள். எரிமியா இன்னும் எழுந்திராமல் அவ்விடத்திலேயே படுத்திருந்தும் விசாந்தர் அவளை முற்றும் மறந்து எலீனாவைத் தொடர்ந்து ஓடினான்.

எரிமியா தூக்கம்தெளிந்து எழுந்துபார்த்தபொழுது அண்டையில் ஒருவருமில்லை; தன்னந்தனியே நடுக்காட்டில் நிற்கக்கண்டு மிகவும் அச்சமுற்று விசாந்தர் போனவழி தெரியாமல் அவனைத் தேடிக்கொண்டோடினாள். இதற்குள் தெமித்திரியஸைத் தேடிப்போன எலீனா அவன் தூக்கம் தெளிகிற தருணத்தில் அவனெதிரே போய் நின்றாள். தெமித்திரியஸ் கண்விழித்ததும் எலீனாவைக் கண்டு ஆபானிட்ட மருந்தின் மகிமையால் அவள்மேல் அதிக விருப்பமுற்று, என் காதற்கிளியே, நெடுநேரமாக நான் உன்னை எங்கும் தேடித்திரிகிறேனே; இந்நேரம் நீ எங்கிருந்தாய் என்றான். இதற்குள் விசாந்தனைத் தேடிப்போன எரிமியா அவனைக் கண்டுபிடிக்க, அவ்விருவரும் அத்தருணத்தில் அவ்விடம் வந்துசேர்ந்தார்கள்.

தெமித்திரியஸும், விசாந்தருமாகிய இருவரும் தன்னைப் பார்த்து அப்படி பேசக்கண்டு எலீனா, எரிமியாவும் அவர்களுமாய்ச் சங்கேதம் செய்துகொண்டு, தன்னை இகழ்ந்து ஏளனம் செய்கிறார்களென்று எண்ணினாள்.

அதுவரையில் தன்னையே நேசித்திருந்த அவ்விருவரும் அப்பொழுது எலீனாவை நேசிக்கப் புகுந்ததைப்பார்க்க, எரிமியாவுக்கும் ஆச்சரியமாயிற்றென்றாலும், அது அவளுக்குப் பரிகாசமாகத் தோன்றவில்லை.

நெடுநாளாக உயிர்த்தோழிகளாயிருந்த அவ்விரண்டு பெண்களுக்கும் இது காரணமாகக் கலகமுண்டாயிற்று. அப்பெண்கள் மிகக் கோபத்தோடு கலகம் செய்துகொண்டு



இருக்கையில், தெமித்திரியஸும் விசாந்தரும் சண்டைபோட்டுக்கொண்டு மற்றோரிடம் சென்றார்கள். சிறிதுநேரம் கழித்துப்பார்த்து அப்பெண்கள் அவர்களைக் காணாது தேடிக்கொண்டு தனித்தனி பிரிந்துபோய்விட்டார்கள்.

இவற்றையெல்லாம் நோக்கப்பார்த்திருந்த மோகினிராஜன் தன் மந்திரியைப்பார்த்து, பக்கனே, நீ செய்த செயலால் விளைந்த விபரீதத்தைப் பார்த்தாயா? 'பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்ததே.' ஐயோ பாவம், நாம் இவர்களை எப்படியாவது சமாதானப்படுத்தியனுப்ப வேண்டும். தெமித்திரியஸும் விசாந்தரும் சண்டைசெய்வதற்குத் தகமான இடந்தேடிச் சென்றார்களல்லவா! நீ அவ்விடத்தில் ஒருவர்முகம் ஒருவர்க்குத் தெரியாதபடி மிகக் கனமான மூடுபனி உண்டாக்கி, பின்பு அவர்களுள் ஒவ்வொருவனுக்கும் ஆள்தெரியாமலே குரலால் அவன் எதிரி போலக் காட்டி, அவனவன் அதிக ஆக்கிரகத்தோடு உன்னைத் தொடர்ந்தோடிவரும்படி மிகக் கோபம் உண்டாக்கி, அவ்விருவரையும் அடியெடுத்து வைக்கக்கூடாமல் ஓய்ந்துபோமளவும் சுற்றடி; ஆகனால் அயர்ந்து அவ்விருவரும் தூங்கிப்போவார்கள். அத்தருணம்கண்டு நீ இதோ இந்த ஒருவித மலரின் மகரந்தத்தை விசாந்தருடைய கண்ணில் பிழிந்துவிடு; பிழிந்தால் அவனுக்குப் புதிதாய் எலீனாவினிடத்தில் உண்டான நேசம்மாறிப் பழையபடி எரிமியாவினிடத்திலேயே நேசம் உண்டாகிவிடும். அதுகண்டு அப்பெண்கள் இதுவரையில் தாம் கண்ட காட்சியெல்லாம் ஏதோ ஒரு கெட்ட கனவென்று எண்ணி மிக்க மனமகிழ்வார்கள். பக்கனே, நீ துரிதமாகச்சென்று இக்காரியத்தை நிறைவேற்று; நமது திதானியாவின் வரலாறு என்னவாயிற்றோ? நான் போய்ப் பார்த்துவருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

பக்கனும் தான் செய்த பிழையைத் திருத்தவேண்டுமென்று அந்த விஷயத்தில் அதிக ஊக்கங்கொண்டவனாய் அவ்வோரிடத்தில் மூடுபனி உண்டாக்கி, அந்நாலவரையும் ஒருவருக்கொருவர் தெரியாமல் அம்மூடுபனியில் ஒரே இடத்தில் இழுத்துவந்து தூங்கச்செய்தான். பின்பு தன் அரசன் கொடுத்த முறிப்பினால், லிசாந்தருக்கு உண்டான மயக்கத்தையும் மாற்றிவிட்டான்.

அவர்கள் தூங்கியெழும்பொழுது முதலில் எர்மியா எழுந்தாள். எழுந்துபார்க்கையில், தான் காணாது தேடிவந்த லிசாந்தர் தன் அண்டையிலேயே நித்திரைசெய்துகொண்டிருக்கக்கண்டு அகமகிழ்ந்தாள். உடனே லிசாந்தரும் கண்விழித்துக்கொண்டு பார்த்தான். ஆ, இப்பொழுது அவனுக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்! முன் இருந்த மயக்கமெல்லாம் மாறி மனது மிகத் தெளிவாயிற்று; எர்மியாவுடன் ஆனந்தமாய்ப் பேசலானான். இருவரும் தாங்கள் இரவில் பட்டபாடுகளைப் பேசிக்கொள்ள, இதென்ன? இவையெல்லாம் உண்மையாகவே நடந்தவையோ? அல்லது இருவரும் ஒரேவிதமாகவே கெட்டகனவு கண்டோமா என்று சொல்லி அதிசயித்தார்கள்.

இதற்குள் எலினா, தெமித்திரியஸ் என்பவர்களும் எழுந்தார்கள். அந்நேரம் அமைதியாய்த் தூங்கவே எலினாவுக்கிருந்த கோபங்கள் மாறித் தெமித்திரியஸ் தன்னை நேசிப்பது நியாயமேயென்று நினைந்தாள்.

இரவெல்லாம் அலைந்தோடித்திரிந்த அந்தப் பெண்களும் ஒருவரை ஒருவர் பகைப்பதைவிட்டுப் பழையபடிப் பிரீதியுடையவராகி இனிச் செய்யவேண்டுவதென்னவென்று ஆலோசிக்கலானார்கள். தெமித்திரியஸ் எர்மியாவை விவாகம் செய்துகொள்வதாகப் பாசாங்கு செய்துவந்ததையொழித்து, உடனே எர்மியாவின் தந்தையிடம்சென்று தன் தீர்மா



னத்தை அவனிடம் வெளியிட்டு, எர்மியாவுக்காகப் பிறந்த கொலைத்தீர்ப்பைத் தள்ளிவிடும்படிக் கேட்கச்சொல்லவேண்டுமென நிச்சயித்தார்கள். அப்படியே அவன் தன் உட்கருத்தை அறிவிக்கப் பட்டணம்போவதற்கிருக்கையில், தன் மகளைக் காணாமல் தேடிக்கொண்டு எர்மியாவின் தந்தை தானே அவ்வனத்திற்கு வந்தான். மகளைப் பார்த்ததுமன்றியில் அவர்கள் செய்துகொண்டிருந்த ஏற்பாட்டைக் கேட்க அவனுக்கு அதிக சந்தோஷமாயிற்று. என்றையதினம் எர்மியாவைக் கொல்லும்படி தீர்ப்புபிறந்ததோ அன்றையதினமே அவளுக்கும் லிசாந்தருக்கும் கலியாணம் நடத்தும்படி நிச்சயமாயிற்று. அன்றே எலினாவும் தெமித்திரியஸை விவாகம் செய்துகொள்ளும்படி ஏற்பாடுசெய்தார்கள்.

இதற்குள் அம்மோகினிராஜனும் தன் மருந்தின் மகிமையால் மனையாட்டியை வசஞ்செய்துகொண்டு அவளுடனே அவ்விடம் வந்து, நடந்த நடத்தையாவும் பார்த்திருந்தான். தாங்கள் செய்த சகாயத்தால் அவர்கள் இவ்வாறு சமாதானம்செய்துகொண்டு சந்தோஷமாய்ப் போகக்கண்டு மோகினி தம்பதிகள் மிகக் களிப்புற்று, அவர்களுக்குக் கலியாணம் நடக்கும்பொழுது தாமும் தம் இனங்களோடு விருந்தமாய்ப் பண்டிகைகொண்டாடவேண்டுமென்று சொல்லிக்கொண்டு தம்மிடத்திற்குச் சென்றார்கள்.

# பாலிடோர், காட்வல் என்பவர்கள் கதை.

நெடுநாளைக்குமுன்னே இங்கிலாந்தை அடுத்த வேல்ஸ் தேசத்தில் ஒரு மலைக்குகையில் ஒரு கிழவனும் இரண்டு குமாரர்களும் வசித்துக்கொண்டிருந்தார்கள். அந்தக் கிழவனுக்கு மார்க்கன் என்று பெயர். இரண்டு வாலிபர்களுக்கும் பாலிடோர் என்றும், காட்வல் என்றும் பெயர். அவ்விருவரும் சகோதரர்கள். தங்களுக்குச் செம்மையாய்ப் புத்தி தெரியுமளவும் அச்சிறுவர்கள், மார்க்கன் அவன் பெண்சாதியான யூரிபில் இவர்களோடு, அந்தக் குகையிலேயே வசித்துக்கொண்டிருந்தார்கள். அவ்விருவரையும் அச்சிறுவர்கள் தம் பெற்றோர்களென்று நினைத்து மனப்பூர்வமாய் ஆசைவைத்து நம்பி அவர்களுக்கு அடங்கி ஆட்பட்டுவந்தார்கள். அப்படியிருக்க யூரிபில் இறந்துபோகவே மற்ற மூவருமே அங்கு தனித்திருக்கும்படியாயிற்று. ஒரு மனிதர் கூட அம்மலைக்குகையில் அவர்களைப் பார்க்கவரவில்லை; அவர்களும் ஒருநாளை வேட்டைக்குச் செல்வதைப்பார்க்கிலும் அதிகதூரம் அவ்விடம்விட்டுச் சென்றதில்லை. இப்படியாக அப்பிள்ளைகள் கொஞ்சமும் கல்விப்பயிற்சியில்லாமலே அவ்வனத்தில் வாசஞ்செய்துகொண்டிருந்தார்களாயினும், சிறிதும் நற்போதனையில்லாத முரட்டுக் காட்டுமனிதர்போலாகவில்லை. மார்க்கனென்பவன் வாலிபத்தில் ராஜாங்க உத்தியோகத்திற்சேர்ந்து மிகச் சூரனான சேனாபதியா



யிருந்து உலக வியாபாரத்தில் ஊடாடிப்பழகினவனாதலால், பிறரிடத்தில் பொறுமையும் பூததயைபச்சாத்தாபமும் உடையவர்களாயிருப்பதோடுகூடத் தைரியமும் துணிவும் உள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று அப்பிள்ளைகளுக்குப் போதனைசெய்துவந்தான். இப்படியாக அவர்கள் காலமறிந்து கற்பிக்கப்பட்டார்களாதலால், உண்மை உபகாரம், நம்பிக்கை நாணயம், வீரச்செயலோ நேசச்செயலோ, செய்கருமத்தில் சுறுக்கு முதலிய பல நற்குணங்களோடு பெருந்தன்மைபொருந்தி வளர்ந்துவந்தார்கள்.

பகற்பொழுதை வெகுவாய் அவர்கள் வேட்டையிலேயே கழித்துவரவேண்டியிருந்தது. வேடிக்கையாய்க் காலங்கழிப்பதற்காகவன்று; முக்கியமாய் இரைதேடிக்கொள்வதற்காகவே அப்படிச் செய்துவரவேண்டியதாயிற்று. வேட்டையாடி வீடுவந்து சேர்ந்ததும் தாங்கள் கொண்டுவந்த பொருளை அவர்கள்தாமே சமைத்துச் சாப்பிடவேண்டும். அப்படியிருந்தும் பட்டணத்தில் பஞ்சணைமேல் படுத்திருப்பவர்களைப்பார்க்கிலும், பாறைமேல் பரப்பிய தழைப்பள்ளியிலே அவர்கள் இரவில் அமைதியாக மெய்ம்மறந்து கண்வளருவார்கள்.

ஒருநாள் மார்க்கனும் மற்றச் சிறுவர் இருவருமாய் வேட்டைக்குப் போய்த் தாங்கள் தேடியபொருளோடு மாலையில் திரும்பித் தம்மிடம் வந்தார்கள். அவர்கள் தம் குகையினுள் புகுந்துபார்க்கையில், யாரோ ஒரு வழிப்போக்கனான வாலிபன் அவ்விடம்வந்து அவர்கள் முதனாள் தேடிவைத்திருந்த பழைய போஜனத்தைப் புசித்துக்கொண்டிருந்தான். அதுகண்டு அவர்கள் இதென்ன ஆச்சரியமென்று பிரமித்து நின்றார்கள்.

அந்தப் புதுமனிதன் இம்மூவரும் வரக்கண்டவுடனே எதிர்கொண்டெழுந்துபோய்த் தனக்கு யாதொரு தீங்கும்செ

ய்யாதிருக்கும்படி அவர்களை வணங்கி வேண்டிக்கொண்டு, தான் அந்தக் குகையினின்றும் அவர்கள் உணவையாவது மற்றெந்தப் பொருளையாவது திருடிக்கொள்ளவேண்டுமென்று எவ்வளவும் எண்ணினவனன்று; ஆயினும் தனக்குப் பசித்துப் பிராணன்போகிற தருணமாயிருந்ததுபற்றி அங்கு அகப்பட்ட உணவை உண்ண உடன்பட்டு, அவ்விடம் விட்டுப்போம்போது அவ்வுணவிற்குப் போதுமான பணத்தை அதனருகே வைத்துப்போம்படித் தீர்மானித்ததுமன்றி, சிறிதும் மனிதப்பூண்டேயில்லாத அம்மலை வெளியிலே தனக்கு அப்படிப்பட்ட ஆபத்துவேளையில் உயிர்காக்கும்படி உணவு தேடிவைத்திருந்த மகோபகாரிகளை மனங்குளிர வாழ்த்திப்போம்படியாகவும் நிச்சயித்திருந்ததாக நயந்துரைத்தான்.

பணமென்ற சொல்லைக் கேட்டவுடனே பாலிடோர் கொஞ்சம் கோபங்கொண்டவனாய், பணமா பிள்ளாய் என்று கேட்டான். பின்பு மார்க்கன், அவன் அன்னமிட்டார் வீட்டில் கன்னமிடுகிற கருத்துள்ள கொடியனல்லவென்று கண்டு, அவன் யார், எங்கேபோகிறவன்? என்று அவனுடைய யோகக்ஷேமங்களை வினவ, அவ்வாலிபன், தன் பெயர் பிடிலி என்றும், இத்தாலி தேசத்தினின்றும் வருகிற தன் உறவினனொருவனைச் சந்தித்துக் காணும்படி வேல்ஸ் தேசத்து மில்போர்ட்டு நகரத்திற்குப் போவதாகவும் விடை கொடுத்தான். அதைக் கேட்டவுடனே மார்க்கன் சந்தோஷமாய் அவனை நல்வரவு விசாரித்து, அப்பொழுது அஸ்தமிக்கிற தருணமாயினதினால் அவ்விரவு அங்கேயே இருந்துபோம்படி அவனை வேண்டினான். அச்சிறுவர்களும் தமக்குத் தற்செயலாய்த் தோழனொருவன் கிடைத்தானென்று மிகக் களிப்படைந்தவர்களாய், அவனைத் தமது சகோதரன்போல சிநேகிக்கலானார்கள்.



மறுநாள்காலையில் பாலிடோர், காட்வல் முதலியவர்கள் வேட்டைக்குப் புறப்படுகிற தருணத்தில் பிடிலி மிகவும் களைத்துத் தேகசவுக்கியமில்லாமல் அந்தக் குகையைவிட்டு ஒரு அடி எடுத்துவைக்கக்கூடச் சக்தியற்றிருந்தான். அது கண்டு அவர்கள் தாம் வேட்டைக்குப்போய் வருமளவும் அங்கேயே இருக்கும்படி அவனை வேண்டிக்கொண்டு அவனுக்குத் துணையாகப் பாலிடோரும் அங்கேயே நிற்கும்படியாக நிச்சயித்தார்கள். அதுதெரிந்து பிடிலி, தனக்குத் தேகசவுக்கியமில்லாதிருப்பினும், தான் தனியே இருப்பதைவிடத் துணையொருவனிருப்பதில் தனக்கு யாதொரு நன்மையுமில்லையென்றுசொல்லி, பாலிடோர் வீணாய்த் தன்னுடன் நிற்கவேண்டாமென்றான். அப்படியே மார்க்கனும் மற்றிரண்டு சிறுவர்களும் வேட்டைக்குப் புறப்பட்டார்கள். புறப்பட்டுச் சிறிதுதூரம் போகையில் மலைமேல் ஒரு பேரிரைச்சல் உண்டாயிற்று. அது கேட்ட சில நிமிஷத்தில் ஒரு பாறையின் மறைவிலிருந்து ஒருவன் வெளித் தோன்றினான். அது ஒருநாளுமில்லாத அற்புதக்காட்சியாயிருக்கவே அவனைப் பார்த்தவுடனே மார்க்கன் இதென்னவென்று திடுக்கிட்டு, சாதாரணமாய் அம்மலைக்குகைகளில் ஒளித்துத் திரியும் கள்ளர்கூட்டத்தில் இவன் ஒருவனாயிருக்கலாமென்றான். அதுகண்டு பாலிடோர், இவன் யாரோ நான் போய் விசாரித்துவிட்டுவருகிறேன், இன்னும் யாராவது சந்துபொந்துகளில் ஒளித்திருக்கிறார்களாவென நீங்கள் பார்த்துவாருங்களென்று சொல்லி அவனை நோக்கிச் சென்றான். கிட்டப்போனவுடனே அந்தக் காட்டுமனிதன் பாலிடோரைப்பார்த்து, பர்வதத்தில் வசிக்கும் பாதகனென்றும் நீசனென்றும் கள்ளனென்றும் மிகக் கடுஞ்சொல்லாய் வெருட்டித் தனக்கு அடிமையாகும்படி அதட்டினான்.

அதன்மேல் அவ்விருவர்க்கும் நடந்த
வாக்குவாதமாவது:

பாலிடோர்: "அது அப்படியிருக்கட்டும், நீ யார், நானேன் உனக்கு ஆட்படவேண்டும்?"

கிளோடன்: "என் ஆடையைப் பார்க்கும்போதே கொடிய செயல்செய்யக் காத்திருக்கும் கிராதகன் யானென, உனக்குத் தெரியவில்லையா?"

பாலி: "யான் உன் ஆடையையும் அறியேன், உன் ஆடைதைத்த தையற்காரனையும் அறியேன், உன் பெயரென்ன?"

கிளோ: "என் பெயரைக் கேட்டவுடனே நீ நடுநடுங்கி நாசமுறுவாயே நீசனே! கிளோடன் என்று நீ கேள்விப்பட்டதில்லையா?"

பாலி: "கிளோடனோ, பிளோடனோ! எனக்குத் தெரியாது, எதுவானால் எனக்கென்ன? ஈ எறும்புகளைக்கண்டாலும் ஒருவேளை அந்தளவு அச்சமுண்டாகும். இப்பெயரைக் கேட்கையில் எனக்கு அதுவுமில்லை."

கிளோ: "ஆயின் உன் உள்ளம் நடுங்குமாறு ஒன்று சொல்லுகிறேன்; நான் மகாராணியின் மகன்."

பாலி: "ஐயோ! ஆனால் உன்னைப்பார்க்க எனக்கு நடுக்கமில்லை, மிகப் பரிதாபமுண்டாகின்றது. அவ்வுயர்குலப் பிறப்புக்கேற்ற பெருந்தன்மை உன்னிடத்தில் ஒன்றுமில்லையே!"

கிளோ: "ஆயின் இப்போது உனக்கு என்னைப்பார்க்கப் பயமுண்டாகவில்லையா?"

பாலி: "எவரிடத்தில் எனக்குக் கௌரவம் உண்டாகிறதோ அவரிடத்திலேதான் அச்சமும் உண்டாகும்; அதாவது அறிவுடையோரிடத்திலேதான்."



கிளோ: "ஆயின் உன் ஆயுள் இன்றோடு ஒழிந்ததென்று உணர்க்கடவை" என்று உரைத்துக் கத்தியை உருவிக் கையிலேந்திக் கிளோடன் பாலிடோரின்மேற் பாய்ந்தான்.

பாலிடோர் கிளோடனவ்வளவு பருத்ததேகம் உடையவனல்லவாயினும் அவனைவிட விசேஷமாய்த் தேகவலிமையும் அஸ்தலாகவமும் உள்ளவன். அதனால் அவன் கிளோடன் கையிலிருந்த கத்தியை எளிதிலே பிடுங்கிக் கைக்கொண்டு அதை அவன் மேலேயே செலுத்தினான். இப்படியாகத் தன் அகங்காரத்தாலும் ஆக்கிரகத்தாலும் பாலிடோரைக் கொல்லும்படி எடுத்த தன் கைக்கத்தியாலேயே கிளோடன் வீழ்ந்து மடிந்துபோனான்.

மார்க்கனும் காட்வலும் புதர்களிலும் பாறைச் சந்துகளிலும் நன்றாய்த் தேடி அங்கொருவரும் ஒளிந்திருக்கக்காணாமல் அத்தருணத்தில் அவ்விடம்வந்து சேர்ந்தார்கள். இறந்த மனிதனுடைய முகத்தைப் பார்த்தவுடனே அவன் ராணியின் மகனென்றறிந்து மார்க்கன் மிகவும் பயந்து மனங்கலங்கி நின்றான். வெகுநாளைக்கு முன்னமே மார்க்கன் அவனை ராஜமாளிகையில் பார்த்திருக்கிறான். அப்போது அவன் மிகவும் மூடனாயும், வரவரக் கொடிய துர்மார்க்கனாகத்தக்க துஷ்டனாயும் இருந்ததும், அவனுக்கு நன்றாய்த் தெரியும்.

இவ்வளவுநேரத்தில் பகற்போசன வேளையாய்விட்டது. அதனால் பாலிடோரும் தானுமாய் அங்கேயிருந்து கிளோடனுடைய உடலை அடக்கஞ்செய்வதாகச்சொல்லி, அந்நேரத்திற்குள் குகைக்குச்சென்று பிடிலியோடுகூடக் கொஞ்சம் சாப்பாடு சித்தம்செய்யும்படி மார்க்கன் காட்வலைக் குகைக்கு அனுப்பினான்.

காட்வல்போன சிறிதுநேரத்துக்கெல்லாம் குகையில் முன் மார்க்கன் செய்துவைத்திருந்த சங்கீதயந்திரத்தின்

முழக்கங்கேட்டது. பூமியில் இறந்துபோன நாள்முதல் அந்த வாத்தியத்தை ஒருபோதும் வாசித்ததில்லை. காட்வல் இப்போது திடீரென்று சாவுவாத்தியம் வாசித்ததற்கு யாதுகாரணமென்று மார்க்கனும் பாலிடோரும் சந்தேகித்து ஆலோசித்துக்கொண்டிருக்கையில், பிடிலியை மெதுவாய்த் தோளிலே தூக்கிக்கொண்டு காட்வல் தங்களிடம் வரக் கண்டார்கள். அப்போதுதான் புதிதாய்க் கிடைத்துத் தாங்கள் சகோதரனாகவே பாவித்துவந்த தோழன் இப்படி திடீரென்று உயிரிழந்திருக்கக்காணவே, அச்சிறுவர்களுக்கு அதிக விசனமுண்டாயிற்று. நான் போனபோது கூப்பின கையும் சிரித்தமுகமுமாய்ப் பிடிலி தரையில் படுத்திருந்ததும், அதுகண்டு அவன் கண்வளர்வதாக நினைத்து எங்கே அவன் தூக்கத்துக்குத் தடையுண்டாகுமோவென்று காலடியோசைகூடக்கேளாமல் தான் மெதுவாய் அண்டையிலே போய்ப் பார்க்கையில் பேச்சுமூச்சு ஒன்றுமில்லாமல் அவன் அசைவற்றுக்கிடந்ததுமாகிய தான் கண்ட காட்சியையெல்லாம் காட்வல் அவர்களுக்கு உரைத்தான்.

பின்பு அச்சிறுவர்கள் அவனைத் தங்கள் தாயை அடக்கஞ்செய்தவிடத்திற்கு அருகே அவ்வளவு சிறப்பாகவே அடக்கஞ்செய்யத் தீர்மானித்தார்கள். ஆயினும், செத்த பிணமாயினும் சிறிதும் விகாரப்படாமலிருந்த அவ்வழகிய உருவத்தை உருக்குலையுமாறு பூமியின் அடிப்புறத்தில் அடக்கஞ்செய்ய மனந்துணியாமல், தரையின்மேல் பசும்புல்லிலே விட்டு மெல்லிய மலர்களாலும் தளிர்களாலும் மூடிவிடுகிறதென்று நிச்சயித்து, சிறந்த மலர்களும் இலைகளும் தேடிவந்து அப்படியே செய்துவிட்டுத் தம் இருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள். பின்பு அநேகவிதமாய்ச் சிலகாலஞ்சென்றது.

கடைசியில் அவர்கள் அம்மலையைவிட்டுப்போய் மனிதர்களோடு சேர்ந்து உலகவியாபாரத்தில் நடமாடும்படியான



காலம் வந்தது. ஒருநாள் மாலையில் அவர்கள் தங்குகையைவிட்டு வெளிப்பட்டபோது யாவரும் அஞ்சி நடுங்கத் தக்க இரைச்சலும் ஆரவாரமும் கேட்டது. அம்மலைமுழுதும் பிரதித்தொனியிட்டு உண்டாகும் அவ்விரைச்சல் இன்னதென்று தெரியாமல் அச்சிறுவர்கள் சந்தேகித்து நிற்க, இது அமர்க்களத்திலுண்டாகும் இரைச்சலென்றும், பிரித்தானியர்க்கும் ரோமாபுரியார்க்கும் பெரும்போர் நடந்தேறுவதுபோலிருக்கிறதென்றும் மார்க்கன் அவர்களுக்குத் தெரியச்சொல்லி, இந்த யுத்தம் ஓயுமளவும் இம்மலையில் இன்னும் உயர ஓடிப்போய் ஒளித்திருப்போம் வாருங்களென்று அவர்களை வேண்டினான்.

அதுகேட்டுக் காட்வல், அப்படியா, அது ஒருபோதும் செய்யலாகாது. ஒருகாரியமும் செய்யாதவர்களுக்குக் கைகாலிருந்தாலதென்ன, பிறர்க்கு உதவிசெய்யாதவன் உயிரோடிருந்தாலதென்னவென்றான். பாலிடோரும், எதிரிகளை எதிர்த்துத் தமது தேசத்தார்க்குத் துணைசெய்யப் போகத் தங்களை ஆசிர்வதித்து அனுப்பும்படி மார்க்கனை வேண்டினான். அச்சிறுவர்களுக்குச் சண்டைசெய்வதிலிருக்கும் ஆவலை நன்றாய் அறிந்து மார்க்கன் அதை மறுக்கமாட்டாமல் அப்படியே ஆகட்டுமென்று சம்மதித்துத் தானும் அவர்களோடு கூடப்போக நிச்சயித்தான். உடனே அவர்கள் அம்மலையைவிட்டு இறங்கி போர்ச்சேனையோடு சேரப்போனார்கள். அப்போது அனைவரும் கடைசியாய் உயிர்க்குத் துணிந்து சண்டைசெய்யும் தருணம். உடனே பிரித்தானியர் தோல்வியடைந்து சிம்பலயன் என்னும் தம் அரசனை எதிரிகையில் சிறையாக விட்டுவிட்டு ஒரு சிறு சந்தின்வழியாக ஓடத் தலைப்பட்டார்கள். அத்தருணங்கண்டு மார்க்கனும் மற்றிரண்டு சிறுவர்களும் அச்சந்தின் முனையிலே போய் நின்று ஒருவரையும் ஓடவ்

போகவொட்டாமல் மடக்கி, ஓடிவருகிறவர்களைப் பார்த்து, ஓடவேண்டாம், ஓடவேண்டாம், நில்லுங்கள்! பகைவர்களுக்குப் பின்புறம் காட்டி ஓடுவதோ வீரர்க்கு அடையாளம்! எதிர்த்துப் போராடுங்கள்; ஜயித்தால் ராஜ்யம் மரித்தால் வீரச்சொர்க்கமென்று சொல்லித் தைரியப்படுத்தினார்கள். இப்படி அவர்கள் ஓடுகிறவர்களுக்கெல்லாம் உற்சாகமுண்டாக்கிவந்ததனால், முடிந்தசண்டை மறுக்களிக்கும்படியாயிற்று. பிரித்தானியரெல்லாம் ஓடிப்போக வழியில்லாமல் திரும்பி ரோமாபுரியாரை எதிர்த்தார்கள். மேலும் அவர்கள், இந்தத் தாடிநரைத்த கிழவனும், தைரியமும் துணிவும் உற்சாகமும் சுறுசுறுப்புமுள்ள இருவர்களும் ஆபத்துவேளையில் தமக்குக் கைகொடுக்கவந்த தேவதைகளேயென்றெண்ணி அதிக ஊக்கத்தோடு அமர்புரிந்தார்கள்; சத்துருக்கள் கையில் சிறையாயிருந்த சிம்பலயனும் சிறைமீக்கப்பட்டான். ரோமாபுரியாரும் தோல்வியடைந்து ஓடிப்போனார்கள்.

இப்படியாக யுத்தம் முடிவுபெற்றவுடனே சிம்பலயன் என்னும் அரசன் தன் அமைச்சன் முதலியவர்களையெல்லாம் கூடாரத்தில் சபைசேர்த்து, அவ்வளவு பராக்கிரமமாய் எதிரிகளை எதிர்த்துத் தம்மைச் சிறைமீக்கிய நிமித்தம் அம்மூன்று வீரர்களுக்கும் தான் நேராய்த் தலைவணங்கி வந்தனம் செய்யவேண்டுமெனத் தீர்மானித்தான். அவர்களை வரவழைத்துத் தன் வலப்புறத்தில் உட்காருவித்து மேன்மைப்படுத்தி, உயர்ந்த அதிகாரம் கொடுத்து அவர்களைத் தன்னிடத்திலேயே வைத்துக்கொள்வதாயும், அவர்களுக்கு வேண்டுமளவு பொருள்கொடுத்து விசேஷமாய்க் காணிபூமிகளும் விடுவதாயும் சொல்லிச் சந்தோஷிப்பித்தான்.

இப்படியிருக்கும்பொழுது அவர்கள் ஓர் அதிசயக்காட்சி கண்டார்கள். ரோமாபுரியார் சிலபேர் சிறையாய் அவ்



விடத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். கந்தைத்துணியும் அணையுமாய் எளிய போர்வீரனொருவன் அவர்களைப் பின்தொடர்ந்துவந்தான். அவன் பயந்தோடின பிரித்தானியனைத் திருப்பும்பொழுது மார்க்கனுக்கும் மற்றிரண்டு சிறுவர்களுக்கும் துணையாயிருந்தவன். அவன் பின்னே மற்றொருவன் வந்தான். மலையிலே இறந்தானென்று மார்க்கன்முதலியவர் விசனத்தோடு விட்டுவந்த பிடிலியேயொழிய இவன் வேறல்லன். பின்பு பிடிலியும் அரசனும் ஏகாந்தமாய்ச் சிறிதுநேரம் பேச்சாடினார்கள். அதற்குள் அங்கிருந்தவர் அனைவரும், பிடிலி அரசன் மகளான இமோகனும், கந்தைத்துணியோடு வந்தவன் அவளுடைய கணவனான லீனசுமேயொழிய மற்றெவரும் அல்லவெனக் கொசகொசவென்று பேசிக்கொண்டார்கள். இமோகனுடைய மாற்றாந்தாய் மிகக் கொடியவளாய், அவ்வளவு சவுந்தரியமும் சற்குணமுமுள்ள சிறுமியையும் பகைத்து அவளை வாழாமல் வைக்கக்கருதி அவளுடைய கணவனை ஏற்ற உபாயஞ்செய்து தேசாந்தரத்திற்கு அனுப்பிவிட்டாளென்பது எல்லோர்க்கும் தெரியும். இப்போது அவ்விருவரும் எப்படி ஒன்றாய்ச் சேர்ந்துவந்தார்களோ யாரும் அறியார்கள். ஆயினும் அது நேர்ந்தவிதம் எப்படியெனின், நான் வேல்ஸ் மாகாணத்து மில்போர்ட்டு நகரத்தில் வந்து சேருகிறேன்; நீ அவசியம் அங்குவந்து என்னுடன் சேரவேண்டுமென்று லீனச எழுதிய கடிதமொன்று வரவே, இமோகன் உடனே அவ்விடத்திற்குப்போய்த் தன் கணவனைக் காணக்கருதினாள். உண்மை தவறாத ஒரு சேவகனுடைய சகாயத்தால் அவள் அந்தப்புறத்தினின்று ஒருவர்க்குந் தெரியாமல் வெளிப்பட்டு, ஒரு அபாயமுமின்றிப் பத்திரமாய் வழிகடந்து போகும்படி அவன் சொன்னவிதமாய்ப் பேதைமனிதன்போல வேஷந்தரித்துப் புறப்

பட்டான். போகும்போது கடைசியில் சிறிதுதூரம் துணையொருவருமின்றித் தானே காலால் நடந்துபோம்படி நேரிட்டது. அப்படிப் போகையில் வழிதப்பிப் பசியும் இளைப்பும் அதிகரித்து இறக்குந்தருணமாயிற்று. அந்த ஆபத்துவேளையிலேதான் மார்க்கனுடைய குகை அவளுக்கு ஆதாரவாயிற்று. மறுநாள் உடம்பு கொஞ்சம் அநுகூலமில்லாதிருப்பதுகண்டு, எக்காலத்திலும் உயிர்க்கு உத்தமமான மருந்தென்று தன் மாற்றாந்தாய் கொடுத்திருந்ததை எடுத்துப் புசித்தாள். அதைத் தின்றால் உடம்பு அநுகூலப்படும்; உடனே எழுந்து அப்புறம் போகலாமென்பது அவள் கொண்டகொள்கை. அம்மருந்தின் உண்மை என்னவெனில், கொலைக்கஞ்சாத பாதகியான ராணி முழுமூடனான கிளோடன் என்னும் தன் பிள்ளைக்கே பட்டங்கிடைக்கவேண்டுமென்றெண்ணி, அதற்கிடையூறான அம்மகளையும் அரசனையும் ஒருசேரக் கொன்றுவிடக்கருதி, அம்மருந்தை அதற்கேற்ற விஷமாக வைத்தியனிடத்திலின்றும் வாங்கிவைத்திருந்தாள். அவ்வைத்தியனோ அவளுடைய கெட்ட நினைவை அறிந்து அவள் கேட்டபடி விஷத்தையே கொடாமல் சிறிதுநேரம் மயக்கமுண்டாக்கத்தக்க மற்றொரு மருந்தைக் கொடுத்தான். ஆனதுபற்றியே இமோகன் அவர்கள் கண்ணுக்கு அம்மலையில் மரித்தவள்போலத் தோன்றினும் சிறிதும் வடிவழகு குன்றாதிருந்தாள். அவள் உள்ளபடி இறக்கவில்லை. அவர்கள் அவ்விடம் விட்டுப்போன சிறிதுநேரத்துக்கெல்லாம் அவள் மயக்கந்தெளிந்தெழுந்து மில்போர்ட்டுக்கு வழிதேடிப்போகப் புறப்பட்டாள். போய்ச் சேர்ந்ததும் இத்தாலி தேசத்திலின்றும் எளிய போர்ச்சேவகன்போல வேஷந்தரித்து வந்திருந்த கணவனோடுகூடிக் களிப்புற்றாள். அந்த மனிதனே இந்த யுத்தத்தில் அரசனுக்கு அபாய



முண்டாகாதபடி தன்னால் இயன்றமட்டும் உதவினான். இமோகன் இங்குவந்திருந்த தருணத்தில் அவளுடைய மாற்றாந்தாயான ராணி ஏதோ தனக்குத்தானே மனநோய்கொண்டு மாண்டுபோனாளாதலால், அப்புறமும் அவள் அரசனிடத்தில் அதிகாரம் செலுத்துவதற்கு இடமில்லை. ஆனதுபற்றி அரசன் அம்மகளையும் மருமகனையும் மனம்பரிந்து வரவழைத்துக்கொள்ளச் சித்தமாய்க் காத்திருந்தான்.

இப்படி அரசன் முதலியவர்களெல்லாம் கூடாரத்தில் கூடிக்கலந்து சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், யாரோ ஒருவன் கிளோடனைப்பற்றிப் பேசினான். அவன் இன்னவிதமானானென்று அவனுடைய செய்தி ஒருவர்க்கும் தெரியவில்லை. அத்தருணத்தில் பாலிடோர் நானே அவனைக் கொன்றேனென்று அஞ்சாமல் எடுத்துரைத்தான். அதைக்கேட்டு அரசன் திடுக்கிட்டு, இப்படி அம்மகனை அநியாயமாய்க் கொன்றதற்காக நம் உயிரைக் காத்த இந்தச் சூரனுக்கும் சிக்ஷைவிதிக்கவேண்டி வந்ததேயென்று விசனமடைந்தான். உடனே பாலிடோரைப் பிடித்துக் கொள்ளக் காவற்காரர்களும் வந்துவிட்டார்கள். அத்தருணத்தில் மார்க்கனெழுந்து, சற்று நிதானியுங்கள்! இவனைப் பிடிக்கவேண்டாம். இவனாற் கொலையுண்டவனைப்பார்க்க இவன் எவ்வளவோ உத்தமகுணமுள்ளவன். உண்மை உரைக்கப்புகின் இவன் அரசனுக்கு ஒப்பானவனே என்றான். அதைக்கேட்க அரசனுக்கு அதிக கோபமுண்டாயிற்று. என்ன நடக்குமோவென்று எல்லோரும் மார்க்கனை மலர்ந்தகண் மூடாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது மார்க்கன் யாவரும் கேட்டு வியந்துநிற்க மொழிந்ததாவது:—நான் இந்த மகாராஜாவினுடைய பழைய படைத்தலைவன்; பலரியஸ் எனப் பெயர்பெற்றவன். சில வருஷங்களுக்குமுன்னே சிம்பலயன் ஏதோ சில பொய்ப்பிரியாது கேட்டு நான் அவர்க்கு எவ்வளவோ அந்தரங்கனாயிருந்தும் அது தெரியாமல் தன் நாட்டைவிட்டு ஓடிப்

போம்படி எனக்குக் கட்டளையிட்டார். முதலில் அதைக் கேட்கவே எனக்கு அதிக ரோஷமுண்டாயிற்று; அரசனுடைய இரண்டு மக்களையும் அவர்களுடைய தாதியையும் திருடிக்கொண்டுபோய், அந்தத் தாதியை மணம்புரிந்துகொண்டேன். அச்சிறுவர்களுடைய சரியான பெயர் கிடரியஸ், ஆர்விரகஸ் என்பவையாயினும் பாலிடோர் என்றும் காட்வல் என்றும் நாங்கள் அவர்களுக்குப் புதுப் பெயரிட்டு வயிற்றிற்பிறந்த பிள்ளைகளைவிடப் பத்துபங்காய்ப் பரிவோடு பாதுகாத்துவந்தோம். இது அரசன் புதிதாய் மறுவிவாகஞ் செய்துகொண்டுவந்த புதுராணி மூத்தாளுடைய தாயில்லாப் பிள்ளைகளைப் பகைத்துவரும்தருணத்தில் நேர்ந்த செய்தியாதலால், காணாமற்போன பிள்ளைகளைத் தேடிப்பார்க்கப் பிரயத்தனமுண்டாகவேயில்லை என்றான்.

அவ்வளவு பராக்கிரமத்துடன் எதிரிகளை எதிர்த்துத் தன் உயிரைப் பாதுகாத்த பிள்ளைகள் இருவரும் தன்னுடைய பிள்ளைகளேயெனக் கேள்விப்பட்டபோது அவ்வரசனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு இவ்வளவென்று அளவுண்டோ? தன்னிடத்தில் அவ்வளவு அன்புபாராட்டிவரும் இரண்டு சிறுவரும் தங்கள் சிசுபிராயத்திலேயே தொட்டிலினின்றும் திருட்டுப்போன தன் தம்பியார்களென்று கேள்விப்பட்டு இமோகனும் ஆனந்தக்கடலுள் ஆழ்ந்தாள்.

இப்படியாகக் கடைசியில், தாங்கள் ஆதிதொடங்கி ஆசைகொண்டிருந்தபடியே கிடரியஸ், ஆர்விரகஸ் இவ்விருவரும் இவ்வுலகில் தமக்கேற்ற தொழில் கிடைத்துக் களிப்படையும்படியாயிற்று. இந்தச் சரித்திரம் உண்மையானால் அவ்வாலிபர்கள் உலகவியாபாரங்களில் ஊக்கத்தோடு பாடுபட்டுப் பிரித்தானி ராஜ்யத்து ஆட்சியைக் கைக்கொண்டு மேன்மையாக நெடுநாள் வாழ்ந்திருந்தார்களென்று சொல்லத்துணியலாம்.

# மிராந்தாவின் கதை.

அநேக வருஷங்களுக்குமுன்னே பிராஸ்பிரோ என்று ஒருவன் மிலன்நாட்டுக்கு அரசனாயிருந்தான். அவன் வெகு சமர்த்தன்; படிப்பிலேயே மிக்க விருப்பமுடையவனாய் மற்றெதையும் வெகுவாய் அலக்ஷியஞ் செய்திருந்தான். ராஜகாரியங்களையெல்லாம் தன் சகோதரனான அந்தோணியோ என்பவன் வசத்தில் ஒப்புவித்துவிட்டு அவன் புத்தகமுங் கையுமாயிருப்பதே வேலையாயிருந்தான். ஒவ்வொருவேளையில், மற்றெவரும் வந்து எட்டிப்பாராத தனிப்புறமான ஒரு இடத்திற்சென்று அங்கேயே தன் இஷ்டப்படி படிப்பதும் விஷயங்களை ஆலோசிப்பதுமாய் இருப்பான்.

பிராஸ்பிரோவுக்கு மிராந்தா என்று ஒரு பெண்குழந்தையுண்டு. அந்தக் குழந்தையைப் பெற்றவுடனே தாய் இறந்துபோனாள். ஆயினும் நாலைந்து தாதிமார்கள் அந்தப் பெண்ணைப் பால்கொடுத்து வளர்த்துவந்தார்கள். ஆதலின் அந்தக் குழந்தை தாயிறந்த துக்கமே தெரியாமல் அவர்களையே தாயாகப் பாவித்துச் சுகமாக வளர்ந்துவந்தது.

பிராஸ்பிரோ ஒரு வேலையும் பாராமல் படிப்பே காரியமாய் இருந்துகொண்டிருக்கையில், அந்தோணியோ தானே அத்தேசத்திற்குச் சுதந்திர ராஜாவாகிவிடவேண்டுமென்று

எண்ணங்கொண்டு அதற்குவேண்டிய தந்திரம் செய்யத் தொடங்கினான். சிலகாலையில் மகா வஞ்சகனான அந்தோனியோ நேபில்ஸ் நகரத்தரசனோடு நேசம்பாராட்டி, தன் சகோதரனைத் தள்ளிவிட்டுத் தானே தன் தேசத்திற்கு ராஜாவாவதற்கு அவன் தனக்குத் துணைசெய்கிறபக்ஷத்தில், அவனுக்குத் தான் வருஷந்தோறும் கப்பங்கட்டிக்கொண்டுவருவதாய்ச் சொல்லி அவனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டான்.

நேபில்ஸ்நகரத்தரசனும் பிராஸ்பிரோவுக்குப் பெரும் பகையாளியாயிருக்கவே, அந்தோனியோவின் சூதைச் சந்தோஷமாய் அங்கீகரித்து அவனுக்குச் சகாயமாகப் பெருஞ் சேனை அனுப்பினான். அர்த்தராத்திரியில் அந்தோனியோ தன் பட்டணத்துக் கோட்டைவாயிலைத் திறந்து நேபில்ஸ்நகரத்தரசன் அனுப்பிய சேனைக்கு வழிவிட, அந்தச் சேனைத் தலைவர் சிலர் உடனே உள்ளே புகுந்து பிராஸ்பிரோவின் வீட்டிற்சென்று அவனைச் சிறையாய்ப் பிடித்து, தொட்டிலில் படுத்துத் தூங்கின குழந்தையையும் புலம்பப்புலம்பப் பிடித்திழுத்துக்கொண்டு கப்பல்துறை கொண்டுசேர்த்து, அங்கே பாய்மரம் துடுப்பு கயிறு இவை ஒன்றுமில்லாமல் கிடந்த ஒரு பழைய படகிலே அவ்விருவரையும் போட்டுத் தனியே சமுத்திரத்தில் ஓட்டிவிட்டார்கள். காஞ்சலோ என்கிற நேபில்ஸ்நகரத்துப் பெரியமனிதன் ஒருவன் அவர்களுடைய பரிதாபத்தைப்பார்த்துக் கருணைகூர்ந்து அந்தப் படகில் கொஞ்சம் சோறும், நல்ல தண்ணீரும், உடுப்பும், தன் உயிரைவிடச் சிறந்ததென்று பிராஸ்பிரோ மதித்திருந்த சில புத்தகங்களும் போட்டனுப்பினான்.

அப்போது மிராந்தாவுக்கு மூன்றுவயதுகூட ஆகவில்லை. அந்த இளங்குழந்தையை எப்படிக் காப்பாற்றப்போகிறோமென்று பிராஸ்பிரோ ஏங்கினின்றான். ஆயினும் அந்தக்



குழந்தை அவனுக்கு ஒரு சங்கடமாயிருப்பதுபோக, அவனுடைய மனவருத்தத்தைப் போக்கி அவனுக்குத் தேற்றரவும் களிப்பும் உண்டாக்க ஒரு நல்ல வழியாயிற்று. அது எப்படியென்கிறீர்களோ? அந்தப் பெண் சிரிப்பும் விளையாட்டுமாய் அனைவர்க்கும் உற்சாகமுண்டாக்குகிற குழந்தையாயிருந்ததனால், அவர்கள் நடுக்கடலில் தனியே மிகவும் பயங்கரமான அலைகளிலே படகு கவிழ்ந்துபோவதுபோல் ஆடிஆடிக்கொண்டு போகிற சங்கடதசையைக் கண்டு பிராஸ்பிரோவுக்குத் துக்கம் உண்டாகும்போதெல்லாம், அந்தக் குழந்தையின் சிரிப்பும் விளையாட்டும் அவனுக்குச் சந்தோஷம் உண்டாகச்செய்தது. அந்தச் சிறுமியின் சிரிப்பைப் பார்க்கும்போதெல்லாம், இன்னும் கடவுள் கிருபை செய்து நம்மைக் காத்தருளுவார் என்கிற எண்ணம் அவன் மனதில் உண்டாகும். அவன் படித்த படிப்புக்கூட அவனுக்கு அந்த ஞானத்தை உண்டுபண்ணினதில்லை. இதைப் பற்றியே அவன் பின் ஒருகாலத்தில் அந்தப் பெண்ணையே பார்த்து நீ என்னைக் கஷ்டகாலத்தில் காப்பாற்றின குணவதியல்லவா என்று சொல்லும்படியாயிற்று.

இப்படி போம்போது கடைசியாய் அந்தப் படகு ஏதோ ஒரு தீவண்டை போய்க் கரைசேர்ந்தது. வெகுநாளைக்குமுன்னே அந்தத் தீவில் ஒரு சூனியக்காரி இருந்ததாகவும், பிராஸ்பிரோ அங்கே சென்றபோது அவள் இறந்துபோனதாகவும் சொல்லுகிறார்கள். அவன் போனபோது அந்தத் தீவில் இருந்தவன் அந்த மாயக்காரியின் மகன் ஒருவனே. அவனுக்குக் காலிபன் என்று பெயர். ராக்ஷதத்தன்மையும் மிருகத்தன்மையுமே அவனிடத்தில் அதிகமாகி, அவன் வெகுவாக ராக்ஷதனென்றே சொல்லத்தக்கவனாயிருந்தான். மேலும் அங்கே ஏரியல் என்று ஒரு தேவதை உண்டு. அந்த தேவதையை அவ்விடத்திலிருந்த சூனியக்காரி சூனியம்

வைத்து ஒரு மரப்பொந்தில் சிறைபாக்கி வைத்திருந்தாள். பிராஸ்பிரோ தன் மந்திரபலத்தால் அதைத் தெரிந்துகொண்டு அந்தத் தேவதையைச் சிறைநீக்கிவிட்டான். அந்தத் தேவதை வெகு சாமர்த்தியமுள்ளவன். தனக்கு வேண்டியபடியெல்லாம் உருவமெடுத்துக்கொள்ளுவான்; நன்றாய்ப் பாட்டுப்பாடுவான்; கவிகள் கட்டுவான்; இவ்வுலகத்திலுள்ள பல விசித்திரமான பொருள்களையும், அவற்றுள் நடக்கும் அற்புதமான மாறுபாடுகளையும் நன்றாய் அறிந்தவன்; வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்தோடத்தக்கவன்; வௌவால்களின் முதுகுமேல் ஏறிக்கொண்டு சவாரிசெய்பவன்; இப்படி அவன் பலவித விசித்திர சக்தியுடையவனாயிருந்தான்.

தன்னைச் சிறையிலிருந்து விடுவித்ததற்காக ஏரியல் பிராஸ்பிரோவினிடத்தில் அதிக நன்றியுள்ளவனாய், அவனிடத்தில் மிகவும் பிரீதிபாராட்டித் தன்னால் கூடியவளவு அவனுக்கு உண்மையாக உழைக்க ஆரம்பித்தான். காலிபன் என்னும் ராக்ஷதனைக்கூடப் பிராஸ்பிரோ தனக்குச் சேவகனாகவே வைத்துக்கொண்டிருந்தான். ஆயினும் ஏரியலைப்போல் அந்த ராக்ஷதனை நல்லதனத்தில் ஆளக்கூடவில்லை; அதட்டும் வெருட்டுமாயே அவனை அடக்கி ஆண்டுவந்தான்.

அந்தத் தீவிலே மிராந்தா என்கிற பெண் தன் தகப்பனும் ஏரியலும் ராக்ஷதனும் தவிர மற்றெவருமில்லாமல் அவர்களுடைய சம்ரக்ஷணையிலேயே வளர்ந்துவந்தாள். அவசியமாய்த் தெரியவேண்டிய விஷயங்களெல்லாவற்றையும் பிராஸ்பிரோ அந்தப் பெண்ணுக்குக் கற்பித்துவந்தான். அந்தப் பெண் புத்திகூர்மையும் சாமர்த்தியமும் உடையவளாயிருந்ததனால், மற்றவர்கள் வெகுநாள் வருத்தப்பட்டுப் பாடசாலைகளில் படித்து எவ்வளவு கற்றுக்கொள்வார்களோ, அவ்வளவு விஷயங்களை வெகு சீக்கிரத்திலே தெரிந்துகொண்டாள்.



அவர்கள் அந்தத் தீவில் அழகிய ஒரு தோப்பிலே சிறிய குடிசையொன்று கட்டிக்கொண்டு அதிலே வசித்திருந்தார்கள். காஞ்சலோ தயைசெய்து தன் படகில் எடுத்துப்போட்ட புத்தகங்களைக் கையிலே வைத்துக்கொண்டு, அந்தத் தோப்பிலே பிராஸ்பிரோ எப்போதும் அவைகளைப் படிப்பதே வேலையாயிருந்தான். அவனுக்கு ஆள்பட்டிருந்த காலிபன் என்னும் ராக்ஷதன் விறகு தண்ணீர் நெருப்பு முதலான பொருள்தேடிச் சோறு சமைப்பது முதலிய பணிவிடை செய்துவந்தான். குழந்தைப் பருவத்திலேயே மிராந்தாவினுடைய சிரிப்பும் சமத்காரமும் பிராஸ்பிரோவுக்கிருந்த துக்கங்களைப் போக்கிச் சந்தோஷமுண்டாக்கினவென்றால், தக்கவயது வந்தபிறகு அந்தப் பெண்ணுக்கு உண்டான நல்லபுத்தியும், விவேகமும், சாமர்த்தியமும், தகப்பனிடத்தில் அதிக ஆதரவும், அவன் கற்பித்துக்கொடுத்த விஷயங்களில் அதிக ஊக்கமும் உற்சாகமுமாகிய இவைகளெல்லாம், பிராஸ்பிரோ இவ்வுலகவாழ்க்கையில் வெறுப்புற்று நிராசையாய் உயிரை இழக்காதபடி அவனைக் காத்தனவென்பதற்கு நாம் ஆச்சரியப்படவேண்டுமோ?

மிராந்தா தன் சொந்த நன்மையை விசேஷமாய்க் கருதாமல் பிராணிகளிடத்தில் பிரீதியும் பரிதாபமுமாயிருப்பதைப் பார்க்கப்பார்க்க, இவ்வுலகத்தில் மானிடஜன்மம் எடுப்பதற்குப் பயன் எவ்விதத்திலாயினும் அவரவருடைய சுகத்தைத் தேடிக்கொள்வதுமாத்திரமே அல்லவென்கிற எண்ணம் பிராஸ்பிரோவின் மனதில் உதித்தது. தன் மனதுக்குமாத்திரமே சந்தோஷமுண்டாக்குகிற தன் படிப்பைவிட உலகத்திற்கெல்லாம் உபயோகமான மிராந்தாவின் பூததயை பச்சாத்தாபம் முதலிய குணங்கள் மிகவும் சிறந்தவையென்கிற எண்ணங்கூட அவன் மனதில் உண்டாயிருக்கலாம்.

படிப்புதவிர பிராஸ்பிரோவின் மனதுக்கு முன்போல ராஜ காரியம் முதலிய வியாபாரம் ஒன்றுமில்லை; அவனுடைய படிப்புக்குத் தடைசெய்வாரும் அவ்விடத்தில் ஒருவருமில்லை. அப்படி அவன் ஓயாமல் படித்தும் அவன் மனதுக்குமட்டும் சந்தோஷம் அதிகமாய் உண்டாகவில்லை. நம்மை அயலார் நேசிக்கவும் அயலாரை நாம் நேசிக்கவும் பலர்கூடி வாழாதவாழ்வு என்னவாழ்வென்று அவனுக்கு மனக்குறையே அதிகமாயிருந்தது.

இப்படியாக அவர்கள் பனிரண்டு வருஷகாலம் அந்தத் தீவிலே தனியாக வசித்துக்கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தம்மினத்தாரோடு கூடும்படியான நல்ல தருணம் ஒன்று வாய்த்தது. அதென்னவெனில், நேபில்ஸ் நகரத்தரசன் தன் மகளான கிளாரிபெல் என்பவளை தியூனிஸ் நகரத்தரசனுக்குக் கலியாணஞ் செய்துகொடுத்தான். நேபில்ஸ்நகரத்தரசன், அவன் பிள்ளைகளான பெர்திநாந்து சபாஸ்தியன் என்பவர்கள், பிராஸ்பிரோவின் சகோதரனான அந்தோனியோ, காஞ்சலோ, இவர்களெல்லாம் அந்தக் கலியாணத்திற்குப் போய்த் திரும்பிவருகையில், பிராஸ்பிரோவின் தீவண்டை வரும்போது ஒரு புசலடித்து, அவர்கள் ஏறிவந்த கப்பல் ஒரு பெரும்பாறையில் மோத, அது பிளந்துபோயிற்று. அத்தருணத்தில் ஏரியல் என்னும் பிசாசு நெருப்புபோல வடிவெடுத்து அந்தக் கப்பலைச் சூழ்ந்துகொண்டு அதைக் கொளுத்த ஆரம்பித்தது. அந்த அபாயத்தைப்பார்த்துப் பிராஸ்பிரோ, தனக்குத் தீங்குசெய்தவர்களுக்கும் நன்மைசெய்கிற நற்குணம் உடையவனாதலால் அவர்களிடத்தில் அன்புகூர்ந்து, அவர்கள் எல்லாரையும் பத்திரமாய்க் காப்பாற்றும்படிப் பிசாசுக்குக் கட்டளையிட, அப்படியே அது அவர்களுள் ஒருவர்கூடத் தப்பாமல் எல்லாரையும் சுகமாய்க் கரைகொண்டு சேர்த்தது.



அந்தக் கப்பல் நடுக்கடலிலே அல்லாடித் தவித்ததைப் பார்த்து மிராந்தா கோவென்று கதறி அழுதுகொண்டு தகப்பனண்டை ஓடிவந்து, ஐயா! அத்தனைபேரும் அநியாயமாய் மாண்டுபோகப் போகிறார்களே! அவர்களைக் காப்பாற்ற வழியொன்றும் இல்லையாவென்று கேட்க, அவன், குழந்தாய்! விசனப்படாதே; அவர்களைக் காப்பாற்றும்படி நான் முன்னமே திட்டஞ்செய்தாயிற்று; கண்ணீரைத் துடைத்துக்கொள் என்று சொல்லி, தான் பிறந்துவளர்ந்தது, ராஜாவானது, பின்பு தேசத்தினின்றும் துரத்தப்பட்டது முதலிய தன் பூர்வ சரித்திரங்களையெல்லாம் சொன்னான். தான் முன்னே செல்வமும் சீருமாய் வாழ்ந்ததொன்றும் அந்தப் பெண்ணுக்கு நினைவு வரவில்லை; ஆயினும் தன்னைப் பால் கொடுத்து வளர்த்த தாதிகளுடைய ஞாபகமட்டும் மறவாமல் அப்படியே இருந்தது. தன் சகோதரனும் நேபில்ஸ்நகரத்தரசனும் தனக்குச் செய்த பொல்லாங்குகளையெல்லாம் பிராஸ்பிரோ சொல்லக்கேட்டு, அந்தப் பெண் ஒருவன் மற்றொருவனுக்கு எப்படிப் பொல்லாங்கு செய்யத் துணிவானென்று ஆச்சரியப்பட்டாள்; அவள் தனக்குப் புத்தி தெரிந்த நாள்முதல் தன் தகப்பன்தவிர மற்றெந்த மனிதனையும் பார்த்ததில்லையாதலால், எல்லாரும் தன்னைப்போலவே கபடமற்று ஈவு இரக்கமுடையவர்களாய் இருப்பார்களென்பது அவள் உள்ளறக்கொண்டிருந்த கொள்கை.

இப்படியிருக்க நேபில்ஸ்நகரத்தரசனுடைய மகனான பெர்திநாந்து என்பவன் தனியே அலையினால் கரையோரத்தில் ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டுத் தன் தகப்பன் முதலானவர்களெல்லாம் கடலிலே மாண்டுபோனார்களென்றெண்ணிப் புலம்பிக்கொண்டிருக்கக்கண்டு, ஏரியல் அவனுக்கு நேராய் ஆகாயத்திலே போய்நின்று மதுரமாய்ப்பாட, அதைக்கேட்டுப் பெர்திநாந்து ஆச்சரியப்பட்டு அதன் வழியேபோகப்

புறப்பட்டான். அவனுடைய கண்ணுக்குத் தெரியாமல் ஆகாயத்திலேயே ஏரியல் அவனுக்கு வழிகாட்டிப் பாடிக்கொண்டு பிராஸ்பிரோவும் மிராந்தாவும் உட்கார்ந்திருந்த குடிசையண்டை வந்து நின்றது.

அந்தப் பிசாசு பாடின மதுரமான பாட்டைக் கேட்கவே பெர்தினந்துக்கு உடனே தகப்பன் நினைவுவந்து விசனம் அதிகமாயிற்று. அப்படிக் கண்ணும் கண்ணீருமாய் அவன் எதிரேவந்து நின்றதைக் கண்டு மிராந்தா இது என்ன பேயோ பிசாசோ என்று நினைத்தாளாயினும் அவன் படுகிற சங்கடங்களைப்பார்த்து மிகவும் பரிதாபப்பட்டாள். அவன் எதிரே வந்துநின்று தான் பட்டபாடுகளையெல்லாம் சொல்லக்கேட்டு, அவளுக்கு விசனம் பின்னும் அதிகமாயிற்று. நான் இனத்தாரையெல்லாம் இழந்துபோனேன்; இனி நான் அவர்களைக் காணப்போகிறதில்லையென்று நிராசைகொண்டு பெர்தினந்து, மிராந்தாவினுடைய நற்குணங்களைக் கண்டு அதிசயித்து அவளிடத்தில் அதிக ஆசைவைத்தான். இந்தக் கருத்தைப் பிராஸ்பிரோ குறிப்பாய் அறிந்துகொண்டு, நம்முடைய சகோதரனையும் நேபில்ஸ்நகரத்தரசனையும் சமாதானப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று தான் கொண்டிருக்கும் எண்ணத்திற்கு இது அனுகூலமானதுதானென்று, அதனால் மனம் உவந்தான். ஆயினும் பெர்தினந்து எத்தன்மையான மனிதனோ அதைப் பரீக்ஷித்தறிய வேண்டுமென்று, அவன் சொன்னதைத் தான் நம்பாமல் அந்தத் தீவை ஜெயித்துக்கொள்ளவந்திருக்கும் ஒரு தூதனாக நினைத்தவன்போலப் பாவித்து, அவனைத் தனக்கு வேலைக்காரனாகச் செய்துகொண்டான். அவன் ஆண்மை உடையவனானால் வெட்கப்படாமல் பொறுத்து வேலைசெய்வானென்பது பிராஸ்பிரோவின் கருத்து. அதனால் காலிபன் செய்யவேண்டிய வேலைகளைப் பெர்தினந்தே செய்யும்படி



திட்டஞ்செய்தான். அதைக்கண்டு பெர்தினந்து, உலகத்தில் உழைப்பில்லாமல் எந்தக்காரியந்தான் செய்யக்கூடும்? பிள்ளைகள் விளையாடுகிறார்களே; அது உழைப்பில்லாமல் ஆகின்றதா? பெருத்த லாபத்தைக்கோரிப் பலகாரியங்கள் செய்கிறார்களே; அவையெல்லாம் உழைப்பில்லாமல் உண்டாகின்றனவா? ஆதலால் உயர்வும் இழிவும் வேலைசெய்கிறவனைப்பற்றியதே ஒழிய வேலையைப்பற்றியதன்று எனத் தன் மனதில் தானே நினைத்து மனதைத் திடப்படுத்திக்கொண்டு தைரியமாயே அவன் இட்டவேலைகளைச் செய்ய ஆரம்பித்தான்.

தன் தகப்பன் பெர்தினந்தை அவ்வளவு கொடுமையாய் நடத்துவதைப்பார்த்து மிராந்தாவுக்கு மிகவும் துக்கமுண்டாயிற்று. அவன் படுகிற கஷ்டத்தைப்பார்த்து அவளுக்கு மனம் தாளவில்லை. அதனால் அவன் வேலைசெய்துவிட்டுத் திரும்பி வரும்போது ஒருநாள் அவள் அவனண்டைபோய், கொஞ்சநேரம் இளைப்பாறி இருக்கும்படி வேண்டினாள். அதைக்கேட்டு அவன் நான் அப்படி ஒருபோதும் செய்யமாட்டேன்; எஜமானன் இட்டிருக்கிற வேலையைப் பொழுது போவதற்குள் நான் முடித்துத் தீரவேண்டுமென, அவள்; நீர் சற்றே உட்காரும்; அந்த வேலையை நான் செய்கிறேன் என்றாள். அதற்கு அவன், பெண்ணே! உன்னை வேலைசெய்ய விட்டு நான் சோம்பேறியாய் உட்கார்ந்திருப்பதைவிட உயிரை விடலாமே; ஆனால் உன் பெயரைமட்டும் எனக்குச் சொல், உன் நற்குணத்திற்காக நான் அதைக் காலையிலும் மாலையிலும் எடுத்துரைத்துத் துதிக்கிறேன் என்றான்.

இது இப்படியிருக்க நேபில்ஸ் நகரத்தரசன், அவன் சகோதரனான சபாஸ்தியன், மிலன்நகரத்துத் திருட்டரசனான அந்தோனியோ முதலியவர்களெல்லாரும் மற்றோரிடத்தில் கரைசேர்ந்து, பெர்தினந்து கடலில் மூழ்கிப்போயினு

னென்று நிச்சயித்துத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அங்கே நேபில்ஸ்நகரத்தரசன் தூங்குகிற தருணம்பார்த்து, நாம் இந்த ராஜாவையும் காஞ்சலோவையும் பக்குவமாய்க் கொன்றுவிடுவோம்; நீயே நேபில்ஸ்நகரத்துக்கு அரசனாகிவிடலாமென்று சொல்லி அந்தோனியோ சபாஸ்தியனோடு ஒரு துராலோசனைசெய்ய ஆரம்பித்தான். அவர்கள் அந்த எண்ணத்தை நிறைவேற்றப்போகிற தருணத்தில் ஏரியல் என்னும் பிசாசு காஞ்சலோவின் காதண்டைபோய்ப் பாடி அவனை எழுப்பிவிட்டு, அந்தக் கெடுதி நடக்கவொட்டாமல் செய்தது. ஏரியல் செய்தகாரியம் இவ்வளவேயோ? கண்ணுக்குத் தெரியாமலே அந்தக் கொடியவர்களுடைய எதிரிலே போய்நின்று, கொடும்பாவிகளே! நீங்கள் பிராஸ்பிரோவுக்குச் செய்த பொல்லாங்கினாலல்லவோ உங்களுக்கு இப்படிப்பட்ட சங்கடங்களெல்லாம் நேர்ந்தன! இவ்வளவோடு போகவில்லை, இன்னும் பற்பல கெடுதிகள் உண்டாகக் காத்திருக்கின்றன; உடனே பிராஸ்பிரோவின் காலிலே போய் விழுந்து அவனை மன்னிப்புக் கேட்டுக்கொண்டீர்களானால், இவ்வளவோடு நீங்கள் தப்புவீர்கள் என்றது. அதைக் கேட்கவே தாம் செய்த கொடுமைக்காக அவர்களுக்கு மிகவும் அநுதாபமுண்டாயிற்று; நாம் என்ன புத்தியீனமான காரியஞ் செய்தோமென்று அவர்கள் மனமழிந்தார்கள். ஏரியல் அவர்களை அங்கிருந்து அழைத்துக்கொண்டுபோய்ப் பிராஸ்பிரோவின் தோப்பண்டை சேர்த்தது. பிராஸ்பிரோ அவர்களைப்பார்த்துக் கடலில் மாண்டுபோகாமல் தப்பினீர்களேயென்று சந்தோஷமாய் எல்லாரையும் வரவழைத்தான். கடலுக்கு இரையாய்ப் போகட்டுமென்று நாம் படகேற்றித் துரத்திவிட்ட மனிதன் இவன்தானென்று தெரிந்துகொண்டு அவர்களும் தங்களை மன்னிக்கும்படி அவன் கால்களில் விழுந்தார்கள். அவனும் அவர்கள் செய்த பிழையைப்



பொறுத்து அவர்களைத் தன் குடிசைக்குள் அழைத்துக்கொண்டுபோனான். அப்போதுதான் பெர்திநந்து தன் வேலையையெல்லாம் செய்து முடித்துவிட்டுவந்து மிராந்தாவோடு சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தான். இருவரும் இறந்துபோனதாய் ஒருவர்க்கொருவர் எண்ணி விசனப்பட்டுக்கொண்டிருந்த தகப்பனும் பிள்ளையும் ஒன்றாய்க் கூடினபோது அவர்களுக்கு உண்டான சந்தோஷத்தை என்னென்று சொல்லலாம்! யாவரும் ஒன்றாய்க்கூடி அன்றையதினத்தை அங்கேயே ஆனந்தமாய்ப் போக்கினார்கள்.

இதற்குள்ளே அந்தப் பிசாசு உடைந்துபோன கப்பலை நன்றாய்ச் செப்பனிட்டுப் பிரயாணத்திற்குச் சித்தமாகச் செய்தது. பின்பு பிராஸ்பிரோ அந்தப் பிசாசுக்குத் தன் இஷ்டப்படிபோகச் செலவுகொடுத்துவிட்டுத் தன் சகோதரன் முதலியவர்களெல்லாரையும் கப்பலில் ஏற்றிக்கொண்டு நேபில்ஸ்நகரம் போய்ச்சேர்ந்தான். அங்கே பெர்திநந்துக்கும் மிராந்தாவுக்கும் கலியாணம் நடந்தது. நான் எத்தனையோ அழகிகளைப் பார்த்தேன்; இவளைப்போல நற்குணமுள்ள பெண்மணியை நான் எங்கும் கண்டதில்லையென்று சொல்லிப் பெர்திநந்து மிகவும் சந்தோஷித்தான். பின்பு பிராஸ்பிரோவும் மிலனுக்கு அரசனாகி உயர்வாக வாழ்ந்திருந்தான்.

# இஜபெல் கதை.

ஆஸ்திரியாதேசத்து ராஜதானியான வியனாநகரத்தில் சந்நியாசிப்பெண்கள் மடத்திலே முற்காலத்தில் இஜபெல் என்று ஒரு பெண்மணியிருந்தாள். அக்கன்னி மறுநாள் சந்நியாசம் தரித்துக்கொள்ளவேண்டுமென நிச்சயித்திருந்த ஒருநாள் அந்த மடத்தலைவியோடு பேசிக்கொண்டிருக்கையில், லூஷியோ என்னும் ஒருவன் அம்மடத்துவாயிலில் வந்து யாருள்ளே என்று கூவினான். அதுகேட்டு அங்கிருந்த இஜபெல் வந்து அவனைக் கண்டு யாதுசெய்தி என்று கேட்க, அவன், மகளே, நீ மேன்மைபெற்று வாழ்வாய்; உன் முகக்களையினாலேயே உன் மகிமை விளங்குகின்றது. துர்ப்பாக்கியனாய்த் தவிக்கின்ற கலாதி என்பவனுடைய சகோதரியான இஜபெல் இங்கு வந்திருப்பதாய்க் கேள்வி; அப்பெண்மணியைக் காணவேண்டும் என, அவள் ஏன் கலாதியைத் துர்ப்பாக்கியனென்கிறீர்? நானே அவர் சகோதரியான இஜபெல் என்றாள். அதுகேட்டு லூஷியோ, ஓ பெருமைபொருந்திய பெண்ணரசி, உன் சகோதரர் என் மூலமாய் உன்னை வாழ்த்துகிறார். இப்பொழுது அவர் சிறைப்பட்டிருக்கிறார் என, இஜபெல், ஐயோ! இந்தத் துன்பம் அவர்க்கு நேர்ந்தகாரணம் என்னவென்று கேட்டதற்கு, லூஷியோ சொன்னதாவது:—



நியாயப்படி பகிரங்கமாய்க் கன்னிகைகளைக் கலியாணம் செய்துகொள்ளாமல் எவரும் ஏகாந்தமாய்க் கைப்பற்றக்கூடாதென்றும், அப்படி யாராவது கைப்பற்றினால் அவர்கள் உடனே கொலைக்கு ஆளாகவேண்டுமென்றும் இந்தச் சட்டம் இத்தேசத்தில் நெடுநாளாக ஏற்பட்டிருந்தது. ஆயினும் இத்தேசத்தரசன் குடிகளிடத்தில் மிகவும் காருணியமுடையவனாயிருந்ததனால், எவ்வகைக் குற்றவாளிகளையும் தண்டிக்காமல், கேவலம் அச்சமுறுத்திக்கொண்டு வந்தான். அதனால் இத்தேசத்துக் குடிகள் நாளளவிலே நீதிகளை உபேக்ஷை செய்யத் துவக்கினார்கள். வாலிபர்கள் கிரமப்படி கலியாணம் செய்துகொள்வதைவிட்டுத் தம் மனம்போனபடி தமக்கு இஷ்டமான கன்னிகைகளைக் கைப்பற்றத்தொடங்கினார்கள். இதுகாரணமாகப் பெண்களின் பெற்றோர்கள் பலர் நாள்தோறும் அரசனிடம் வந்து முறையிடப் புகுந்தார்கள்.

அதுகேட்டு அரசன் தமது குடிகள் கெட்டுப்போகிறார்களேயென்று மிகவும் துக்கித்தான். ஆயினும் அவர்களைக் கண்டிக்க அவனுக்கு மனம் வரவில்லை. இத்தனைகாலமாக நாட்டுக்கு நல்லரசனெனப் பெயரெடுத்து இப்பொழுது நி[illegible]ரென்று தண்டனைவிதிக்கப் புகுந்தால் கொடியராஜனெனக் குடிகள் குறைகூறுவார்களென்று பயந்து அவ்வரசன், சிலநாள் தனக்குப் பதில் மற்றெவனையாவது அரசனாக நியமித்துவிட்டுத் தான் துரைத்தனத்தினின்றும் நீங்கியிருக்கவேண்டுமென நிச்சயித்து, அப்படியே அப்பட்டணத்தில் மிகக் கண்டிப்பும் நியாயமும் உள்ளவனெனப் பெயர்பெற்ற அஞ்சலோ என்பவனை அவ்வாட்சிக்கு அதிகாரியாக ஏற்படுத்தினான். இச்செய்தி எங்கும் பிரசித்தமாய்த் தெரிந்த விஷயமே. அஞ்சலோ அரசாட்சியைக் கைக்கொண்டவுடனே, கலாதி யாரோ ஒரு மகளை மோசமாய் அவன்

பெற்றோர்களுக்குத் தெரியாமல் நிர்ப்பந்தித்தாரென்று பிரியாதுவந்தது. அஞ்சலோ உடனே அவனைப் பிடித்துச் சிறைசெய்யக் கட்டளையிட்டான். சிறைசெய்ததுமன்றியில் முற்காலத்துச் சட்டப்படி நாளையதினம் அவனைக் கொலை செய்யும்படியாகவும் தீர்ப்புசெய்திருக்கிறான். அவனை இந்தத்தடவைமட்டும் மன்னிக்கும்படி மந்திரி முதலானவர்கள் கூட வருந்தி வேண்டியும் அஞ்சலோ, இந்தச் சட்டம் புலங்களில் பறவைகளை வெருட்டுவதற்கிருக்கின்ற புல்லுருவளவாயுமில்லையே! இதுமுதல் இந்தச் சட்டத்தின் கருத்து எவர்க்கும் வெளியாகவேண்டும்; இவன் உயிரிழக்கவேண்டுவதுதானென்றான் என உரைத்தான்.

அதுகேட்டு இஜபெல், ஆ, என் சகோதரன் கதி இவ்வண்ணமா முடிந்தது! என் அத்தைமகளான ஜூலியட் என்பவளையே அவர் கைப்பற்றியிருப்பாரென்று காண்கிறது என, லூஷியோ, ஆம், அம்மகள்தான். இத்தருணத்தில் நீ மனம் பெரிதுபண்ணி இவ்வரசனிடம் போய் அந்தத் தீர்ப்பை மாற்றும்படி அவனை வேண்டிக்கொண்டாலல்லது உன் சகோதரர் தப்புவதற்கு வேறுவழியில்லை. இச்செய்தியை உன்னோடு சொல்லுவதற்காகவே கலாதி என்னை உன்னிடம் அனுப்பினார். இதுதான் நான் இங்குவந்த காரியம் என்றான்.

அதுகேட்டு இஜபெல், நான் என்னசெய்யமாட்டேன், இவ்வரசன் மனதில் சுவாமி புகுந்துகொண்டு கிருபைபண்ணவேண்டும் என்று சொல்லி, உடனே அரசன் அரண்மனைக்குச் சென்று அஞ்சலோவின் கால்களில் விழுந்து, தான் வந்தகாரியத்தை வெளிப்படையாகச் சொல்லிக் கல்லும் கரைந்துருகத்தக்க தன் கனிமொழிகளால் லகுவும் பிருவுமாய்த் தன் சகோதரனை மன்னிக்கும்படி பலவாறு வேண்டினாள். என்னவேண்டியும் அஞ்சலோ அதைக் கேளாமல், பெண்ணே இனி அதற்குச் செய்யத்தக்க பரிகாரம் யாதொ



ன்றுமில்லை; அவனுக்குக் கொலைத்தீர்ப்பாகிவிட்டது. அதற்காக நீ வீணே என்மேல் குறைகூறாதே; உன் சகோதரருக்குக் கொலைத்தீர்ப்புசெய்தது நானன்று, இத்தேசத்துச் சட்டமே. என் உற்றுறவினனாயினும், சகோதரனாயினும், வயிற்றிற்பிறந்த பிள்ளையேயாயினும் எவரானாலும் இந்த நியாயம் இப்படியேதான் நடக்கும். இவன் நாளையதினம் இறக்கவேண்டுவதொழிய வேறில்லை என்றான். அதுகேட்டு இஜபெல், நாளையதினமேயா? இவ்வளவு துரிதமா? வேண்டாம், வேண்டாம்; இந்தத்தடவை அவர் உயிரைத் தப்பவிடுங்கள். பிரபுக்களே, தாங்களே யோசித்துப்பார்க்கலாம். என் சகோதரர் செய்த பிழையை இதுவரையில் பலர் செய்தார்கள்; ஒருவரும் தண்டனை அடையவில்லை. நீங்கள்தாம் முதலில் இந்தத் தண்டனை விதிக்கப் புகுந்தீர்கள்; என் சகோதரரே முதலில் அதற்கு ஆளாக ஏற்பட்டார். தாங்களே சற்றுத் தீரத்தெளிய ஆய்ந்தோய்ந்துரைக்க வேண்டும். என் சகோதரர் செய்த குற்றத்தைப்பற்றித் தங்களுக்கு எவ்வண்ணந்தோற்றுகிறது என்றிப்படி அவன் மனம் கனியும்படி பலபேச்சுகள்பேச, கடைசியில் அவனும் மனங்கலங்கி, நல்லது, நீ நாளையதினம் காலையில் வா, போ என்றான். அதுகேட்டு இஜபெல் தான் நல்வார்த்தையால் அவன் பிடிவாதத்தை மாற்றிவிட்டதாக நினைத்துக் களிப்படைந்து, "தங்கள் கவுரத்தை என்றும் அழியாமல் கடவுள் காக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டுச் சென்றாள். அவ்வளவுகாலம் எதற்கும் மனஞ்சலியாதிருந்த அஞ்சலோ நற்குண நற்செய்கையுள்ள இப்பெண்மணியின் பேச்சுத்திறமையாலும் வடிவழகினாலும் மனங்கலங்கி இரவெல்லாம் அவளே சிந்தையாயிருந்தான்.

தேசயாத்திரைபோய் வருவதாய்ச் சொல்லி அதிகாரத்தை அயலானிடம் ஒப்புவித்த அரசன் அவ்வூரைவிட்டு அப்புறம்

போகவில்லை. ஒருவர்க்குந்தெரியாமல் ஏகாந்தமாய் அப் பட்டணத்திலேயே நின்று புது அரசனுடைய அரசாட்சித் திறத்தைக் கண்டறியவேண்டுமெனக் கருதி அவ் வுபாயஞ்செய்ததேயன்றி வேறல்ல. கலாதி சிறைப்பட்ட செய்தி கேள்விப்பட்டவுடனே அவ்வரசன் சந்நியாசி வேஷம்பூண்டு சிறைச்சாலையில் அவனிடஞ்சென்று, உயி ரிழக்குங்காலம் கிட்டியதாதலின் கடவுளைத் தியானித்து நன்மையாகப் பொழுதுபோக்கு என்று அவனுக்கு நற்புத்தி போதித்துக்கொண்டிருந்தான்.

அப்படியிருக்க இஜபெல் தன் சகோதரனைக் கண்டுபேசும் படி அவன் இருந்த காவலிடத்திற்கு வந்தாள். அங்கிருந்த அரசன் அவளைக் கண்டு நீ வந்தகாரியம் யாதென்று வினவ, அவள் என் சகோதரருடன் ஏகாந்தமாய் ஒரு வார்த்தை சொல்லவேண்டுமென்றாள். அப்படியே செய் என்று அரசன் அதற்கு இடங்கொடுத்து, என்னபேசுகிறார்களோ கேட்க வேண்டுமென்று அண்டையில் ஒருபுறமாய்த் தான் ஒளித்து நின்றான்.

இஜபெலைக் கண்டவுடனே கலாதி நீ போனகாரியம் என்ன வாயிற்று என்று கேட்க, அவள், நாளைக்காலையில் இறக்க நீ சித்தமாகவேண்டுமென்றாள். இதற்குப் பரிகாரம் வேறொ ன்றுமில்லையோ எனக் கலாதி கேட்டதற்கு இஜபெல், நாம் மானத்தை இழப்பதே இதற்குப் பரிகாரமாகின்றது; மானம் போவதைப்பார்க்க உயிரைவிடுவதே உத்தமமல்லவா என, கலாதி அதென்னசெய்தி? அதன் வரலாற்றைத் தெளியச் சொல் என்றான்.

அதற்கு இஜபெல் சொல்லியதாவது: — அந்த வரலாற் றைச்சொல்ல எனக்கே வெட்கமாகின்றது; நீ கேட்டுக் கொண்டபடியே நான் அஞ்சலோவினிடஞ்சென்று அவரை வேண்டினேன்; நாளைக் காலையில் வாவென்றார். திரும்பி



வரச்சொல்லவே அவர் நமக்கு நன்மைசெய்யக் கருதியி ருக்கிறாரென்றெண்ணி நான் அப்படியே அவரிடம் சென் றேன். சென்றபோது அவர் சொன்னசொல்லை நினைத்தால் இப்பொழுதும் என்னுடம்பு நடுங்குகின்றது: இவ்விராத்திரி எவர் க்குந் தெரியாமல் நீ என்னிடம் வருவாயானால் உன் சகோ தரனைத் தப்பவிடுகிறேன் என்றார். அதைக்கேட்க மனம் பொறாமல் அச்செய்தியை உன்னிடம் தெரிவிக்கவந்தேன். உன் உயிரைக் காப்பதற்காக என் உயிரைக் கொடுக்கும்படி கேட்டிருப்பாரானால் அந்தக்ஷணமே நான் அதற்கு உடன் பட்டிருப்பேன். மானங்கெட்டு வாழ்வதைவிட மரிப்பதே மேலல்லவா? என்றாள். அதுகேட்டுக் கலாதி, பெண்ணே நீ அப்படிச் சொல்வது சரியன்று. எனக்குப் பிராணனை விட பயமாயிருக்கின்றது. நீ எப்படியாவது என் உயிரை யிருத்தவேண்டும். ஒருவன் பிழைப்பதற்காகப் பாவம் செய்தாலும் அது புண்ணியமாகுமேயன்றிப் பாவமாகா தென, அதைக் கேட்டவுடனே இஜபெல் அதிக கோபங் கொண்டு, அடபாவி, அடபாவி, வெட்கங்கெட்டவனே, மானமழிந்தவனே! நீ மிக்க மானஸ்தனென நான் இதுவ ரையில் நினைத்திருந்தேன்; உன் கொடுந்தன்மையை இப் பொழுதுதான் கண்டேன். உனக்கு ஆபத்துவந்திருந்தா லும் அத்தனையும் அறுக்க உடன்பட்டு உன் உடன்பிறந்தா ளுடைய மானத்தை நிலைநாட்டவேண்டியிருக்க, அற்ப மான உயிரில் ஆசைகொண்டு என்னபேசத் துணிந்தாய்! என்று இவ்வண்ணம் சொல்லிப்புலம்ப, இதற்குப் பதில் உரைப்பது என்னவென்று கலாதி ஆலோசிக்கின்றான். இவற்றையெல்லாம் உற்றுக் கேட்டிருந்த அரசன் அந்தக் காலத்தில் சரேலென்று அவர்கள் எதிரில் வந்து கலாதியைப் பார்த்து, நீங்கள் ஏன் இப்படி வீணே மனவருத்தப்படுகி றீர்கள்? அஞ்சலோ இவளைப்பார்த்து இவ்வண்ணம் பேசி

பது இவளுடைய நற்குணத்தின் நிலையைப் பரிசோதிப்
பதற்காகவேயன்றி அதைக் கெடுப்பதற்காகவன்று. நாதற்
கும் மனஞ்சலியாத சத்தியவதியாய் இவள் அவ்விரிவன்
டினதை மறுத்தமையால் அவர்க்கு அதிக ஆக்கமாயி
ருக்குமேயன்றி வேறில்லை. உன் குற்றத்தை அவர் ஒரு
போதும் மன்னிக்கமாட்டார்; சீக்கிரமே கொலைக்கட்டளை
யனுப்புவார். அதற்குள் கடவுளைப் போற்றி உயிரைவிடச்
சித்தமாகக்கடவாய் என்றுசொல்ல, அவன் தன் மதிக்
குறைவை நினைத்துப் பச்சாத்தாபமடைந்து, சகோதரி
யையும் மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு வெட்கமும்
துக்கமும் அதிகரித்தவனாகி ஒருபுறமாய்ப் போயினன்.

பிறகு தனியேநின்ற இஜபெலைப்பார்த்துச் சந்நியாசிவே
ஷந்தரித்த அரசன், அவளுடைய நற்குணத்தைக் கண்டு
மிகவும் அதிசயித்து, "பெண்ணே, உன்னைப்படைத்த கட
வுள் உனக்கு வடிவழகைமாத்திரம் அமைக்கவில்லை; இருத
யத்தையும் அதிக அழகாக அமைத்திருக்கிறார்!" என அவள்,
ஐயா, என்னைத் துதிசெய்வது அப்புறமாகட்டும், அத்தனை
நல்லவராயிருந்த இத்தேசத்தரசருடைய அரசாட்சியை
அழிக்க அஞ்சலோ வந்துசேர்ந்தது விசனத்துக்கு இடமா
கின்றது. அவ்வரசர் வந்தபோதல்லவோ நான் என் குறை
களைச் சொல்லித் துக்கந்தீர்வேன் என்றாள். அவளை யாரோ
ஒரு சந்நியாசியென்று அவள் எண்ணியிருந்தாளேயன்றி
மாறுவேஷம் பூண்ட மன்னவனென்று சிறிதும் சந்தேகிக்க
வில்லை.

இஜபெல் சொன்னதைக் கேட்டு அரசன், பெண்ணே, நீ
குறைகூறுகிறபடி அவ்வளவு அநியாயம்நடவாதென்று நான்
நினைக்கிறேன். அல்லாமல் அதுவே உண்மையாயிருப்பி
னும், அஞ்சலோ எளிதில் இக்குற்றத்தினின்றும் தப்பித்துக்
கொள்ள உபாயந்தேடிக்கொள்வாராதலின், பிறகு அ னக்



குற்றவாளியென்று நிரூபிக்க உன்னால் ஆகாது. ஆகலின்
நான் சொல்வதைக் கவனித்துக்கேட்டு அதன்படி நடப்பா
யானால் எல்லாம் நன்மையாகவே முடியும். அதனால் நெடு
நாளாக வருந்திக்கொண்டிருக்கின்ற ஒரு மேராஜனுக்கும் மகோப
காரம் செய்ததாகும், உன் சகோதரனையும் விடுவித்ததாகும்,
உன் மானமும் நிலைநிற்கும், தேசாந்தரம்போயிருக்கும் மன்
னவனும் திரும்பிவந்தபோது அதைக் கேட்பானால் மிக்க
மனமுவக்கும்படியாகும் என, இஜபெல், தீயவழியன்றி நல்
வழியில் எதைச்செய்யும்படித் தாங்கள் நியமித்தாலும் நான்
செய்யச் சித்தமாயிருக்கிறேன் என்றாள்.

அதற்கு அரசன் சொல்லியதாவது:—சத்தியத்தைப் பார்க்
கப் பெரும்பாதை எவர்க்கும் வேறில்லை. நீ இப்பொழுதே
அஞ்சலோவினிடம் சென்று உன் சகோதரனை விடுவிப்பதற்
காக அவர் கேட்டுக்கொண்டபடியே சம்மதிப்பதாகச் சொ
ல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தெரிந்துகொண்டு
வா. மெரியானாவென ஒரு சீமாட்டி இருக்கிறாள். அவளைப்
பற்றி நீ கேள்விப்பட்டதுண்டா? அவள் அஞ்சலோவைக்
கலியாணம் செய்துகொள்ளும்படி வந்தவள். ஆயினும் அவள்
கொண்டுவந்த சீதனங்கள் காணாமல்போயினவென்று அஞ்
சலோ அவளை விவாகம்செய்துகொள்ளாமல் மறுத்துவிட்
டார். அவள் அல்லும் பகலும் அநாதையாக வருந்தித்
தவிக்கிறாள்; உனக்குப் பதில் அம்மகளை அனுப்பிவிடலாம்.
அதனால் உனக்கு ஏதாவது இழுக்கு உண்டாகுமென்று
எண்ணுகிறாயோ? இல்லை. அஞ்சலோ அவளுக்குக் கண
வனே! ஆகலின் அவ்விருவரையும் கூட்டுவிப்பது நன்மை
யாகுமேயன்றித் தீமையாகாது. உடனே சென்று திட்டம்
செய்துகொண்டுவா என்று சொல்லி அனுப்பினன். அவ்வு
பாயத்தைக் கேட்டு மிகவும் மனமுவந்து இஜபெல் அப்ப
டியே என்று சொல்லிச் சென்றாள்.

அரசன் சொன்ன உபாயப்படியே எல்லாம் சரியாக நடந்தேறின. கலாதியைக் கொல்லாமல் தப்பவிடுவதாக அஞ்சலோ இஜபெலுக்கு அன்று உறுதிமொழி கொடுத்திருந்தானாயினும், எவர்க்கும் தெரியாமல் இராத்திரி அவனைக்கொன்று விடியனேரத்தில் அவன் தலையைத் தன்னிடம் கொண்டுவரவேண்டுமெனச் சிறைச்சாலைக்குச் சாசனம் அனுப்பிவிட்டான். அத்தருணத்தில் சந்நியாசிவேஷம்பூண்ட அரசன் அவ்விடத்தில் இராதிருப்பானாயின் அந்தப் பேதைமனிதன் பிராணனை இழந்தேயிருப்பான். அஞ்சலோ எந்தவேளை என்னசெய்வானோவெனப் பயந்து அரசன் சிறைச்சாலையில் வந்து காத்திருந்தான். கொல்லப்போகிற தருணத்தில் அந்தச் சந்நியாசி கொலைத்தீர்ப்பு நிறைவேற்றுகிறவனைக் கண்டு, நீர் இவனைக் கொல்லாதிருந்தால் உமக்கு மிகப் புண்ணியமாகும். நேற்றுக் காலையில் இச்சிறைச்சாலையில் இறந்த மனிதனுடைய தலையை வெட்டிக்கொண்டுபோய்க் காட்டி அஞ்சலோவை ஏமாற்றிவிடும் என்றுசொல்லி, தான் சொன்னதைத் தள்ளாமல் அதன்படி நடக்குமாறு தன்னிடத்தில் அவனுக்கு ஒரு பெருமை தோன்றும்படி, ராஜமுத்திரையோடு கூடிய ராஜாவின் சொந்தக் கையெழுத்தான ஓர் கடிதத்தை அவனுக்குக் காட்டினான். அதைப் பார்த்தவுடனே அவ்வதிகாரி, தேசாந்தரம் போயிருக்கும் அரசனிடமிருந்து இச்சந்நியாசிக்கு ஏதோ ரகசியமாய் ஒரு உத்தரவு வந்திருக்கிறதென்று எண்ணி அவன் சொன்னபடியே நடத்திக் கலாதியைக் கொல்லாமல் விட்டுவிட்டான்.

அந்தச் சந்நியாசி சொன்ன சங்கேதப்படியே இஜபெல் எல்லாக்காரியங்களையும் நடத்தி உடனே சிறைச்சாலைக்கு வந்து அங்கிருந்த சந்நியாசியைக் கண்டு, என் சகோதரனை மன்னிக்கும்படி அஞ்சலோ அனுமதிபத்திரிகை அனுப்பினாரா என்றுகேட்க, அவன், ஐயோ! அவர் தலை அப்பொ



ழுதே வெட்டுண்டு அஞ்சலோவினிடம்போய்ச் சேர்ந்ததே என்றான். அந்தச் சொல் காதில் விழுந்தவுடனே இஜபெல் விசனத்தால் மனங்கலங்கி நிற்க, அச்சந்நியாசி அவளைச் சமாதானப்படுத்தி, மகளே, நீ விசனப்படவேண்டாம்; [illegible] போனது போயிற்று, இனி நாம் இதற்காகச் சிந்திப்பதென்ன? நாளையதினம் அரசன் இவ்விடம்வருவதாகச் செய்திவந்திருக்கிறது. அவர் வந்தவுடனே அஞ்சலோ செய்த அநியாயத்தைப்பற்றி அவரிடத்தில் நீ பிரியாதுசெய்; உனக்கு விரோதமாகத் தீர்ப்பாகுமோ என்னவோவென நீ சிறிதும் அஞ்சவேண்டாம் என்றுசொல்லி அதற்கு வேண்டிய உபாயங்கள் யாவையும் அவளுக்குக் கற்பித்துக்கொடுத்து, மெரியானாவினிடத்திற்கும் சென்று அவளுக்கும் ஏற்றவண்ணம் பிரியாதுசெய்யும்படி போதனைசெய்தான். பின்பு தன் தேசயாத்திரைக்கு யாதோ விக்கினம் நேரிட்டதனால், மறுநாளே தான் திரும்பிவருவதாயும், நகரத்துள் தான் நுழைவதற்கு முன்னமே தன் அதிகாரத்தைத் தன்னிடம் ஒப்புவிக்கவேண்டுமெனவும், யார்யார்க்கு என்னென்னகுறை நேரிட்டிருக்கிறதோ அவற்றை அவர்கள் அப்பொழுதே தன்னிடத்தில் வந்து சொல்லிக்கொள்ளும்படிப் பிரசித்தப்படுத்தவேண்டுமெனவும் அஞ்சலோவுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினான்.

மறுநாள் காலையில் அவ்வரசன் அப்படியே தன் சந்நியாசிவேஷத்தைக் களைந்து ராஜவேஷத்தோடு நகரத்துள் பிரவேசித்தான். அஞ்சலோவும் எதிர்கொண்டுவந்து அரசாட்சியை அவனிடம் ஒப்புவித்தான். உடனே இஜபெல் அவனிடம் ஓடிவந்து, தன் சகோதரன் செய்த அக்கிரமத்திற்காக அஞ்சலோ அவனுக்குக் கொலைத்தீர்ப்பு செய்ததாகவும், அதை மன்னிக்கும்படி தான் வேண்டிக்கொண்டதற்கு, தான் அவர்க்கு வசப்பட்டாலல்லது அவனைவிடச் சம்மதிக்

காதது கண்டு எப்படியாவது சகோதரன் பிழைத்தாற்போது மென்று தான் அதற்கு உடன்பட்டதாகவும், கடைசியில், உன் [illegible]ன்றும் வியாதிநீங்காமற் போனதை [illegible], அவ்வுறுதிமொழியையும் தள்ளி அவர் கொலைசெய்துவிட்டதாகவும் இவை முதலாய் அஞ்சலோ தன் திறத்திற்காட்டிய அநியாயங்கள் யாவையும் எடுத்துரைத்துப் பிரியாலாசெய்தாள். அதைக்கேட்ட அரசன் தான் அதை நம்பாதவன் போலத் தலையசைத்துநிற்க, அஞ்சலோ, சகோதரன் செத்துப்போன சோகத்தால் இவள் ஏதோ மதிகெட்டுப் பிதற்றுகிறாளேயன்றி வேறில்லை என்றான். இதற்குள் மெரியானா ஓடிவந்து அரசன் பாதங்களில் வீழ்ந்து, ஐயா, இஜபெல் சொல்வது முற்றும் பிழை; இவள் என்றிரவில் அஞ்சலோவுடன் சேர்ந்திருந்ததாகச் சொல்லுகிறாளோ, அன்றிரவில் நானே இவருடன் சேர்ந்திருந்தேன். என் உரை பொய் என்றால் இவ்விடத்திலேயே என்மேல் கோரிகட்டிவிடலாம்; உண்மையானால் எனக்கு அபயம்கொடுத்து எழுப்புங்கள் என்றாள். இருவரும் அதற்குச் சாக்ஷியாய் அந்தச் சந்நியாசியையே வரித்தார்கள். இஜபெலின் உண்மையும், அஞ்சலோவின் அக்கிரமமும் பலபேர் முன்னே பின்னும் பிரசித்தமாகட்டுமென்று அரசன் அப்படியே அதற்கு உடன்பட்டு, மந்திரி முதலியோர்களுடைய முன்னிலையில் அஞ்சலோவே அதை விசாரித்துத் தீர்க்கட்டுமென்று விட்டு அப்புறம் சென்றான்.

சிறிதுநேரத்தில் அவ்வரசன் சந்நியாசி வேஷத்தோடு சாக்ஷியாய் அவர்கள் எதிரே வந்துநின்றான். அவனைக்கண்டு மந்திரி, இவ்வாறு இப்பெண்களைத் தூண்டி அஞ்சலோவின் மேல் குற்றம் சார்த்தும்படி செய்தது நீர்தானோவென்றுகேட்க, சந்நியாசி, நான் அரசனோடு பேசவேண்டுமேயன்றி உம்மோடு பேசவேண்டிய அவசியமில்லை. அரசன் எங்கே?



இவ்வண்ணம் அஞ்சலோ தன் வியவகாரத்தைத் தானே தீர்த்துக்கொள்ளும்படி இவர் அதீனத்திலேயே விட்டோடிப்போவதும் அரசர்க்கு ஏற்குமோ? இதென்ன அநியாய துரைத்தனம் என்றிப்படி ராஜாங்கத்துக்கு விரோதமாய், பல பேச்சுகள் பேசினான். [illegible]மா வென்று அனைவரும் அவனைப்பார்த்து நின்றார்கள். மந்திரி, ராஜாங்கத்தை எதிர்த்துப்பேசும் இவனைக் காவல்செய்யுங்களென்றான். உடனே எல்லோரும் அதிசயித்துநிற்க அவன் ஆண்டி வேஷத்தைவாங்கி அரசனாக மாறினான். அது கண்டவுடனே இஜபெல், ஐயா நான் தங்கள் உண்மையை அறியாமல் பிரபுக்களுக்குப் பல வருத்தங்கள் உண்டாக்கினேன். மன்னிக்கவேண்டுமென்றாள். பின்னும் அவளைச் சோதிக்கும்படி அரசன் உண்மையை வெளியிடாமல், உன் சகோதரன் கொலையுண்டதைத் தடுக்காமல் விட்டதற்காக நீயே என்னை மன்னிக்கவேண்டுமென்றான். தன் நடத்தைகளையெல்லாம் நேராக அரசனே கண்காணித்திருந்தானெனத் தெரிந்து அஞ்சலோ, ஐயா நான் பெருங்குற்றவாளியானேன்; நெடுநேரம் என்னைப் பலபேர்முன் பரிபவப்படுத்தாமல் உடனே தண்டனை விதிக்கவேண்டுமென்றான். ஆயினும் அஞ்சலோவைக் கொலைசெய்யாமல் தனக்கு மங்கிலியப்பிச்சை கொடுக்கும்படி மெரியானா வேண்டிக்கொண்டதுமாத்திரமேயன்றி, இஜபெலும் அவனை மன்னித்தால் தன் சகோதரனெழுந்து வந்ததுபோலென்றிப்படிப் பலவாறு வேண்டினாள். அதுகேட்டு அரசன் அதற்கொன்றும் பதிலுரையாமல், சிறைச்சாலையில் குற்றுயிராய்ச் சந்தேகமுற்றிருக்கும் கலாதியை வரவழைத்து இஜபெலுக்குக் காட்டி, பெண்ணே, உன் நற்குணத்தின் பெருமைக்காக நான் இவருடைய பிராணனைக் காப்பாற்றினேன். நீ எனக்கு மனைவியாகி இவ்வரசாட்சிக்கு ஏற்றமுண்டாக்கவேண்டும்

என்றான். அவளும் ஆநந்தமாய் அதை அங்கீகரித்தாள். பின்பு அரசன், பெரியாளுவைக் கலியாணஞ்செய்துகொள்ளும்படி சொல்லி அஞ்சலோலையையும் உயிரோடுவிட்டான்; [illegible]தி ஜூலியத்தைக் கலியாணஞ்செய்துகொள்ளும்படி ஏற்[illegible]தான்; தானும் இஸபெல் என்னும் பெண்மணியைக் கலியாணஞ்செய்துகொண்டு அவளுடன் நீதிமுறை தவறாமல் அரசசெலுத்திவந்தான். பிறகு அத்தேசத்தில் அவ்விதமான அநியாயம் ஒன்றும் நடவாமல் குடிகளும் கிரமப்படி கலியாணஞ்செய்துகொண்டு சுகமாயிருந்தார்கள்.

C. K. S. Press, Vepery, Madras, 1881.

சென்னைப் பாடசாலைப் புத்தகச்சங்கத்தார் விற்பனைசெய்யும்

## புத்தகங்களின் பட்டி.

நூதன விவசாயம் ... 1
இந்துதேசத்துச் சிற்ப சித்திர கிதநூல் ... 1
ஜார்ஜி ஸ்டீவின்சன் என்னும் இருப்புப்பாதை சிற்பசாஸ்திரி சரித்திரசங்கிரகம் ... 1
நீராவியும், நீராவி இயந்திரமும் ... 1
ஒரு கொல்லன் பிள்ளை கதை ... 1
கொலம்பஸ் சரித்திரம் ... 1
லார்ட் க்ளைவ் சரித்திரம் ... 2
இளமையிற் கல் அல்லது அஞ்சுதிருடர் கதை ... 2
பாலவியாபாரிகள் கதை ... 2
பூகம்பம், எரிமலை இவைகளின் வரலாறு ... 3
பௌதிக பூகோளம்.—தமிழ் மொழிபெயர்ப்பு படங்களுடன் ... 4
பூமிசாஸ்திரபடங்கள்.—10 அடங்கிய புத்தகம் ... 12

காளிதாசன் முதலிய மஹாகவிகள் செய்த
ஸமஸ்கிருத நாடகக் கதைகள்.

மாளவிகாக்கினிமித்திரம் ... 1
விக்கிரமோர்வசி ... [illegible]
ரத்நாவலி ... [illegible]
உத்தரராம சரித்திரம் ... [illegible]
சாகுந்தலம் ... [illegible]

ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்.

மக்பெத் ... 1
ஹாம்லெத் ... 1
வெனிஸ் வர்த்தகன் ... 1
லீயர் மகாராஜன் கதை ... 1
ரோமியோ ஜூலியத்து என்பவர்களுடைய கதை ... 1
ஒதெல்லோ டெஸ்டிமோனா இவர்களுடைய கதை ... 1
அத்தேனே நகரத்து தைமன் சரித்திரம் ... 1
ஸிம்பலீன் மகாராஜன் கதை ... 1
பிரசண்டமாருதம் ... 1
நகைபிழை நாடகம் ...

11600

## அறிவிப்பு.

# ஜநவிநோதிநி.

இது

நீதியும் விநோதமுமான விஷயங்களைக் கொண்டிருக்கிற

## மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

விலை அணா 2;

வருஷத்துக்குக் கையொப்பம் ரூபாய் 1½

வெளிநாட்டிலுள்ளோர் (சென்னையில் தங்கம்பாக்கம் பழைய காலீஜில்) இந்தச் சங்கத்தாரின் காரியதரிசி பேருக்குத் தபால்முத்திரையாகவாவது, மணி ஆர்டராகவாவது, இன்னும் வேறு மூலாந்தரமாயாவது ரூ. 1-14-0 மாத்திரம் அனுப்பினால், இந்தச் சித்திரவிநோதத்தோடு கூடிய பத்திரிகை பன்னிரண்டையும் [illegible] அவரவர்களிருக்கும் ஸ்தானத்திற்கு [illegible]. சென்னபட்டணத்திலிருக்கும் கையொப்பக்காரர் வருஷம் ஒன்றுக்கு 1½ ரூபாய்தான் கொடுக்கவேண்டியது.

புதிதான கையொப்பக்காரர்கள் [illegible] வருஷத்துச் சந்தாவை முழுதும் அனுப்பினால், முற்பட்ட மாதங்களின் பத்திரிகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

☞ சென்னை ராஜதானியைப்பற்றிய சங்கிரகமும் அந்த ஜில்லாவின் விவரணமும் சேர்த்துத் தனிச்சஞ்சிகைகளாகப் பதிப்பிக்கப்பட்ட இரு புஸ்தகங்கள் சித்தமாயிருக்கின்றன.